

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 223 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 11 – ஞாயிற்றுக்கிழமை 24 மார்ச் 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 223 : Thiruvalluvar Year - 2055 - Panguni 11 - Sunday 24 March 2024 - Chennai 16 Pages ₹ 5.00


**இந்திய நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளைவிடச் சொந்த நாட்டு விவசாயிகள்தான் பிரதமர் மோடியின் கண்ணுக்கு எதிரிகளாகத் தெரிகிறார்கள்!**

# இனியும் மோடி ஆட்சி தொடர்வது, தமிழ்நாட்டுக்கு அழிவு!

## கொரடாச்சேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முழக்கம்!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், தஞ்சாவூர் தொகுதி வேட்பாளர் ச.முரசொலி அவர்களையும், நாகப்பட்டினம் தொகுதி வேட்பாளர் வை.செல்வராஜ் அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள் எஸ்.இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், செல்வராஜ், பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், துரை சந்திரசேகரன், அண்ணா துரை, கௌதமன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.

**சென்னை, மார்ச் 24–**

**இந்திய நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளைவிடச் சொந்த நாட்டு விவசாயிகள்தான் பிரதமர் மோடியின் கண்ணுக்கு எதிரிகளாகத் தெரிகிறார்கள் என்றும், இனியும் மோடி ஆட்சி தொடர்வது, தமிழ்நாட்டுக்கு அழிவு என்றும் கொரடாச்சேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணி மக்களவை தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் தஞ்சை வேட்பாளர் ச.முரசொலி, நாகை வேட்பாளர் வை. செல்வராஜ் ஆகியோருக்கு வாக்கு சேகரித்து நடைபெற்ற மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் கழகத்தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

**கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உரை வருமாறு:**

"நானும் டெல்டாகாரன்" என்ற பெருமையோடு, சொந்த மண்ணுக்கு வந்திருக்கிறேன்! தலைவர் கலைஞர் பிறந்த திருக்குவளை - வளர்ந்த திருவாரூர் - வென்ற தஞ்சாவூர் - உள்ளடங்கிய நாடாளுமன்றத் தொகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம் தொகுதிகளுக்கு வந்திருக்கிறேன்.

உங்களில் ஒருவனாக - உங்களிடம் உரிமையோடு வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களின் மகனாக வாக்கு கேட்டு வந்திருக்கிறேன்.

இந்தியாவின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை எழுத கூடியிருக்கும், இந்த எழுச்சிமிகு பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் பங்கெடுத்துள்ள அனைவருக்கும் வணக்கம்.

என் உரையைத் தொடங்குவதற்கு முன்பு, இந்தப் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தை பிரம்மாண்டமாக மாநாடுபோல் ஏற்பாடு செய்திருக்கும் ஆற்றல்மிகு பொறுப்பு அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள் என அனைவருக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்கள், வாழ்த்துகள்.

### முத்தமிழறிஞரின் மூத்த பிள்ளை முரசொலி!

இந்திய நாடாளுமன்றத்திற்கு, ஏப்ரல் 19–ஆம் தேதி முதல்கட்டமாகத் தேர்தல் நடைபெற இருக்கிறது. தஞ்சை தொகுதி வாக்காளர்கள் - நம்முடைய வெற்றி வேட்பாளர் முரசொலிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும். முரசொலியைப் படித்து வளர்ந்தவன் நான். இன்றைக்கு முரசொலி என்ற பெயர் வைத்திருக்கும், வேட்பாளருக்கு வாக்கு கேட்டு வந்திருக்கிறேன். முரசொலி தலைவரின் மூத்த பிள்ளை! அந்த மூத்த பிள்ளைக்கு வாக்கு கேட்க, உங்கள் வீட்டுப் பிள்ளையான இந்த ஸ்டாலின் வந்திருக்கிறேன்.

> **நேற்று** *அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள்! ஆட்சிப் பொறுப்பு கையில் வைத்திருந்தபோது, மக்களுக்கு ஒன்றுமே செய்யாத பழனிசாமி - ஒன்றிய அரசில் பா.ஜ.க.-வுடன் சேர்ந்து, தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யாமல், துரோகங்களை மட்டுமே செய்த பழனிசாமி - அவர் பங்கிற்கு ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.*

ஒன்றியச் செயலாளராகப் பணியாற்றும் தம்பி முரசொலி, நாடாளுமன்றத்திற்கு செல்வது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

அதே மகிழ்ச்சியோடுதான், பகத்சிங் போன்ற விடுதலை வீரர்கள் நிறைந்த கம்யூனிஸ்ட் தோழர்களை ஒருங்கிணைக்கும் தோழமையின் இலக்கணம், அண்ணன் முத்தரசன் அவர்களின் ஆதரவு பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரான தோழர் வை.செல்வராஜ் அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று நாகை தொகுதி வாக்காளர்களைக் கேட்க வந்திருக்கிறேன்.

### ஜனநாயகத்தை முடிவு செய்யும் தேர்தல்!

நடைபெற இருக்கும் தேர்தல் மிகமிக முக்கியமான தேர்தல். ஏதோ பா.ஜ.க., ஆட்சியை வீழ்த்துவதற்கான தேர்தலாக மட்டும் யாரும் இதை நினைத்துவிடக் கூடாது. இந்தியாவில் இனி ஜனநாயகம் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கான தேர்தல் இது!

இந்தியாவின் மாநிலங்களை - மக்களாட்சியை, மதச்சார்பின்மையை, பன்முகத்தன்மையை, ஒடுக்கப்பட்ட மக்களை, ஏழை-எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பா.ஜ.க., இன்னொரு முறை ஆட்சிக்கு வரக் கூடாது. பா.ஜ.க., மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பே இருக்காது.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் நாளைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-

| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| 25.03.2024 (திங்கட்கிழமை) - | கன்னியாகுமரி, திருநெல்வேலி |



# தஞ்சையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் - நடைபயிற்சியின்போது வாக்கு சேகரித்த காட்சி!



தஞ்சாவூர் கீழ ராஜவீதியில் நேற்று (23.3.2024) காலை நடைபயிற்சியின் போது, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களுடன் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் செல்ஃபி எடுத்துக்கொண்டனர். உடன் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், தஞ்சாவூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) தஞ்சாவூர் மக்களவை தொகுதி கழக வேட்பாளர் ச.முரசொலி அவர்களுக்கு ஆதரவாக தஞ்சாவூர் காமராஜர் காய்கறி சந்தைப் பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்கள்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) தஞ்சாவூர் மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் ச.முரசொலிக்கு ஆதரவாக தஞ்சாவூர் காமராஜர் காய்கறி சந்தை பகுதியில் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்கச் சென்றபோது அங்கிருந்த தேனீர் கடையில் தேனீர் அருந்தினார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.3.2024) காலை நடைப்பயிற்சியின் போது, தஞ்சாவூர் அன்னை சத்திய விளையாட்டு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சிறுவர், சிறுமிகளை சந்தித்து உற்சாகப்படுத்தினார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி பேருந்து நிலையம் அருகில் மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் அறிமுகக் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது. இதில் கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். இதில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய செயலாளர்கள் சி.எல்.ஞானசேகரன், மத்திய பி.வெங்கடேசன், கோ.குமார பாண்டியன், பகுதி செயலாளர்கள் ஆர்.கே. ஐயப்பன், சி.எம். தங்கதுரை, என்.கஜேந்திரன், பேரூராட்சி செயலாளர்கள் எம்.ஜாகீர் உசேன், பி.அருள்நாதன், பெருமாள் ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மக்களவைத் தேர்தல் வர இருக்கும் ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெறும் நிலையில், திருச்செந்தூர், ஒட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் அடங்கிய தூத்துக்குடி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இந்தியா கூட்டணியின் செயல்வீரர்கள் கூட்டம், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருகே உள்ள தண்டுபத்து பகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், இந்தியா கூட்டணியின் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். உடன் அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, ஊர்வசி அமிர்தராஜ், ஜெகன் பெரியசாமி, ஏ.பி.சி.வி.சண்முகம், ஆறுமுகம், கரும்பன், டிலைட்டா, ரமேஷ், மன்னர் பாதுல் அஸ்ஹப், கமல் அலெக்ஸ், சுரேஷ்தேவர், கயத்தார் ஹஸ்மத், அற்புதராஜ், குணசீலன், காயல் முருகேசன், மாரிச்செல்வம், ஊர்க்காவலன், பை.மூ.ராமஜெயம், எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்!.



# காவிரி உரிமை மீட்கப் பாடுபட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்!

## கொரடாச்சேரியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி!

நாட்டில் ஜனநாயக அமைப்பு முறையே இருக்காது. நாடாளுமன்ற நடைமுறையே இருக்காது. இவ்வளவு ஏன், மாநிலங்களே இருக்காது. முதலில் நாம் எல்லாரும் இதை உணர வேண்டும். கண்ணுக்கு முன்னால் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் சிதைக்கப்பட்டதைப் பார்த்தோம்.

**ஒவ்வொரு குடும்பத்திலும் வெளிச்சம் பாய்ச்சும் விடியலை நம்முடைய திராவிட மாடல் அரசு தருகிறது!**

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தை இரண்டாகப் பிரித்தார்கள். அங்கு இருக்கின்ற மக்களின் விருப்பத்திற்கு மாறாக யூனியன் பிரதேசமாக மாற்றினார்கள். அரசியல் கட்சித் தலைவர்களையே, வீட்டுச் சிறையில் அடைத்தார்கள். முன்னாள் முதலமைச்சர்களும் இதற்குத் தப்பவில்லை. அங்கு சட்டமன்றம் கிடையாது. காஷ்மீருக்கு ஐந்து ஆண்டுகளாக தேர்தல் கிடையாது. இப்போதுகூட, ஜம்மு-காஷ்மீருக்குத் தேர்தல் அறிவிக்கவில்லை. இதுதான் பா.ஜ.க. பாணி, சர்வாதிகாரம்!

இந்த நிலைமை நாளை தமிழ்நாட்டிற்கும் ஏற்படலாம். ஏன், பா.ஜ.க., மீண்டும் வெற்றி பெற்றால் இதே நிலைதான் அனைத்து மாநிலங்களுக்கும் ஏற்படும். இது ஏதோ எதிர்க்கட்சி மாநிலங்களுக்கு மட்டுமல்ல. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கே இந்த ஆபத்து வரத்தான் செய்யும். 2014-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பாசிச பா.ஜ.க., இந்தியாவை எல்லா வகையிலும், மிகமோசமான வகையில் பாழ்படுத்திவிட்டது. அதுமட்டுமல்ல, இந்தியாவில் இருந்த எல்லாக் கட்டமைப்புகளையும் சிதைத்துவிட்டார்கள்.

இன்றைக்கு தினமணி நாளேட்டில் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார்கள்... அந்தத் தலையங்கத்தில், தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களைப் பிரச்சாரத்தில் ஈடுபட முடியாத அளவுக்கு கைது செய்து கொண்டிருப்பது ஒன்றிய ஆளுங்கட்சியின் உள்நோக்கத்துடன் கூடிய நடவடிக்கை.

### பா.ஜ.க. ஆடும் ஆட்டத்துக்கு பெயர்தான் அழுகுணி ஆட்டம்!

பல்வேறு வழக்குகளில் இருந்து விடுபட பா.ஜ.க.வுக்கு கட்சி மாறியவர்கள் மேல் சட்டம் தன் கடமையைச் செய்ய மறுப்பதற்குக் காரணம் என்ன?" என்று அடுக்கடுக்காக பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள்.

இந்தத் தலையங்கத்துக்கு அவர்கள் வைத்திருக்கும் தலைப்பு என்ன தெரியுமா? "அழுகுணி ஆட்டம்!" எந்தவிதமான குற்ற உணர்ச்சியும் இல்லாமல், ஜனநாயகத்துக்கு விரோதமான அத்தனை செயல்களையும் செய்துவிட்டு, பா.ஜ.க. ஆடும் ஆட்டத்துக்குப் பெயர்தான், அழுகுணி ஆட்டம்!

தன் கையில் கிடைத்த அதிகாரத்தைப் பிரதமர் நரேந்திர மோடி தவறாக பயன்படுத்தி, எதிர்க்கட்சிகளை அழிக்க முயல்வது மட்டுமல்ல, நாட்டையே நாசம் செய்துவிட்டார். இனியும் மோடி ஆட்சி தொடர்வது, தமிழ்நாட்டுக்கு அழிவு! இந்தியாவுக்கும் நல்லதல்ல. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நம்முடைய "திராவிட மாடல்" ஆட்சி மக்கள் பணிகளை எல்லாம் எந்த தொய்வில்லாமல் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

உதாரணத்திற்கு, ஒன்று சொல்கிறேன். எனக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தார்கள் சைதாப்பேட்டையை சேர்ந்த ஒரு தாய்மார், "எனக்கு 58 வயது ஆனது, இதுவரைக்கும் யாருக்கும் கடிதம் எழுதியது இல்லை, என் வாழ்க்கையில் முதல் கடிதம் இது! நிறைய வருடமாக திருவண்ணாமலையில் இருக்கும் நிலத்துக்கு பட்டா வாங்க முடியாமல் தவித்தேன். முதல்வரின் முகவரிக்கு மனு அனுப்பிய 15 நாட்களில் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல், பட்டா கிடைத்துவிட்டது" என்று நன்றி சொல்லி எழுதியிருக்கிறார்கள்!

இப்படி, எத்தனையோ நல்ல திட்டங்களை நாம் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்... அதெல்லாம் இந்தியாவுக்கே எடுத்துக்காட்டான திட்டங்கள்! சிலவற்றை பற்றி மட்டும் சொல்ல வேண்டும் என்றால்,

தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு கோடியே 15 லட்சம் குடும்பத் தலைவிகளுக்கு, மாதா மாதம் 1000 ரூபாய் வழங்கும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

தமிழ்நாடு முழுவதும் 16 இலட்சம் குழந்தைகள் பசியில்லாமல் பாடம் படிக்க, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்விக்கு வரும், உங்கள் மகள்களுக்கு, மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்!

இன்னும் கூடிய விரைவில் ஆண் மாணவர்களுக்கும் மாதம் 1000 ரூபாய் வழங்க இருக்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம்!

வேலைக்குச் செல்லும் பெண்களின் சுமையைக் குறைத்து, அவர்கள் மாதம் தொள்ளாயிரம் ரூபாய் வரை சேமிக்க உதவியாக இருக்கும், விடியல் பயணத் திட்டம்!

### சொல்லாத திட்டங்களையும் செய்து கொண்டு வருகிறோம்!

26 இலட்சம் இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்ற, நான் முதல்வன் திட்டம்!

இதில், தேர்தல் அறிக்கையில் சொல்லிய வாக்குறுதிகளை மட்டுமல்ல, சொல்லாத பல திட்டங்களையும் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாகத்தான், சொந்தமாக வீட்டுமனை இல்லாதவர்களுக்கு, இலவச வீட்டுமனையும் வழங்கி, வீடு கட்டுவதற்கான தொகையை அவர்களின் வங்கிக் கணக்கிற்கே செலுத்தும் 'கலைஞரின் கனவு இல்லம்' என்ற திட்டத்தை இந்த பட்ஜெட்டில் அறிமுகப்படுத்தி இருக்கிறோம்.

இந்தத் திட்டத்தில் அதிகமாக பயன்பெறப்போவது திருவாரூர் மற்றும் நாகை மாவட்ட மக்கள்தான்! இவ்வாறு, ஒவ்வொரு குடும்பத்தில் இருப்பவர்களின் வாழ்க்கையிலும், வெளிச்சம் பாய்ச்சும் விடியலைத்தான் நம்முடைய "திராவிட மாடல்" அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வளவு கடினமான நிதி நிலைமையிலேயே நம்மால் இவ்வளவு நல்லது செய்ய முடிகிறது என்றால், நம்முடைய கூட்டணி ஆட்சி ஒன்றியத்தில் வந்தால், இன்னும் என்னென்ன திட்டங்களைச் செய்வோம் என்று தேர்தல் அறிக்கை வெளியிட்டுச் சொல்லி இருக்கிறோம்.

சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாகச் சொல்கிறேன். இந்தியா முழுவதும் இருக்கும் விவசாயிகள், கூட்டுறவு அமைப்புகளிலும், வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் - வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

**பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு பச்சை துரோகம் செய்தவர்தான் பழனிச்சாமி!**

பெட்ரோல் - டீசல், கேஸ் சிலிண்டர் விலை குறைக்கப்படும்.

### தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்கள்!

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100-ல் இருந்து, 150 நாட்களாகவும், ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்.

வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லை என்று சொல்லி விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்.

ஈழத் தமிழர்களுக்கும், சிறுபான்மையின மக்களுக்கும் எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டம் ரத்து செய்யப்படும்.

பயிர்க் காப்பீட்டுக்கு உழவர்கள் செலுத்த வேண்டிய பங்குத்தொகையை ஒன்றிய அரசே செலுத்தும்.

காவிரி - தாமிரபரணி - வைகை ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டம் அறிவிக்கப்படும்.

ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், அலுவலகங்களில் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுவது உறுதிசெய்யப்படும்.

> *இந்தியாவின் மாநிலங்களை - மக்களாட்சியை, மதச்சார்பின்மையை, பன்முகத்தன்மையை, ஒடுக்கப்பட்ட மக்களை, ஏழை-எளிய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றால், பா.ஜ.க., இன்னொரு முறை ஆட்சிக்கு வரக் கூடாது. பா.ஜ.க., மீண்டும் ஆட்சிக்கு வந்தால், இந்தியா என்ற கூட்டாட்சி அமைப்பே இருக்காது.*
>
> *நாட்டில் ஜனநாயக அமைப்பு முறையே இருக்காது. நாடாளுமன்ற நடைமுறையே இருக்காது. இவ்வளவு ஏன், மாநிலங்களே இருக்காது. முதலில் நாம் எல்லாரும் இதை உணர வேண்டும்.*

வேளாண் விளைபொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவு + 50 விழுக்காடு என்பதை வலியுறுத்தி, விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்யப்படும்.

மாவட்ட அளவில் பெண்கள் மட்டுமே நிர்வகிக்கும் கொள்முதல் மற்றும் விற்பனைச் சந்தைகள் அமைக்கப்படும்.

பட்டுக்கோட்டை - மன்னார்குடி, பட்டுக்கோட்டை - தஞ்சை இடையே புதிய இரயில் பாதைகள் அமைக்கப்படும்.

திருவாரூரில் இருந்து மதுரை, திருச்செந்தூர், பழனி ஆகிய இடங்களுக்கு இரயில் சேவைகள் ஏற்படுத்தப்படும்.

திருவாரூர் - சென்னைக்கு இடையே, பகல்நேர இரயில் சேவை ஏற்படுத்தப்படும்.

பட்டுக்கோட்டை இரயில் வழித்தடத்தில் கம்பன் எக்ஸ்பிரஸ் இரயில் மீண்டும் இயக்கப்படும்.

திருவாரூரில் தேசிய வேளாண் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்.

நாகைப் பகுதியில் சரக்குப் பெட்டகத் துறைமுகம் அமைக்க ஆவன செய்யப்படும்.

மீனவர்களுக்கு வாழ்வாதார உதவித்தொகையாக இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் நாட்களில் நாளொன்றுக்கு 500 ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும்.

இவ்வாறு இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்ததும், ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் என்ன செய்யப்போகிறோம் - தமிழ்நாட்டுக்கு என்ன செய்யப்போகிறோம் - என்று நான் வெளியிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை எல்லோரும் பார்த்திருப்பீர்கள்.

### அளித்த வாக்குறுதிகளில் பெரும்பாலும் நிறைவேற்றம்!

தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும், "சொல்வதைத்தான் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம்!" இதுதான் வரலாறு! சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு கொடுத்த வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை செய்துகாட்டியிருப்பவன்தான், இந்த "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!"

நேற்று அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள்! ஆட்சிப் பொறுப்பு கையில் வைத்திருந்தபோது, மக்களுக்கு ஒன்றுமே செய்யாத பழனிசாமி - ஒன்றிய அரசில் பா.ஜ.க.-வுடன் சேர்ந்து, தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யாமல், துரோகங்களை மட்டுமே செய்த பழனிசாமி - அவர் பங்கிற்கு ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அது தேர்தல் அறிக்கை அல்ல; பழனிசாமியின் பம்மாத்து அறிக்கை! அவரிடம் அதிகாரம் இருந்தபோது, ஒன்றிய அரசிடம் இருந்து உருப்படியாக எதையாவது பெற்றுத் தந்தாரா? பா.ஜ.க.-வின் பாதம் தாங்கியாக, உதவாக்கரையாக இருந்த பழனிசாமி, இப்போது என்ன சொல்கிறார் தெரியுமா?

"ஆளுநரை நியமிக்கும்போது, முதலமைச்சரின் ஆலோசனை பெற்று நியமனம் செய்ய வேண்டும்" என்று தி.மு.க. சொன்னதையே ஜெராக்ஸ் எடுத்திருக்கிறார்.

நான் கேட்கிறேன், பழனிசாமி அவர்களே... தி.மு.க. அரசுக்குக் குடைச்சல் கொடுத்துக்கொண்டே இருக்கிறாரே ஆளுநர்... அவரைக் கண்டித்து ஒருநாளாவது ஒரு அறிக்கையாவது விட்டிருக்கிறீர்களா? இல்லையே!

அ.தி.மு.க. ஆட்சியில், ஆளுநர் ஆய்வுக்குச் செல்கிறேன் என்று புறப்பட்டபோது, அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது தி.மு.க.!

### ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றம் சென்றோம்!

தொல்லை தருவதையே தன்னுடைய அன்றாடப் பணியாக வைத்திருக்கும் ஆளுநருக்கு எதிராக இப்போதும் உச்சநீதிமன்றம் வரைக்கும் சென்று போராடுகிறது தி.மு.க.!

கை கட்டி - வாய் மூடி - முதுகு வளைந்து - பாதம் தாங்கும் பழனிசாமி அவர்களே...

**திருவாரூரில் தேசிய வேளாண் ஆராய்ச்சி மையம் நாகையில் சரக்கு பெட்டகம் துறைமுகம்!**

உங்களுக்கு வீரவசனங்கள் தேவைதானா? மோடி அரசு கொண்டு வந்த குடியுரிமை திருத்தச் சட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் சேர்க்கப்படவில்லை; அந்தச் சட்டத்தை ஆதரித்து நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. ஓட்டு போட்டதால்தான் அந்தச் சட்டமே இன்றைக்கு அமலுக்கு வந்திருக்கிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் வரக் காரணமாக இருந்துவிட்டு, 'இலங்கை தமிழர்களுக்கான இரட்டைக் குடியுரிமை கொண்டு வருவோம்' - என்று சொல்வதற்குப் பெயர் என்ன? பித்தலாட்டம்தானே!

அடுத்து ஒன்று சொல்கிறார்... "மதுரையில் நிறுவப்பட இருக்கும் எய்ம்ஸ் மருத்துவமனையை உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர துரித நடவடிக்கை எடுக்கப்படுமாம்!" - பழனிசாமி சொல்கிறார். ஆகா என்ன நாடகம் இது ஆகா என்ன நாடகம் இது!

பழனிசாமி அவர்களே... 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் எய்ம்ஸ் திறப்பு விழாவில் மோடி பட்டன் அழுத்தியபோது பக்கத்தில் உட்கார்ந்து கை தட்டினீர்களே... அதற்குப் பிறகு எய்ம்ஸ் அமைக்காமல் ஏன் இழுத்தடிக்கிறீர்கள் என்று ஒரு முறையாவது ஒன்றிய அரசின் கதவைத் தட்டியிருப்பீர்களா?

இவ்வளவு ஆண்டுகளாக இது எதையுமே செய்யாமல் இப்போது வந்து நீங்கள் போடும் இந்த பகல் வேஷம் பா.ஜ.க.-வுக்கான பசப்பு நாடகம்தான் என்று மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்!

இங்கு இவர் இப்படி என்றால், ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 2014-ஆம் ஆண்டில் மோடி கொடுத்த வாக்குறுதிகள் எதையாவது நிறைவேற்றினாரா? இல்லை!

### மோடியின் வாக்குறுதிகள் என்னாயிற்று? நிறைவேற்றப்பட்டதா?

கருப்புப் பணத்தை மீட்பேன், மீட்டு வந்து 15 இலட்சம் ரூபாய் வரை இந்தியர்களுக்குத் தருவேன் என்றார். தந்தாரா? 15 இலட்சம் வேண்டாம், 15 ஆயிரமாவது தந்தாரா? 15 ரூபாயாவது தந்தாரா? இல்லை!

இதைக் கேட்டால், உள்துறை அமைச்சர் பேட்டியில் சொல்கிறார். அது, 'சும்மா தேர்தலுக்காக கூறினோம்' என்று சொல்லி முடித்துவிட்டார்.

அடுத்து, ஒன்று கூறினார்கள்... ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவோம் என்று கூறினார்கள். வேலைவாய்ப்பை உருவாக்கினார்களா? இல்லையே!

படித்த இளைஞர்கள் 'பக்கோடா' விற்கலாம் என்று பிரதமர் பேசுகிறார்.

அடுத்து, விவசாயிகளுக்கு முக்கியமாக ஒன்று கூறினார்!

உழவர்களின் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவேன் என்று கூறினார். ஆனதா? இல்லை!

மூன்று வேளாண் சட்டங்களைக் கொண்டு வந்து உழவர்களின் வயிற்றில் அடித்தார்கள். இதெல்லாம் கூறியபோது, பாதம்தாங்கி பழனிசாமி என்ன கூறினார்? "விவசாயிகள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். நான் அவர்களுடன் விவாதம் நடத்தத் தயார்" என்று கூறினார்.

'நானும் ஒரு விவசாயி' என்று பச்சைத் துண்டைப் போட்டுக்கொண்டு, பச்சைத் துரோகம் செய்தவர்தான் பழனிசாமி!

மூன்று வேளாண் சட்டத்துக்கு எதிராக ஒன்றரை ஆண்டு காலம் உழவர்கள் தலைநகர் டெல்லிக்கு வந்து போராடினார்கள். வெயிலிலும், கடும் குளிரிலும் படுத்திருந்த உழவர்கள் ஏராளமான பேர் பலியானார்கள். அவர்களை எல்லா வகையிலும் சித்திரவதை செய்தது பா.ஜ.க. அரசு.

இது எதற்கும் அஞ்சாமல், பின்வாங்காமல் அவர்கள் நின்றதைப் பார்த்துதான் மூன்று வேளாண் சட்டங்களை இறுதியில் பா.ஜ.க. வாபஸ் வாங்கியது.

அப்போது ஒன்றிய பா.ஜ.க. அரசு உழவர்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியது. ஆனால், அது எதையும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நிறைவேற்றவில்லை.

அதனால் மீண்டும் டெல்லியில் உழவர்கள் போராட்டத்தைத் தொடங்கிவிட்டார்கள். டெல்லிக்குள் அவர்கள் நுழைந்துவிடுவார்களோ என்று பயந்து இரும்பு முள்வேலி, சாலைகளில் ஆணிப் படுக்கை அமைத்திருக்கிறது பா.ஜ.க. அரசு.

### பாகிஸ்தான் பார்டரை விட டெல்லியில் மோசமான சூழல்!

பாகிஸ்தான் பார்டரை விட, மோசமான சூழலை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். இதுவரை நான்கு உழவர்கள் இறந்துவிட்டார்கள்.

இந்திய நாட்டுக்குள் ஆக்கிரமிப்பு செய்யும் நாடுகளைவிடச் சொந்த நாட்டு விவசாயிகள்தான் பிரதமர் மோடியின் கண்ணுக்கு எதிரிகளாகத் தெரிகிறார்கள்.

ஏழைத் தாயின் மகன் என்று சொல்லிக்கொள்ளும் பிரதமர் மோடி ஆட்சியில் விவசாயிகள் நிலைமை இதுதான்.

தமிழ்நாட்டு உழவர்களையாவது நிம்மதியாக இருக்க விட்டாரா பிரதமர் மோடி? அதுவும் இல்லை.

காவிரி பிரச்சினையில் பா.ஜ.க.-வும் - அ.தி.மு.க.-வும் செய்த துரோகங்களை டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்த உங்களால் மறந்திருக்க முடியாது.

தொடர்ச்சி 4- ஆம் பக்கம்

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வின் துரோகத்தை டெல்டா மக்கள் உணர்ந்து முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும்!

## கொரடாச்சேரியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! 3 ஆம் பக்கத் தொடர்ச்சி!

காவிரியில் தமிழ்நாட்டு உரிமைகளுக்காகத் தலைவர் கலைஞர் எத்தனையோ செய்திருக்கிறார்... காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று, 1969-ஆம் ஆண்டு முதன்முதலாகக் குரல் கொடுத்ததில் இருந்து, காவிரி இறுதித் தீர்ப்பு வாங்கியது வரைக்கும், டெல்டா உழவர்களுக்காகத் தலைவர் பாடுபட்டது அத்தனையும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்!

## பாதம் தாங்கும் பழனிச்சாமி அவர்களே உங்களுக்கு வீர வசனங்கள் தேவை தானா!

ஆனால், அ.தி.மு.க.-வும், பா.ஜ.க.-வும் செய்தது என்ன? வரலாற்றுப் பக்கங்களைக் கொஞ்சம் புரட்டிப் பார்க்கலாமா?

காவிரி பாசன உழவர்களின் பாரம்பரிய உரிமையைக் காக்க, காவிரி மன்ற இறுதித் தீர்ப்பில் கூடுதலாக 60 டி.எம்.சி. நீர் கோரி 2007-ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு சிறப்பு முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கைக்கூட அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு ஒழுங்காக நடத்தவில்லை.

ஒன்றிய பா.ஜ.க. அரசு உச்சநீதிமன்றத்தில் என்ன சொன்னார்கள்?

"காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட முடியாது" என்று வாதாடினார்கள்!

### காவிரி பிரச்சினைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பா.ஜ.க. மனு!

அதுமட்டுமா சொன்னார்கள்? "காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது உள்ளிட்ட நடுவர் மன்றத்தின் உத்தரவுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் வேண்டும். மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்த் தகராறு சட்டத்தில் இதற்கான பல்வேறு விதிகள் இருக்கிறது. இதுகுறித்து உத்தரவிட உச்சநீதிமன்றத்துக்கே அதிகாரம் இல்லை. எனவே, உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைத் திரும்பப் பெற வேண்டும்" என்று உச்சநீதிமன்றத்தில் மனு போட்ட அரசு ஒன்றிய பா.ஜ.க., அரசு.

“இந்த விவகாரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்” என்று ஒன்றிய அரசு வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் கூறினார்.

அதிகாரம் உண்டு என்று சொல்லி காவிரி உரிமையை நிலைநாட்டியது உச்சநீதிமன்றம்தான்.

நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை உறுதி செய்து 2018-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அப்போதும், தமிழ்நாட்டின் காவிரி நீர் உரிமையில் 14.75 டி.எம்.சி.யை விட்டுக் கொடுத்தது பழனிசாமிதான்.

உச்சநீதிமன்றத் தீர்ப்புப்படி காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு உடனடியாக நீர் தாவா முறைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள்தான் நமக்கு வாக்களிப்பதில்லையே என்று ஒன்றிய பா.ஜ.க., இதைச் செயல்படுத்தவில்லை.

உடனடியாகக் காவிரி ஆணையம் அமைக்க வேண்டும் என்று போராடியதும் தி.மு.க.தான்.

தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடிக்குக் கருப்புக் கொடி காட்டினோம். "கோ பேக் மோடி" என்று சொன்னோம். நான் காவிரி உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொண்டேன். இரண்டு குழுக்களாக இந்தப் பயணத்தைத் தி.மு.க. நடத்தியது. மதச்சார்பற்ற கட்சிகளோடு ஒன்று சேர்ந்து, நாம் இதை நடத்திக் காட்டினோம்.

திருச்சி முக்கொம்பில் இருந்து நான் பயணம் மேற்கொண்டேன். காவிரி மேலாண்மை வாரியம் என்ற பெயரில் டெல்லியில்தான் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் கூறினோம்.

### முதுகெலும்பில்லாத பா.ஜ.க. அரசுக்கு தலையாட்டியவர்!

ஒன்றிய பா.ஜ.க. அரசு அதிகாரமற்ற ஒரு அமைப்பை தொடங்கியது. அதையும் பழனிசாமி அரசு தட்டிக் கேட்கவில்லை. ஒன்றிய அரசின் ஜல் சக்தி துறையுடன் இதைச் சேர்த்துவிட்டார்கள். அதையும் பழனிசாமி அரசு தட்டிக் கேட்கவில்லை. முதுகெலும்பு இல்லாமல் பா.ஜ.க. அரசுக்குத் தலையாட்டிக் கொண்டிருந்தார் பழனிசாமி.

இந்த இரண்டு பேரின் துரோகத்தையும் உணர்ந்து, இவர்களை டெல்டா மக்கள் முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும்.

ஆனால், இப்போது தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழ்நாட்டுக்கு வரும் பிரதமர் வாயிலேயே வடை சுடுகிறார். வார்த்தைகளால் வடை சுடுவதில் வல்லவர் பிரதமர் மோடி. வெறுங்கையில் முழம் போடுவதும் அவருக்குக் கை வந்த கலை!

## எதிர்க்கட்சிகள் ஒன்று சேராது என்று கனவு கண்ட மோடியின் தூக்கத்தை கலைத்துவிட்டது ‘இந்தியா’ கூட்டணி!

தமிழ்நாட்டில் பல பகுதியில் வரலாறு காணாத மழை பெய்து, கடந்த டிசம்பர் மாதம் பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. பல மாதம் ஆனது. இதுவரை நிவாரண நிதியாக ஒரு சல்லிக்காசு கூட ஒதுக்கவில்லை பா.ஜ.க. அரசு. நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கோரினோம். ஒரு பைசாகூட வரவில்லை.

பாதுகாப்பு அமைச்சர் வந்து பார்த்தார். தருவதாகக் கூறினார், தரவில்லை!

நிதி அமைச்சர் வந்து பார்த்தார். தருவதாகக் கூறினார், தரவில்லை!

ஒன்றியக் குழு வந்து பார்த்தது. வாங்கித் தருவதாகக் கூறினார்கள், தரவில்லை!

தமிழ்நாட்டு எம்.பி.க்கள் உள்துறை அமைச்சரை டெல்லிக்குச் சென்று சந்தித்தார்கள்! அவரும் தருவதாகக் கூறினார், தரவில்லை!

ஏன் தரவில்லை? தமிழ்நாட்டுக்குத் தருவதற்கு அவர்களுக்கு மனமில்லை. சமீபகாலமாகத் தமிழ்நாட்டுக்கு வரும் பிரதமர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணத் தொகை அறிவித்திருந்தால் பாராட்டலாம். தமிழ்நாட்டுக்கு எதையும் தராத மோடிக்குத் தமிழ்நாட்டு மக்களும் தங்களின் வாக்கையும் தர மாட்டார்கள்!

### தமிழ்நாட்டு மக்கள் மோடிக்கு வாக்களிக்க மாட்டார்கள்!

தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் எதையும் வழங்காத மோடிக்கு, தமிழ்நாட்டு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்பதுதான் உண்மை. இது மோடிக்கும் தெரியும்.

> *காவிரியில் தமிழ்நாட்டு உரிமைகளுக்காகத் தலைவர் கலைஞர் எத்தனையோ செய்திருக்கிறார்... காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று, 1969-ஆம் ஆண்டு முதன்முதலாகக் குரல் கொடுத்ததில் இருந்து, காவிரி இறுதித் தீர்ப்பு வாங்கியது வரைக்கும், டெல்டா உழவர்களுக்காகத் தலைவர் பாடுபட்டது அத்தனையும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்!*

அதனால்தான், தி.மு.க. மேல் அளவுக்கு அதிகமான ஆத்திரத்தைக் கொட்டுகிறார். மாநிலம் மாநிலமாகச் சென்று தி.மு.க. வை விமர்சித்தார். இப்போது தமிழ்நாட்டுக்கு வந்தும் அதே பல்லவியைப் பாடுகிறார்.

தி.மு.க. மேல் ஏன் அவருக்கு இவ்வளவு கோபம்?

இந்தியா முழுவதும் பா.ஜ.க.வுக்கு எதிராகத் தனித்தனியாக இயங்கி வந்த கட்சிகளை ஒன்றிணைக்க நான் காரணமாக இருந்தேன் என்ற ஆத்திரத்தில் தி.மு.க.-வை விமர்சித்துக் கொண்டிருக்கிறார்.

தன்னை எதிர்க்க யாருமில்லை என்று இருந்தவரின் பொழப்பை இந்தியா கூட்டணி கெடுத்துவிட்டது. எதிர்க்கட்சிகள் ஒன்று சேராது என்று கனவுலகத்தில் இருந்த மோடியின் தூக்கத்தை இந்தியா கூட்டணி கலைத்துவிட்டது.

தூக்கத்தில் இருந்து எழுந்து தி.மு.க.வைத் தரக்குறைவாகப் பேசுகிறார். அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. இதுபோல் எத்தனையோ ஏச்சுகள் - ஏளனங்கள் - அரட்டல்கள் - மிரட்டல்களை பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் தான் நாங்கள். வசவுகளை வாங்கி வாங்கி உரம் பெற்றவர்கள் நாங்கள்.

கலைஞர் ஸ்டைலில் சொல்ல வேண்டும் என்றால், பிரதமர் மோடி அவர்களே... நாங்கள் தென்றலைத் தீண்டியதில்லை! ஆனால், தீயைத் தாண்டியிருக்கிறோம்!

## வார்த்தைகளால் வடை சுடுவதில் வல்லவர் மோடி! வெறும் கையால் முழம்போடுவதும் அவருக்கு கைவந்த கலை!

கருப்பு சிவப்புக் கொடியைக் கையிலேந்தி வரும் திராவிட முன்னேற்றக் கழக உடன்பிறப்பை இன்னும் தீவிரமாக வேலை செய்ய வைப்பதே இந்த எதிர்த் தாக்குதல்தான். எதிர்த்தாக்குதல் வந்தால்தான் தி.மு.க. தொண்டர்கள் - உற்சாகத்துடன் - வெறியுடன் களப்பணி ஆற்றுவார்கள்.

இவ்வளவு நாட்களாக எங்களை உசுப்பிவிட்டு - உற்சாகப்படுத்தி வந்தார் தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என். ரவி. அவருக்கு நேற்று முன்தினம் உச்சநீதிமன்றம் கடுமையான வார்த்தைகளால் எச்சரிக்கை கொடுத்திருக்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பையும், அரசியலமைப்பையும் அவமதித்தால், அதைப் பார்த்துக் கொண்டு நாங்கள் சும்மா இருக்கமாட்டோம் என்று மாண்பமை நீதியரசர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதுவரை எந்த ஆளுநரும் உச்சநீதிமன்றத்தால், இந்த அளவுக்கு கண்டனத்துக்கு உள்ளாகி இருப்பார்களா? என்பது சந்தேகம்தான்.

### ஆளுநர் மாளிகையில் தொடங்கி குடியரசுத் தலைவர் மாளிகையில் முடிவு!

அவரே கடைசியில் களைத்துப் போய், நேற்று எங்களுக்கு அழைப்புவிடுத்து 3.30 மணிக்கு பதவிப்பிரமாணம் - வாருங்கள் - பொன்முடிக்கு பதவியேற்பு என்றார். அதை முடித்துவிட்டுத்தான் என் பயணத்தையே தொடங்கினேன். எனவே, ஆளுநர் மாளிகையில் இருந்து தான் என்னுடைய பிரச்சாரமே தொடங்கியிருக்கிறது. ஆளுநர் மாளிகையிலிருந்து தொடங்கியிருக்கும் இந்த பிரச்சாரம், குடியரசுத் தலைவர் மாளிகை வரைக்கும் போகப்போகிறது. புறப்படும்போது, போய் வருகிறேன் என்று சொல்லிட்டு, இன்றைக்கு என்னுடைய பிரச்சாரப் பயணத்தை தொடங்குகிறேன் என்று சொல்லி ஆளுநருக்குக் கை கொடுத்தேன். 'ஆல் த பெஸ்ட்' என்று அவரே சொன்னார்.

ஆளுநர் பார்த்த வேலையை இப்போது பிரதமர் மோடி தொடங்கி இருக்கிறார். பிரதமர் மோடி அவர்களே! நீங்கள் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வாருங்கள். அப்போதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு உங்கள் மீதும் - பா.ஜ.க. மீதும் இருக்கும் கோபத் தீ அடங்காமல் அதிகமாகிக் கொண்டே இருக்கும். தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்யாதவர் - வாக்கு மட்டும் கேட்டு வருகிறாரே என்று, பா.ஜ.க.-வின் தோல்வியும் - துரோகமும் அப்போதுதான் மக்களுக்கு இன்னும் ஸ்ட்ராங்காகப் பதியும்!

தமிழுக்கும் - தமிழினத்துக்கும் - தமிழ்நாட்டுக்கும் - விரோதமான கட்சி பா.ஜ.க. பா.ஜ.க.வுக்குப் போடும் ஓட்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வைக்கும் வேட்டு! அதை மட்டும் மறந்துவிடாதீர்கள்.

மாநிலத்தைக் கெடுத்த அ.தி.மு.க. - மாநிலத்தைக் கண்டுகொள்ளாத பா.ஜ.க. - இரண்டு பேரையும் ஒரு சேர வீழ்த்த வேண்டும்.

அவர்களுக்கு இன்னும் புரியவில்லை. தமிழர்கள், பா.ஜ.க. மாதிரி, அடக்க நினைப்பவர்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! அ.தி.மு.க. மாதிரி, அடிமையாக இருப்பவர்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்!

கடந்த இரண்டு தேர்தலில் நிரூபித்த மாதிரியே, இந்தத் தேர்தலிலும் காட்ட வேண்டும்!

தஞ்சை நாடாளுமன்றத் தொகுதிக்கு வெற்றி வேட்பாளர் முரசொலிக்கு உதய சூரியன் சின்னத்திலும்; நாகை நாடாளுமன்றத் தொகுதிக்கு வெற்றி வேட்பாளர் வை.செல்வராஜுக்குக் கதிர் அரிவாள் சின்னத்திலும்; உங்களது பொன்னான வாக்குகளை அளித்து வெற்றி பெற வையுங்கள்.

இந்தியா கூட்டணியை ஆதரிப்போம்! ஒளிமயமான இந்தியாவை அமைப்போம்! நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

நன்றி! வணக்கம்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கடலூர் நாடாளுமன்றத் தொகுதி அண்ணா கிராமம் ஒன்றியத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகளிடம் தேர்தல் பணி குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. உடன் அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் வி. கே. வெங்கட்ராமன், பொதுக்குழு உறுப்பினர் என். பலராமன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் ஏ. மதனகுரு மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.




நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கரூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கரூர் கலைஞர் அறிவாலயம் தளபதி கூட்ட அரங்கில், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனையின்படி நடைபெற்றது. கரூர் மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் மாநிலங்களவை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா சிறப்புரையாற்றினார்.



2024 நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கழக வெற்றி வேட்பாளர்கள் டி.ஆர். பாலு, க.செல்வம் ஆகியோரை ஆதரித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக சார்பில் மாநகரம் – நகரம் – பேரூர் ஒன்றிய உள்ளாட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையிலும், முன்னாள் மத்திய அமைச்சர் கழகப் பொருளாளர் டி.ஆர் பாலு முன்னிலையிலும் நேற்று (23.3.2024) மறைமலைநகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஊராட்சி வாரியாக – வார்டு வாரியக பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பது குறித்து ஆலோசனை நடைபெற்றது.



தி.மு.க. தலைமையிலான 'INDIA' கூட்டணி தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியனை மாபெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் மாபெரும் செயல்வீரர்கள் கூட்டம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நேற்று (23–03–2024) சனிக்கிழமை மாலை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்றது. இந்தச் செயல்வீரர்கள் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகரராஜா, ஜெ.கருணாநிதி, தொகுதி பொறுப்பாளர்கள் கோ.வி.லெனின், கன்னிகை ஸ்டாலின், பழ.செல்வகுமார், வி.பி.கலைராஜன், கே.எஸ்.ரவிச்சந்திரன் ப.அப்துல் மாலிக், துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதி கழக செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, சு.சேகர், துரை.கபிலன், வி.இ.மதியழகன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

### கர்நாடக இசைப் பாடகர் டி.எம்.கிருஷ்ணாவின் திறமை எவராலும் மறுதலிக்க முடியாதது!

# ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகியுள்ள சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு அன்பான வாழ்த்துகள்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!



**சென்னை, மார்ச் 24 -**

**“மியூசிக் அகாடமியின் ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகியுள்ள சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணாவுக்கு எனது அன்பார்ந்த வாழ்த்துகள்!” என, தமது வலைதளப் பதிவில் வாழ்த்தியுள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு : -

“சிறந்த பாடகர் டி.எம்.கிருஷ்ணா அவர்கள் ‘மியூசிக் அகாடமி’யின் ‘சங்கீத கலாநிதி’ விருதுக்குத் தேர்வாகி இருப்பதற்கு எனது அன்பான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிருஷ்ணா அவர்கள் கொண்டுள்ள முற்போக்கு அரசியல் நிலைப்பாடுகளினாலும், அவர் எளியோரைப் பற்றித் தொடர்ந்து பேசி வருவதாலும் ஒரு தரப்பார் காழ்ப்புணர்விலும் உள்நோக்கத்துடனும் விமர்சிப்பது வருத்தத்துக்குரியது.

இதில் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட மானுட சமத்துவத்துக்காகவும் பெண்கள் சரிநகர் சமானமாக வாழ்ந்திடவும் முக்கால் நூற்றாண்டு காலம் அறவழியில், அமைதிவழியில் போராடிய தந்தை பெரியாரைத் தேவையின்றி வசைபாடுவது நியாயமல்ல. பெரியாரின் தன்னலமற்ற வாழ்க்கை வரலாற்றையும், அவரதுசிந்தனைகளையும் படிக்கும் எவரும் இப்படி அவதூறுச் சேற்றை வீச முற்பட மாட்டார்கள்.

கிருஷ்ணா அவர்கள் இசைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புகளுக்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் வழங்கிடும் வகையில் தகுதியானவரைத் தேர்ந்தெடுத்த மியூசிக் அகாடமி நிர்வாகிகள் நம் பாராட்டுக்கு உரியவர்கள்.

டி.எம்.கிருஷ்ணா எனும் கலைஞனின் திறமை எவராலும் மறுதலிக்க முடியாதது. அரசியலில் மத நம்பிக்கைகளைக் கலந்தது போல, இசையிலும் குறுகிய அரசியலைக் கலக்க வேண்டாம்! விரிந்த மானுடப் பார்வையும், வெறுப்பை விலக்கி, சக மனிதரை அரவணைக்கும் பண்புமே இன்றைய தேவை!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து

# கனிமொழி கருணாநிதி இன்று பிரச்சாரத்தைத் தொடங்குகிறார்!

## கழகத்தினர் உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினர் திரளாகப் பங்கேற்கின்றனர்!



தூத்துக்குடி, மார்ச் 24-

தூத்துக்குடி மக்களவை தொகுதி ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர் கனிமொழி கருணாநிதி இன்று (24.03.2024) தூத்துக்குடி கலைஞர் அரங்கம் முன்பு உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தை துவக்குகிறார்.

இது குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி மக்களவை தொகுதியில் ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளராக கனிமொழி கருணாநிதி அவர்கள் போட்டியிடுவதை முன்னிட்டு இன்று (24.03.2024 - ஞாயிற்று கிழமை) மாலை 5 மணியளவில் தூத்துக்குடி எட்டையாபுரம் சாலை, கலைஞர் அரங்கம் முன்பு உள்ள கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து தனது பிரச்சாரத்தை துவக்கவிருக்கிறார்.

இந்நிகழ்வில் I.N.D.I.A கூட்டணி கட்சிகளின் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகிகளான காங்கிரஸ் கட்சியின் மாநில துணைத் தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம், இந்திய தேசிய காங்கிரஸ் மாநகர மாவட்ட தலைவர் சி.எஸ். முரளிதரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் கே.எஸ். அர்ச்சுனன், மாநகர செயலாளர் எம்.எஸ். முத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் திருமதி. தனலெட்சுமி ஞானசேகரன், ம.தி.மு.க மாநகர செயலாளர் பி.முருகபூபதி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்ட செயலாளர் பி. மீராசா, விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் எம். கணேசன், மக்கள் நீதி மய்யம் மத்திய மாவட்ட செயலாளர் ஜவஹர், மனித நேய மக்கள் கட்சி தொகுதி பொறுப்பாளர் அகமது இக்பால், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்ட செயலாளர் என்.ஏ.கிதர் பிஸ்மி, சமத்துவ மக்கள் கழகம் மாவட்ட செயலாளர் பி.எம்.அற்புதராஜ், ஆதித் தமிழர் பேரவை மாவட்ட மகளிர் அணி செயலாளர் திருமதி. சீதாலட்சுமி, ஆதித் தமிழர் கட்சி மாநகர செயலாளர் அன்பரசு, தமிழ் புலிகள் கட்சி தூத்துக்குடி பொறுப்பாளர் கே. வேல்முருகன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

மேலும் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர தி.மு.க. செயலாளர் எஸ். ஆர். ஆனந்த சேகரன், மாவட்ட அவைத் தலைவர் ஜி. செல்வராஜ், மாவட்ட பொருளாளர் சுசீ. ரவிந்திரன்,

மாவட்டக் கழகத் துணை செயலாளர்கள் எம். ஆறுமுகம், எம். ராஜ்மோகன் செல்வின், துணை மேயர் திருமதி. ஜெனிட்டா செல்வராஜ், மற்றும் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### கழக வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து

# மதுரவாயல் 92வது வட்டத்தில் ஆலோசனைக் கூட்டம்!

## எம்.எம்.ஜெயரத்னம் - நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

சென்னை, மார்ச் 24-

தி.மு.க. தலைமையிலான I.N.D.I.A. கூட்டணியின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி தி.மு.கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களை ஆதரித்து 92வது வட்ட கழகம் சார்பில் வட்டத்திற்கு உட்பட்ட தெருக்களில் பிரச்சாரம் மற்றும் கழக ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்து அவசர ஆலோசனை கூட்டம் வட்ட கழக செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் ஏற்பாட்டில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11-வது மண்டலக்குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் வட்ட அவைத் தலைவர் எம்.எஸ்.சந்தானம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கே.நீலகண்டன், மாவட்ட அமைப்பாளர் கே.குமரேசன், பகுதி துணை செயலாளர் எம்.ஏ. செந்தில்சுரேஷ், மாவட்ட கழக பிரதிநிதி எம்.சி.எழிலரசு மற்றும் ஏ.ஜி.வேலன், டாக்டர் எம்.சி.அழகிரி, ஏ.சுந்திரி, எம்.எஸ்.பிரபு, டி.கலைநேசன், எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி. நவக்குமார், எம்.சி.இளங்கோவன்,

ஏ.எம்.பி.சீனிவாசன், எம்.எஸ்.தமிழ் அழகன், எஸ்.ஜமுனா, டி.ஜெயச்சந்திரன், எம்.ஏ.மதி, எஸ். பாலாஜி, எம்.ஜி.சுரேஷ், ஏ.லீலவாதி, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன், பி. நாகராஜ், கே.முருகன், கே.பிரகாஷ், எம்.எம். கண்ணப்பன், ஜி.நாகராஜ், எம். சி.விமல்தாஸ்,

வி.ஆர்.மகேந்திரன், எம். ஜி.எம்.புகழேந்தி, சி.காமராஜ், டி.அமுல்ராஜ், எல். கிருஷ்ணமூர்த்தி, கே.பிரகாஷ், எம்.சபரிதாஸ், என். மல்லியப்பன், ஆர்.பெரியசாமி, வி.வளர்மதி, எஸ். ஆனந்தன், எம்.ஜி.தேவன், எஸ்.ஸ்ரீதர், எம்.பி.நவசுந்தர், டி.நிக்சன், டி.ஆல்பர்ட், எம்.எஸ்.லட்சுமணன், எம். டி.ராஜி, இளைஞர் அணியைச் சேர்ந்த கே.நரேஷ், எம்.எஸ்.கார்த்திக், எம். ஜி.விக்னேஷ்,

எம்.எம்.ஜெ.ரோஷன் காந்த், எம்.ரூபன், கே.தயாநிதி, எம்.பி.எழிலரசு, வி. கலைவாணன், வி.திருமுருகன், எம்.இமயவர்மன், கே. மேகநாதன், எம்.வினோத், எஸ்.சபரி, நெல்லை. பென்னி கே.கர்ணா, என்.தினேஷ், எம்.மணிகண்டன், காவல்ராஜ், சரவணன், சங்கர், கோவிந்தசாமி, வேலாயுதம், டி.என்.முரளி, ராஜா, பிரதாப், கருடன், கண்ணியப்பன், முனிவேல், வெங்கட கிருஷ்ணன், குமாரசாமி, சுந்தர்ராஜன், தாமு, சாம்பசிவம், நவின், சுரேஷ், அழகேசன், தனசேகர், வெங்கடாசலம் செல்வம், விஜய், நாகராஜ், சந்திரசேகர், சுப்பிரமணி, மகளிர் அணி சேர்ந்த சிவசக்தி பிரியா ஜி.மரகதம், எஸ்.அர்சனா, நதியா, காயத்திரி, தேவி, மல்லிகா, விஜயா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் மூத்த முன்னோடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர் பெ.வினோத் ஏற்பாட்டில் ஆவடி காமராஜ் நகரில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்டகழகச்செயலாளர் ஆவடிசாமு.நாசர்எம்.எல்.ஏ., திருவள்ளூர்தனிநாடாளுமன்றத்தேர்தலில்திமுக தலைமையிலான கூட்டணி கட்சியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளரை வெற்றி பெற செய்வதற்கான பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். உடன் கே.ஜெ.ரமேஷ், என்.இ.கே.மூர்த்தி, சே.பிரேம்ஆனந்த், ஜி.விமல்வர்ஷன், கு.சேகர், எஸ்.ராஜேந்திரன், துரைபழனி, வெங்கடேசன், ஜெயவேல், அகஸ்டின், வி.கார்த்தி, ஜெயக்குமார், எம்.கார்த்தி, ரமேஷ், தனலட்சுமி, சந்தோஷ், செல்வம், தமிழ்செல்வம், பிராங்கிளின், கிருஷ்னாதாஸ், கண்ணன், ராஜ்குமார், திருப்பதி, தேவராஜ், ஹேமமாலினி எம்.ஜி.தமிழன், தமிழன்பு, ஜி.டி.அருண், கிருபாநிதி, அருண், பாலகிருஷ்ணன், பெருமாள், ராதிகாமணி, ஜெயந்தி, காமேஷ்வரன், அர்னால்டு, நரேஷ், உள்பட வழக்கறிஞர் உள்ளனர்.

### வட்டச் செயலாளர் எம்.இ.சேகர் தலைமையில்

# 89வது வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

சென்னை, மார்ச் 24-

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி, வருகின்ற நாடாளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்குப் பகுதி செயலாளர்), 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி எம்.சி, தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ் பி.இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்) ஆகியோரின் முன்னிலையில் 89வது வட்டச் செயளாலரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் நேற்று (23.03.2024) மாலை 5.00 மணிக்கு வட்ட வடிவ நகரில் உள்ள கட்சி அலுவலகத்திலிருந்து தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது. அனைத்து கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், 89வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி, மாணவர் அணியினர், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துக் கொண்டு 89வது வட்டத்திற்கு உட்பட்ட வட்ட வடிவ நகரில் வீடு வீடாக சென்று திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர்.



சைதை மேற்குப் பகுதி 139 அ வட்டக்கிளை நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் மேற்குஜோன்ஸ்சாலை (ஆர்.சுரேஷ் இல்லமாடியில்) இ.வரதன். தலைமையிலும், வட்டக்கழகச்செயலாளர் சை.மு.சேகர் , வி.பி.ஜானகிராமன், எம்.எஸ்.ஹரிபாபு ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பகுதிசெயலாளர். எம்.கிருஷ்ணமூர்த்தி இந்தியாகூட்டணியின் வேட்பாளராகபோட்டியிடும் முனைவர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து ஆற்ற வேண்டிய களப் பணிகள் குறித்து ஆலோசனைவழங்கி பேசினார். கூட்டத்தில் சைதை.ஆர்.ரமேஷ், மா.ஏழுமலை, சுமதிதீனதயாளன், பூபதி. வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், ப.நரேஷ், ஜி.ஏழுமலை, கொடி.து.சுரேஷ்பாபு, டி.கோபாலகிருஷ்ணன், எஸ் முகமது அலி, யமஹா.ராஜேஷ், சார்ப்.சரவணன், கே.விஜயகுமார், வி. வாசுதேவன் மற்றும் பலர் பங்கேற்றனர்

## தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தொகுதிகள் தோறும் தேர்தல் பணிக்குழு விவரம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



### தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024
### சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | மு.மகேஷ்குமார் | தலைவர் | தி.மு.க. | 94444 04499 |
| 2 | எம். கிருஷ்ணமூர்த்தி | செயலாளர் | தி.மு.க. | 94440 47366 |
| 3 | இரா. துரைராஜ் | செயலாளர் | தி.மு.க. | 98844 64668 |
| 4 | எஸ். குணசேகரன் | செயலாளர் | தி.மு.க. | 98844 88870 |
| 5 | சைதை மா.அன்பரசன் | உறுப்பினர் | தி.மு.க. | 98413 85755 |
| 6 | ஸ்ரீதரன் | " | தி.மு.க. | 94440 03987 |
| 7 | சைதை சம்பத் | " | தி.மு.க. | 98840 16775 |
| 8 | மின்னல் கந்தப்பன் | " | தி.மு.க. | 93825 11115 |
| 9 | சைதை சாதிக் | " | தி.மு.க. | 9566016668 |
| 10 | மணிகண்டன் நாடிமுத்து | " | தி.மு.க. | 9003192466 |
| 11 | பாஸ்கர் | " | தி.மு.க. | 98410 69120 |
| 12 | எம்.எஸ்.ஹரிபாபு | " | தி.மு.க. | 94440 22559 |
| 13 | அஞ்சல் ரமணன் | " | தி.மு.க. | 74014 24822 |
| 14 | R. கிருஷ்ணகுமார் | " | தி.மு.க. | 9600174981 |
| 15 | கோட்டூர் எஸ்.பிரகாஷ் | " | தி.மு.க. | 97899 09173 |
| 16 | முத்தமிழ் மன்னவன் | " | காங்கிரஸ் | 9840193126 |
| 17 | சந்தானம் | " | காங்கிரஸ் | 92821 36844 |
| 18 | கணேஷ் | " | காங்கிரஸ் | 96984 83109 |
| 19 | எஸ்.வி.குமார் | " | ம.தி.மு.க. | 98413 85503 |
| 20 | ஜேக்கப் | " | வி.சி.க | 90941 87989 |
| 21 | வெங்கடேசன் | " | CPM | 97103 26278 |
| 22 | டி.சி.கே. சுந்தரம் | " | CPI | 94442 06195 |
| 23 | அப்துல்கலாம் | " | இ.மு.லீக் | 93440 72169 |
| 24 | ரமேஷ் | " | த.வி.தொ.க. | 81909 49978 |
| 25 | சினேகா | " | ம.நீ.ம | 90036 61122 |
| 26 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 95000 24593 |
| 27 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 93819 55966 |
| 28 | ஜின்னா | " | ம.நே.ம.க. | 99405 11973 |
| 29 | எம். ஹாஜா | " | த.மா.தே.லீக் | 9941445544 |
| 30 | மேத்யூஸ் | " | கி.ந. இ. | 72000 42123 |
| 31 | துரை மாணிக்கம் | " | ச.ம.க. | 98416 23534 |
| 32 | விஜய் | " | அ.தி.ம.மு.க. | 79042 68883 |
| 33 | மூர்த்தி | " | மு.பு.ப. | 94442 16172 |

**கோ.வி.லெனின் - 7708483700**
**தொகுதி பொறுப்பாளர்**

### விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | AMV. பிரபாகரராஜா எம்.எல்.ஏ. | தலைவர் | தி.மு.க. | 9962159159 |
| 2 | க. தனசேகரன். | செயலாளர் | தி.மு.க. | 9884012130 |
| 3 | கே. கண்ணன் | செயலாளர் | தி.மு.க. | 9962002345 |
| 4 | மு. ராசா | செயலாளர் | தி.மு.க. | 9884409410 |
| 5 | வாசுகிபாண்டியன் | உறுப்பினர் | தி.மு.க. | 7299963998 |
| 6 | காசி முத்து மாணிக்கம் | " | தி.மு.க. | 9444041978 |
| 7 | கௌதமன் | " | தி.மு.க. | 9940923535 |
| 8 | ரத்னா லோகேஷ்வரன் | " | தி.மு.க. | 9841192728 |
| 9 | யாழினி | " | தி.மு.க. | 9176398824 |
| 10 | உ. துரைராஜ் | " | தி.மு.க. | 9444958481 |
| 11 | எஸ்டி. தங்கராஜ் | " | தி.மு.க. | 9962826699 |
| 12 | பி. எஸ். முருகேசன். | " | தி.மு.க. | 8608984065 |
| 13 | ஆர். சசிகுமார் | " | தி.மு.க. | 9840071389 |
| 14 | கனிமொழி தனசேகரன் | " | தி.மு.க. | 9710957957 |
| 15 | நிஷா சையத். | " | தி.மு.க. | 9841865444 |
| 16 | P. ராஜமாணிக்கம் | " | காங்கிரஸ் | 9840872801 |
| 17 | K. ராஜபாண்டி | " | காங்கிரஸ் | 9789818384 |
| 18 | வைகோ ரவி | " | ம.தி.மு.க. | 9941446138 |
| 19 | செ. கரிகால்வளவன் | " | வி.சி.க. | 9962225226 |
| 20 | E. ரவி | " | CPM | 9841395105 |
| 21 | தயாளன் | " | CPI | 9543265035 |
| 22 | வி. அப்துல்லா | " | ம.ம.க. | 9962361406 |
| 23 | மன்சூர் | " | த.மு.மு.க. | 9940385834 |
| 24 | சிக்கந்தர் | " | இ.யூ.மு.லீ. | 9840899988 |
| 25 | செல்வம் | " | ம.நீ.ம | 9841531567 |
| 26 | ஜின்னா | " | ம.ம.க | 9940511973 |
| 27 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 9500024593 |
| 28 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 9381955966 |
| 29 | எம். ஹாஜா | " | த.மா.தே.லீக் | 9941445544 |
| 30 | மேத்யூஸ் | " | கி.ந. இ. | 72000 42123 |
| 31 | துரை மாணிக்கம் | " | ச.ம.க. | 98416 23534 |
| 32 | விஜய் | " | அ.தி.ம.மு.க. | 79042 68883 |
| 33 | மூர்த்தி | " | மு.பு.ப. | 94442 16172 |

**கன்னிகை ஸ்டாலின் - 9884912377**
**தொகுதி பொறுப்பாளர்**

### வேளச்சேரி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | அசன் மௌலானா எம்.எல்.ஏ. | தலைவர் | காங்கிரஸ் | 79000 66666 |
| 2 | சு.சேகர் | செயலாளர் | தி.மு.க. | 98404 24318 |
| 3 | துரை கபிலன் | செயலாளர் | தி.மு.க. | 99628 06089 |
| 4 | வேளச்சேரி மணிமாறன் | செயலாளர் | தி.மு.க. | 91763 97897 |
| 5 | எஸ்.பாஸ்கரன் | செயலாளர் | தி.மு.க. | 94440 66199 |
| 6 | வே. ஆனந்தம் | செயலாளர் | தி.மு.க. | 99627 66635 |
| 7 | எம்.விநாயகமூர்த்தி | செயலாளர் | தி.மு.க. | 98407 63394 |
| 8 | பாலசுந்தரம் | உறுப்பினர் | தி.மு.க. | 98410 56278 |
| 9 | பி.ஜே.பாஸ்கர் | " | தி.மு.க. | 98401 70507 |
| 10 | பரிமேலழகன் | " | தி.மு.க. | 99401 32450 |
| 11 | சுரேஷ் | " | தி.மு.க. | 93822 02751 |
| 12 | வழக்கறிஞர் ஜெகதீசன் | " | தி.மு.க. | 94449 12827 |
| 13 | கழக ரமேஷ் | " | தி.மு.க. | 94440 84485 |
| 14 | முகேஷ் | " | தி.மு.க. | 94450 02020 |
| 15 | விஜயரதி | " | காங்கிரஸ் | 86674 72012 |
| 16 | தரமணி மணி | " | காங்கிரஸ் | 97101 16336 |
| 17 | ரபார்ட் | " | காங்கிரஸ் | 98848 88789 |
| 18 | சி.வி.செந்தில்குமார் | " | ம.தி.மு.க. | 90921 58333 |
| 19 | இளையா | " | வி.சி.க. | 94441 61149 |
| 20 | ரஃபீ | " | சி.பி.எம். | 98403 31529 |
| 21 | கோவிந்தன் | " | சி.பி.ஐ. | 98404 64941 |
| 22 | மொய்தீன் பாஷா | " | இ.யூ.மு.லீக் | 98844 16133 |
| 23 | தயாளன் | " | த.வி.தொ.க. | 90803 53152 |
| 24 | முத்துகுமார் | " | த.வா.க. | 95978 61222 |
| 25 | சினேகா | " | ம.நீ.ம. | 90036 61122 |
| 26 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 93819 55966 |
| 27 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 95000 24593 |
| 28 | எம். ஹாஜா | " | த.மா.தே.லீக் | 9941445544 |
| 29 | மேத்யூஸ் | " | கி.ந. இ. | 72000 42123 |
| 30 | துரை மாணிக்கம் | " | ச.ம.க. | 98416 23534 |
| 31 | விஜய் | " | அ.தி.ம.மு.க. | 79042 68883 |
| 32 | மூர்த்தி | " | மு.பு.ப. | 94442 16172 |

**பழ.செல்வகுமார் - 9894015177**
**தொகுதி பொறுப்பாளர்**

### சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | எஸ். அரவிந்தரமேஷ் எம்.எல்.ஏ. | தலைவர் | தி.மு.க. | 98400 61354 |
| 2 | எஸ்.வி.ரவிச்சந்திரன் | செயலாளர் | தி.மு.க. | 94440 61590 |
| 3 | வி.இ. மதியழகன் | செயலாளர் | தி.மு.க. | 99625 50333 |
| 4 | வெங்கடேசன் | செயலாளர் | தி.மு.க. | 99413 33434 |
| 5 | பாலவாக்கம் க.சோமு | செயலாளர் | தி.மு.க. | 98402 65211 |
| 6 | த. விஸ்வநாதன் | செயலாளர் | தி.மு.க. | 93840 06322 |
| 7 | பாலவாக்கம் மனோகரன் | செயலாளர் | தி.மு.க. | 98404 28067 |
| 8 | எம்.கே.ஏழுமலை | உறுப்பினர் | தி.மு.க. | 98400 49609 |
| 9 | தா.பஷீர் | " | தி.மு.க. | 89397 65458 |
| 10 | எஸ். ஏ. ஹரிகிருஷ்ணன் | " | தி.மு.க. | 98410 97038 |
| 11 | பா.ரவி | " | தி.மு.க. | 93810 33110 |
| 12 | ரத்னா லோகேஸ்வரன் | " | தி.மு.க. | 98411 92728 |
| 13 | சி.பிரதீப் | " | தி.மு.க. | 94888 88812 |
| 14 | அனீஷ் | " | தி.மு.க. | 98849 75420 |
| 15 | பா. அருண்குமார் | " | தி.மு.க. | 98414 28800 |
| 16 | எம்.பார்த்திபன் | " | தி.மு.க. | 98842 82377 |
| 17 | சங்கீதா பாரதிராஜா | " | தி.மு.க. | 94443 58956 |
| 18 | ஜெ.இ.பாண்டியன் | " | தி.மு.க. | 98411 43199 |
| 19 | கா.தியாகராஜன் | " | தி.மு.க. | 98408 55056 |
| 20 | இராமன் | " | காங்கிரஸ் | 99621 44120 |
| 21 | அங்கமுத்து | " | காங்கிரஸ் | 93826 75440 |
| 22 | லோகநாதன் | " | காங்கிரஸ் | 81485 10203 |
| 23 | செந்தில்நாதன் | " | காங்கிரஸ் | 98404 00492 |
| 24 | சங்கர் | " | காங்கிரஸ் | 98419 98999 |
| 25 | கயல் கோவிந்தராஜ் | " | ம.தி.மு.க. | 94442 05253 |
| 26 | மதிவளவன் | " | வி.சி.க. | 72004 91774 |
| 27 | ஜெயவேல் | " | சி.பி.எம். | 99402 11124 |
| 28 | தோழர் ஜி.கண்ணதாசன் | " | சி.பி.ஐ. | 94442 06195 |
| 29 | முகமது அபுபக்கர் | " | இ.யூ.மு.லீக் | 97890 03864 |
| 30 | மனோகரன் | " | த.வி.தொ.க. | 98400 66146 |
| 31 | செல்வம் | " | த.வா.க. | 98410 83040 |
| 32 | பிரவீன் | " | ம.நீ.ம. | 96000 07339 |
| 33 | வினோத்குமார் | " | ஆம் ஆத்மி | 93819 55966 |
| 34 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.க. | 95000 24593 |
| 35 | எம்.ஹாஜா | " | த.மா.தே.லீக் | 9941445544 |
| 36 | மேத்யூஸ் | " | கி.ந. இ. | 72000 42123 |
| 37 | துரை மாணிக்கம் | " | ச.ம.க. | 98416 23534 |
| 38 | விஜய் | " | அ.தி.ம.மு.க. | 79042 68883 |
| 39 | மூர்த்தி | " | மு.பு.ப. | 94442 16172 |

**வி.பி.கலைராஜன் - 94440 13892**
**தொகுதி பொறுப்பாளர்**

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



## தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தல் - 2024

# தொகுதிகள் தோறும் தேர்தல் பணிக்குழு விவரம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



### மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | A.முரளி | செயலாளர் | தி.மு.க. | 9840049577 |
| 2 | நந்தனம் மதி | செயலாளர் | தி.மு.க. | 9444109216 |
| 3 | மு.தம்பிதுரை | உறுப்பினர் | தி.மு.க. | 9941250535 |
| 4 | என்.அன்பர்கன் | " | தி.மு.க. | 8056232560 |
| 5 | நந்தனம் வேதா | " | தி.மு.க. | 9840807676 |
| 6 | மு.மலர் | " | தி.மு.க. | 9941296380 |
| 7 | மந்தைவெளி அ.பாபு | " | தி.மு.க. | 9444354757 |
| 8 | செல்விசௌந்தராஜன் | " | தி.மு.க. | 9940246598 |
| 9 | வேலு சம்பந்தம் | " | தி.மு.க. | 6374400185 |
| 10 | யோகேஷ் ரவி | " | தி.மு.க. | 9884964986 |
| 11 | டி.தினகரன் | " | தி.மு.க. | 9840683623 |
| 12 | விஜய்வெங்கடேசன் | " | தி.மு.க. | 9840378053 |
| 13 | சத்தியமூர்த்தி | " | தி.மு.க. | 9840087925 |
| 14 | ஆர்.பாலு | " | தி.மு.க. | 9444287619 |
| 15 | சரவணன் | " | தி.மு.க. | -- |
| 16 | விக்னேஷ்வரன் | " | தி.மு.க. | 9094699900 |
| 17 | தினேஷ் மாணிக்கம் | " | தி.மு.க. | 9841111318 |
| 18 | துரை | " | காங் | 8610593573 |
| 19 | நந்தா | " | காங்கிரஸ் | 9042212129 |
| 20 | ஆதிநாராயணன் | " | காங்கிரஸ் | 9840134335 |
| 21 | ரகுச்சந்தர் | " | காங்கிரஸ் | 9444162410 |
| 22 | சாரணாத் | " | வி.சி.க | 9884082930 |
| 23 | எஸ்.கே சிவா | " | இ.க.கட்சி | 9444231216 |
| 24 | வேல் முருகன் | " | மா.க.கட்சி | 9444047038 |
| 25 | கழக குமார் | " | ம.தி.மு.க | 9500133889 |
| 26 | சுப்பிரமணி | " | ம.தி.மு.க | 7550206491 |
| 27 | முத்துராஜ் | " | த.வா.கட்சி | 9597861222 |
| 28 | செல்வம் | " | த.வி.தொ.கட்சி | 9841083040 |
| 29 | பிரவீன் | " | ம.நீ.ம | 9600007339 |
| 30 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.கட்சி | 9500024593 |
| 31 | வினோத் குமார் | " | ஆம்.ஆத்மி | 9381955966 |
| 32 | பீர் முகமது | " | இ.மு.லீக் | 9884416133 |
| 33 | அகமது அலிஜின்னா | " | ம.நே.ம.க | 9940511973 |
| 34 | பிஸ்மில்லா கான் | " | த.மு.மு.க | 7299119550 |
| 35 | எம். ஹாஜா | " | த.மா.தே.லீக் | 9941445544 |
| 36 | மேத்யூஸ் | " | கி.ந. இ. | 72000 42123 |
| 37 | துரை மாணிக்கம் | " | ச.ம.க. | 98416 23534 |
| 38 | விஜய் | " | அ.தி.ம.மு.க. | 79042 68883 |
| 39 | மூர்த்தி | " | மு.பு.ப. | 94442 16172 |

**கே.எஸ். ரவிச்சந்திரன் - 9840022250**
**தொகுதி பொறுப்பாளர்**

### தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு விவரம்

| வ.எண் | பொறுப்பாளர் பெயர் | பொறுப்பு | கட்சி | தொடர்பு எண் |
|---|---|---|---|---|
| 1 | ஜெ.கருணாநிதி | தலைவர் | தி.மு.க. | 9444183111 |
| 2 | கே.ஏழுமலை | செயலாளர் | தி.மு.க. | 9500199992 |
| 3 | எஸ்.மோகன் | உறுப்பினர் | தி.மு.க. | 9789812345 |
| 4 | கோ.சு மணி | " | தி.மு.க. | 9940482233 |
| 5 | மாம்பலம் சந்திர சேகர் | " | தி.மு.க. | 9444053222 |
| 6 | மு.சத்தியா | " | தி.மு.க. | 7200665678 |
| 7 | வாசுதேவன் | " | தி.மு.க. | 9382167184 |
| 8 | அம்பேத்கர் | " | தி.மு.க. | -- |
| 9 | ஆறுமுகம் | " | தி.மு.க. | 9444326600 |
| 10 | ஜானகிராமன் | " | தி.மு.க. | 9444118899 |
| 11 | ராஜா அன்பழகன் | " | தி.மு.க. | 9790966669 |
| 12 | பழனிகிரமணியார் | " | தி.மு.க. | 9940414140 |
| 13 | உமா சங்கர் | " | தி.மு.க. | 9940391391 |
| 14 | டேன்டி பிரகாஷ் | " | தி.மு.க. | 9445444445 |
| 15 | அஸ்வின் குமார் | " | தி.மு.க. | 9677049694 |
| 16 | முத்தழகன் | " | காங் | 9841026696 |
| 17 | கரிகாவளவன் | " | வி.சி.க | 9962304323 |
| 18 | இ.கருணாநிதி | " | இ.க.கட்சி | 9381023046 |
| 19 | வேல் முருகன் | " | மா.க.கட்சி | 9444047038 |
| 20 | கழக குமார் | " | ம.தி.மு.க | 9500133889 |
| 21 | சுப்பிரமணி | " | ம.தி.மு.க | 7550206491 |
| 22 | முத்துராஜ் | " | த.வா.கட்சி | 9597861222 |
| 23 | செல்வம் | " | த.வி.தொ.கட்சி | 9841083040 |
| 24 | பிரவீன் | " | ம.நீ.ம | 9600007339 |
| 25 | பாலசுப்பிரமணியன் | " | கொ.ம.தே.கட்சி | 9500024593 |
| 26 | வினோத் குமார் | " | ஆம்.ஆத்மி | 9381955966 |
| 27 | பீர் முகமது | " | இ.மு.லீக் | 9884416133 |
| 28 | அகமது அலிஜின்னா | " | ம.நே.ம.க | 9940511973 |
| 29 | பிஸ்மில்லா கான் | " | த.மு.மு.க | 7299119550 |
| 30 | எம். ஹாஜா | " | த.மா.தே.லீக் | 9941445544 |
| 31 | மேத்யூஸ் | " | கி.ந. இ. | 72000 42123 |
| 32 | துரை மாணிக்கம் | " | ச.ம.க. | 98416 23534 |
| 33 | விஜய் | " | அ.தி.ம.மு.க. | 79042 68883 |
| 34 | மூர்த்தி | " | மு.பு.ப. | 94442 16172 |

**அப்துல் மாலிக் - 9952447423 (தொகுதி பொறுப்பாளர்)**

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

**மயிலை த.வேலு**
செயலாளர், சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், புதிய திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கே.எஸ்.ராஜ்கவுண்டர் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர்.



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேப்பாக்கம் பகுதியில் பல்வேறு வட்டங்களில் தேர்தல் பணிமனைகளை மத்திய சென்னை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் தயாநிதி மாறன் எம்.பி. திறந்து வைத்தார். உடன் சென்னை மேற்கு மாவட்ட செயலாளரும், பணிகள் நிலைக்குழுத் தலைவருமான நே.சிற்றரசு, பகுதிச் செயலாளரும் மண்டலக்குழுத்தலைவருமான எஸ்.மதன்மோகன், தேர்தல் பொறுப்பாளர் சி.எச்.சேகர், மா.பா.அன்புதுரை ஆகியோர் உள்ளனர்.

### கவிச்சக்கரவர்த்தி

# கம்பர் திருவுருவச் சிலைக்கு - இன்று மலர் வணக்கம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச் 24-

கவிச்சக்கரவர்த்தி கம்பர் திருவுருவச் சிலைக்கு இன்று மலர் வணக்கம் செய்யப்படுவது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கம்பன் ஓர் உலகப் பெருங்கவிஞர்; உலகப் பெருங் காப்பியங்களின் வரிசையில், உன்னதமான இடம் வகிக்கும் ஒரு பெருங்காப்பியத்தைப் படைத்த பெருமைக்கு உரியவர்; 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று சொல்லிப் பெருமிதம் கொள்ளும் அளவிற்கு அருந்தமிழுக்கு அழியாதப் புகழ் சேர்த்தவர். இராமாவதாரம் என்ற கம்பர் காப்பியம் பாலக் காண்டம், அயோத்தியாக் காண்டம், ஆரணியக் காண்டம், இலங்கைக் காண்டம் என ஆறு காண்டங்களாக 10,368 பாடல்களைக் கொண்டது. ஒரு பாடலுக்கு நான்கு சீர்களில் இருந்து எட்டுச் சீர்கள் வரையிலான நான்கு அடிகளைக் கொண்ட பாடல்களைக் கொண்டு படைத்தார்.

கம்பன் உருவாக்கிய காப்பிய மரபுகள், அவருக்குப் பின் காப்பியப் படைப்பில் ஈடுபட்ட அனைத்துக் கவிஞர்களாலும் பின்பற்றப்பட்டன என்பதில் ஐயமில்லை.

'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்றவை கம்பர் படைத்த படைப்புகளாகும். கம்பரின் கவித்திறனை நேரில் கண்டு வியந்த சோழ மன்னர், 'கவிஞர்களின் பேரரசர்' என்றும் 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் பட்டம் சூட்டினார். "கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றொரு பழமொழியே உருவாகும் அளவிற்கு, கம்பரது புகழும், கவித்திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது.

கவிச்சக்கரவர்த்தியை நினைவுகூரும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் ஆண்டுதோறும் மார்ச்சுத் திங்கள் 24ஆம் நாளன்று சென்னை அண்ணா சதுக்கத்திலுள்ள கம்பர் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வகையில், இன்று (24.03.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு கம்பர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து சிறப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் இருப்பதால், அரசு செயலாளர், தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அலுவலர்கள், பொது மக்கள் ஆகியோர் மட்டும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தலைமையில்

# வேட்பாளர் ராணி ஸ்ரீகுமார் அறிமுகக் கூட்டம்!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிவிப்பு!

தென்காசி, மார்ச் 24 -

நாடாளுமன்றத் தேர்தல் 2024 தென்காசி நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் அறிமுக கூட்டம் இன்று (24 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை)காலை 10:30 மணி அளவில் குற்றாலம் காசி மேஜபுரம் ஸ்ரீ முருகன் மகாலில் வைத்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது என தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே. ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.தொடர்ந்து கழகத்தினர் மற்றும் கூட்டணி கட்சியினர் தேர்தல் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

அதன்படி தென்காசி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட தென்காசி கடையநல்லூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகள் சார்பில் இன்று(24 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை)காலை 10:30 மணி அளவில் குற்றாலம் காசிமேஜபுரம் ஸ்ரீ முருகன் மஹாலில் வைத்து இந்தியா கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் அறிமுக கூட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தில் தென்காசி நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தென்காசிகடையநல்லூர் தொகுதி மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.

மேலும் வெற்றி ஒன்றே குறிக்கோள் என்று நினைத்து அனைவரும் தீவிரமாக களப் பணி ஆற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# மயிலை கிழக்கு பகுதியில் பணிமனை திறப்பு!

## மயிலை த.வேலு - கே.எஸ்.ரவிச்சந்திரன் - எஸ்.முரளி - நந்தனம் மதி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 23-

தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து இன்று (24.03.2024) மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகத்தில் காலை 9 மணி அளவில் மயிலை கிழக்கு பகுதிக் கழக சார்பில் தேர்தல் பணிமனை திறப்பு நிகழ்ச்சி பகுதிச் செயலாளர் எஸ். முரளி தலைமையில், நந்தனம் மதி முன்னிலையில், பகோடா முனுசாமி, எல். உதயகுமார், குமாரி, பி.எல். தாஸ், வட்டக் கழக செயலாளர்கள்: ஏ.தாஸ், மா. பாஅன்பு, அ.தவனேசன், வே.வெற்றி, கோ. கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

தேர்தல் பணி மனை திறப்பாளர் மயிலைத. வேலு எம்.எல்.ஏ. (சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர்) தொகுதி பொறுப்பாளர் கே.எஸ். ரவிச்சந்திரன், கழகத் தோழர்களுக்கு ஆலோசனையும் வழங்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த திருமதி கீதா முரளி எம்.சி., விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., ரேவதி எம்.சி., அமிர்தவர்ஷினி எம்.சி., மற்றும் மயிலை கிழக்கு பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், மாவட்ட கழக , அனைத்து அணிகளின் நிர்வாகிகள் , பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2 (பாக முகவர்கள்) BLC (பாக உறுப்பினர்கள்), கழகத் தோழர்கள் மற்றும் இந்திய கூட்டணியின் தோழமைக் கட்சி நிர்வாகிகள் எனஅனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### 'இந்தியா' கூட்டணியின் மார்க்சிஸ்ட் வேட்பாளர் சு.வெங்கடேசனை ஆதரித்து - இன்று

# மதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாக்கு சேகரிப்பு!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, மார்ச் 24 -

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வேட்பாளர் தோழர் சு. வெங்கடேசன் அவர்களை ஆதரித்து இன்று (24.03. 2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணியளவில் மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோ.புதூர் பேருந்து நிலையம் அருகில் தேர்தல் பரப்புரை மேற்கொண்டு, பொதுமக்களிடம் வாக்கு சேகரிக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாநகர் முன்னாள் மாவட்டச் செயலாளர்

# சொ.காவேரி மணியம் நினைவு தினம்!

## கோ.தளபதி எம்.எல்.ஏ. – பொன் முத்துராமலிங்கம் – வ.வேலுசாமி – பெ.குழந்தைவேலு அஞ்சலி!

மதுரை, மார்ச் 24 -

மதுரை மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளர் சொ.காவேரி மணியத்தின் 18 வது நினைவு தின நிகழ்ச்சியை முன்னிட்டு அவனியாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் திருவுருவ ப்படத்திற்கு மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மற்றும் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மா.ஜெயராமன், கே.தன செல்வம், மா.ஒச்சுபாலு, காவேரி சொக்கலிங்கம், மூவேந்திரன், அக்ரி கணேசன், ராகவன், வைகை பரமன், சௌந்தரராஜன், விஜய லட்சுமி பாண்டியன், மா.முத்துராமலிங்கம், எஸ்.எஸ்.மாறன், கருப்பசாமி, கிருஷ்ண பாண்டியன், ஆறுமுகம், சுபா கண்ணன், சண்முகம், சீனி ரமேஷ், திராவிட மாரி உள்ளிட்ட பலர் பங்கேற்றார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை காவேரி சொக்கலிங்கம், அண்ணாதுரை, கௌதம், காவேரி மணியம், மனோகர், ஹரிஹரன், கண்ணன், மூர்த்தி, ரவி முனீஸ்வரன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.பி.சேசுராசன்

**மார்ச் 24 (2022)**



தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக கொரடாச்சேரி ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும் – இரண்டு முறை ஒன்றியக்குழு துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!

### ப.அப்துல்மாலிக் - பிரபு கஜேந்திரன் பங்கேற்பு!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் அ.யுவராஜ் அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கூட்டம் இன்று (24.3.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9:30 மணி அளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ப.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பெ.மணி, க.பால்ராஜ், டி.சஞ்சய் காந்தி, ஆன்டோ சிரில் ராஜ், ம.அருள் முருகன், ஆர்.எஸ்.யுவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

அதுபோது ஒன்றிய, நகர, பேரூர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அ.யுவராஜ்**
அமைப்பாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.
இளைஞர் அணி



அம்பத்தூர் 89–வது வட்டத்தில் நடைபெற்ற இந்தியா கூட்டணி நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் –அமைச்சர்பி.கே.சேகர்பாபுசிறப்புரையாற்றினார். உடன்ஜோசப்சாமுவேல்எம்.எல்.ஏ., பி.டி.சி.செல்வராஜ், பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.இ.சேகர் உள்ளிட்டோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான **மு.க. ஸ்டாலின் அவர்கள்** நேற்று (23.3.2024) திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரியில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மக்களவைத் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், தஞ்சாவூர் தொகுதி வேட்பாளர் ச. முரசொலி அவர்களையும், நாகப்பட்டினம் தொகுதி வேட்பாளர் வை. செல்வராஜ் அவர்களையும் அறிமுகப்படுத்தி, இந்தியா கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் பெருமக்கள் எஸ். இரகுபதி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், செல்வராஜ், பழனிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், துரை சந்திரசேகரன், அண்ணா துரை, கௌதமன் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.





கழக இளைஞர் அணிச் செயலாளர் **அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** இந்தியா கூட்டணியின் சார்பில் இராமநாதபுரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர் நவாஸ் கனியை ஆதரித்து திருச்சுழி, காரியாபட்டியில் பிரச்சாரம் மேற்கொண்டு, ஏணி சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.





கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற தேர்தலில் விருதுநகர் தொகுதியில் "இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக திருமங்கலம் நகரில் "கை சின்னத்திற்கு வாக்கு கேட்டு பரப்புரை மேற்கொண்டார்.





கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ., காங்கிரஸ் கட்சியின் 'கை' சின்னத்துக்கு ஆதரவாக, விருதுநகர் மக்களவைத் தொகுதி அருப்புக்கோட்டையில் நேற்று பிரச்சாரம் செய்தார்.

## இந்தியத் துணைக் கண்டத்துக்கே மிக மிக முக்கியமான தேர்தல்:

# 40 க்கு 40 வெல்வதே நம் இலட்சியம்!

## இராமநாதபுரத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சுற்றுப்பயணத்தைத் தொடங்கி எழுச்சியுரை!

**இராமநாதபுரம், மார்ச் 24 -**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நேற்று மாலை இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி, திருச்சுழியில், இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் வேட்பாளர் நவாஸ்கனி அவர்களுக்கு ஏணி சின்னத்தில் வாக்கு கேட்டு, தனது தேர்தல் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கினார்.**

அப்போது அவர், ``இந்தியத் துணைக் கண்டத்துக்கே மிக மிக முக்கியமான தேர்தல் இது. 40 க்கு 40 வெல்வதே நம் லட்சியம்” என்று குறிப்பிட்டார்.

பெரும் திரளாக கடல் போல கூடியிருந்த மக்கள் மத்தியில், அவர் ஆற்றிய எழுச்சியுரையின் விவரம் வருமாறு:

### முதல் பிரச்சாரம்

இந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு என்னுடைய முதல் பிரச்சாரக் கூட்டம் இது. உங்களுடைய எழுச்சியையும் வரவேற்பையும் பார்க்கும்போது, நான் உங்களிடத்தில் நம்முடைய வெற்றிச் சின்னம் ஏணி சின்னத்தில் நவாஸ் கனி அவர்களுக்கு வாக்கு கேட்க வேண்டிய அவசியமே இல்லை என்று தோன்றுகிறது. நிச்சயமாக, அதிகமான வாக்கு வித்தியாசத்தில் அண்ணன் நவாஸ் கனி அவர்கள் வெற்றி பெறப் போவது உறுதி.

அதுவும் இப்படி ஆயிரக்கணக்கில் தாய்மார்கள் கூடி, இளைஞர்களோடு சேர்ந்து இவ்வளவு பெரிய எழுச்சியைக் கொடுக்கும்போது, ஏற்கெனவே நீங்கள் அவரை வெற்றி பெறச் செய்ய முடிவு செய்து விட்டீர்கள் என்பது தெரிகிறது. வருகின்ற ஏப்ரல் 19 ஆம் தேதி வாக்குச் சாவடிக்குச் செல்லும்போது, உங்கள் கண்ணில் தெரியப் போகிற ஒரே சின்னம், ஏணிச் சின்னமாகத்தான் இருக்கும்.

கடந்த முறை நம் கழக வேட்பாளர் அண்ணன் நவாஸ் கனி அவர்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பாக 4 லட்சத்து 70 ஆயிரம் வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். இந்த முறை நீங்கள் எனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும். 4 லட்சத்து 70 ஆயிரம் போதாது. குறைந்தது 5 லட்சம் வாக்குகள் பெற்று, நீங்கள் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

சென்ற முறை அவரை எதிர்த்துப் போட்டியிட்ட, பாரதிய ஜனதா வேட்பாளர் நைனார் நாகேந்திரனைவிட ஒரு லட்சத்து 30 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் நம் கூட்டணியை வெற்றி பெற வைத்தீர்கள். இந்த முறை அதைவிட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

### வாக்கு வித்தியாசம்

அதேபோல, 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இந்த திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் நம் அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களை ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 300 வாக்குகள், அதாவது, சுமார் 61 சதவிகித வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தீர்கள்.

இந்த ராமநாதபுரம் மாவட்டம், நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு எப்போதுமே உறுதுணையாக இருக்கக்கூடிய பாராளுமன்றத் தொகுதி. அதனால், இங்கு நமக்கு வெற்றி உறுதி. அதை இறுதி செய்வது மட்டும் தான் உங்கள் கடமை.

நான் இங்கு இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த பத்து ஆண்டு கால ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ்நாட்டுக்கு என்ன செய்தது என்பதை மட்டும் யோசித்துப் பாருங்கள். ஏதாவது செய்தார்களா? ஒன்றே ஒன்று மட்டும் கேட்கிறேன்.

கடந்த பத்து வருடத்தில் ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எத்தனை முறை தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்? தேர்தலுக்குத் தேர்தல் மட்டும்தான் அவர் வருவார். 2014 இல் வந்தார். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டிவிட்டுப் போனார். இருந்தது ஒரே கல். அந்தக் கல்லையும் நான் எடுத்து வந்துவிட்டேன்.



மீண்டும் 2019ஆம் ஆண்டு வந்தார். அதன் பிறகு வந்தாரா? இப்போது கடைசியாக 10 நாட்களில் ஒரு வாரமாக தமிழ்நாட்டைத்தான் சுற்றிச் சுற்றி வருகிறார். தேர்தல் வருகிறது என்பதால் வந்திருக்கிறார். ஒன்றியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களே... தமிழ்நாட்டின் மீது உங்களுக்கு உண்மையாகவே அக்கறை இருந்திருந்தால், நீங்கள் எப்போது வந்திருக்க வேண்டும்? தமிழ்நாட்டில் மிகப்பெரிய `மிக்ஜாம் புயல்' அடித்தது ஞாபகம் இருக்கிறதா?

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் மிகப்பெரிய மழை. ஒரு வருடம் பெய்ய வேண்டிய மழை, ஒரே நாளில் பெய்தது. வந்து எட்டிப் பார்த்தார்களா? நம் தலைவர் `37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு மக்களுக்குக் கொடுக்க வேண்டும் கொடுங்கள்' என்று கேட்டார்.

### புதிய கல்விக் கொள்கைத் திட்டம்

கொடுத்தார்களா? கடந்த 10 வருடங்களில் அ.தி.மு.க அடிமை ஆட்சி, நமது மாநில உரிமைகள் அனைத்தையும் ஒன்றிய பா.ஜ.க.விடம் அடகு வைத்திருக்கிறது. அவ்வாறு அடகு வைக்கப்பட்ட முதல் உரிமை, மொழி உரிமை. என்.ஏ.பி, அதாவது நேஷனல் எஜுகேஷனல் பாலிசி. புதிய கல்விக் கொள்கைத் திட்டம். இந்தப் புதிய கல்விக் கொள்கைத் திட்டத்தில் தமிழை அழித்துவிட்டு சமஸ்கிருத மொழியையும், இந்தி மொழியையும் திணிக்கப் பார்க்கிறார்கள். இப்போது பத்தாம் வகுப்புக்குப் பொதுத் தேர்வு எழுதுகிறார்கள் மாணவர்கள். இந்தப் புதிய கல்விக் கொள்கை வந்ததென்றால், எட்டாம் வகுப்புக்கும் பொதுத் தேர்வு. எட்டாம் வகுப்பு மட்டுமல்ல. ஐந்தாம் வகுப்புக்கும் கூடப் பொதுத்தேர்வு வந்துவிடும்.

### ஒரு காசுகூட கொடுக்கவில்லை

அ.தி.மு.க. அடகுவைத்த இன்னொரு உரிமை, நிதி உரிமை. நாம் 37 ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என்று கேட்டேன். கொடுத்தார்களா? ஒரு காசு கூட கொடுக்கவில்லை. கடந்த ஐந்து வருடத்தில் தமிழ்நாடு, ஒன்றிய அரசுக்குக் கொடுத்திருக்கக் கூடிய வரிப் பணம் ஆறரை லட்சம் கோடி. தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு எவ்வளவு தெரியுமா திரும்பக் கொடுத்திருக்கிறார்கள்? வெறும் ஒன்றரை லட்சம் கோடி.

தமிழ்நாட்டிலிருந்து நாம் ஒவ்வொருவரும் ஒன்றிய அரசுக்குக் கொடுக்கக்கூடிய வரிப்பணம் ஒரு ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். நாம் ஒரு ரூபாய் கொடுத்தால், அவர்கள் நமக்குத் திருப்பித் தருவது வெறும் 28 பைசா மட்டும்தான். அதனால்தான், ‘இனிமேல் நான் நரேந்திர மோடி அவர்களை, பெயரைச் சொல்லிக் கூப்பிட மாட்டேன். இனிமேல் அவர் பெயர், `ஒன்றியப் பிரதமர் வெறும் 28 பைசா என்றுதான் அழைக்கப் போகிறேன்' என்று சொன்னேன். இனி நீங்களும் அப்படிக் கூப்பிட வேண்டும்.

### ஏழை எளிய மாணவர்கள்

அடுத்து, கல்வி உரிமை. ‘நீட்’ தேர்வைக் கொண்டு வந்தார்கள். இந்தியா முழுக்க நீட் தேர்வு வந்துவிட்டது. ஆனால், தமிழ்நாட்டுக்குள் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்தவரைக்கும் நீட் தேர்வை அனுமதிக்கவே இல்லை. கிராமப்புறங்களில் இருந்து வரும் ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறும் விதமாக, அவர்களின் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் போதும் என்று சொல்லி, நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று நீட் தேர்வு வேண்டாம் என்று சொன்னது டாக்டர் கலைஞர்தான்.

அந்த அம்மையார் இறந்த பிறகு, இந்த அடிமைகள் பா.ஜ.க பேச்சைக் கேட்டு நீட் தேர்வைக் கொண்டு வந்தனர். அதனால், அரியலூரில் 1200 க்கு 1178 மதிப்பெண் வாங்கிய அனிதாவில் ஆரம்பித்து, சென்ற வருடம் சென்னையில் ஜெகதீசன் என்ற ஒரு தம்பி வரையில் என கிட்டத்தட்ட 22 குழந்தைகள் இந்த நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

நாம் தேர்தல் அறிக்கையில் சொல்லி இருக்கிறோம். ஒன்றியத்தில் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமைத்தால் நீட் தேர்வைக் கண்டிப்பாக ரத்து செய்வோம் என்று, வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். அது மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்துச் சுங்கச்சாவடிகளையும் ஒழித்துக் காட்டுவோம்.

### கேஸ் சிலிண்டர் விலை

கேஸ் சிலிண்டர் விலை 2014இல் எவ்வளவு இருந்தது? வெறும் 450 ரூபாய் இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தி இன்று கிட்டத்தட்ட 900 ரூபாய் அளவுக்கு உயர்த்துவிட்டார் மோடி. இன்றைக்கு மோடி அவர்கள் ஒரு நாடகம் ஆடுகிறார். தேர்தல் வந்தவுடன் 100 ரூபாய் குறைத்திருக்கிறார். ஆனால், நாம் தேர்தல் அறிக்கையில் சொல்லி இருக்கிறோம். கண்டிப்பாக நம் ஆட்சி அமைந்தது என்றால், கேஸ் சிலிண்டர் விலை 500 ரூபாய் ஆக்கப்படும்.

அதுமட்டுமல்ல. பெட்ரோல் விலை 25 ரூபாய் குறைக்கிறோம் என்றும், டீசல் விலை 65 ரூபாய்க்குக் குறைக்கிறோம் என்றும் சொல்லி இருக்கிறோம். இவையெல்லாம் நடக்க வேண்டும் என்றால் வருகின்ற ஏப்ரல் 19 ஆம் தேதி ஏணிச் சின்னத்தில் வாக்களித்து அண்ணன் நவாஸ் கனி அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

ஏதோ, ‘உதயநிதி வந்தார், கூட்டம் கூட்டினோம், பேசினார், கைதட்டினோம், கலைந்து போய் விட்டோம்’ என்று இருக்கக் கூடாது. நான் இன்றைக்கு முடித்துவிட்டு அடுத்த தொகுதிக்கு போய் விடுவேன். எனக்குப் பிறகு தலைவர் வருவார். தலைவர் கண்டிப்பாக பிரச்சாரத்துக்கு வருவார். உங்களை எல்லாம் சந்திப்பார். ஆனால், அடுத்த 25 நாட்கள், இந்தப் பிரச்சாரத்தை நீங்கள் தான் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ‘இந்தப் பத்து ஓட்டுக்கு நான்தான் பொறுப்பு’, ‘இந்தப் பத்து வீட்டிற்கு நான்தான் பொறுப்பு’ என ஒவ்வொரு வீட்டிற்கும் நீங்கள் சென்று இந்தப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

### நான்கு திட்டங்கள்

நம் ஆட்சியில் நாம் செய்திருக்கக் கூடிய சாதனைகளையும் நீங்கள் சொல்ல வேண்டும். நம் தேர்தல் அறிக்கையில் சொன்னதையும் செய்திருக்கிறோம், சொல்லாததையும் செய்தி ருக்கிறோம். அவற்றில் நான்கு திட்டங்களை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்பு கிறேன்.

தலைவர் அவர்கள் பொறுப்பேற்கும் போது கொரோனாவால் மிகப் பெரிய நிதி நெருக்கடியில் தமிழ்நாடு இருந்தது. ஆனாலும் நம் தலைவர், முதல் கையெழுத்துப் போட்டது மகளிர்க்குக் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டத்துக்குத்தான். இந்த மூன்று வருடத்தில் மட்டும் 450 கோடி பயணங்களுக்கு மேல் பெண்கள் பயணம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதா மாதம் 900 சேமிக்கிறார்கள்.

இரண்டாவது திட்டம், குழந்தைகளுக்குக் காலை உணவுத் திட்டம். அரசுப் பள்ளியில் படிக்கக்கூடிய, ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய குழந்தைகளுக்குத் தினமும் பள்ளிக்கூடத்திற்கு வந்தால், நல்ல தரமான காலை உணவு வழங்கப்படுகிறது. இதன் மூலம் பள்ளிக்கூடத்திற்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கி இருக்கிறது.

எல்லா திட்டங்களுக்கும் முத்தாய்ப்பாக இருக்கக்கூடிய திட்டம், ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. இந்தத் திட்டத்தில் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் செப்டம்பர் மாதத்தில் இருந்து இப்போது வரைக்கும் மாதாமாதம் ஆயிரம் ரூபாய் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

உங்கள் முகங்களைப் பார்க்கும் போது ஒரு சிலருக்கு இந்தத் தொகை வராமல் விட்டுப்போயிருப்பது தெரிகிறது. இதில் விண்ணப்பித்தவர்கள் வெறும் ஒரு கோடியே 60 லட்சம் பேர்தான். அதில் ஒரு கோடியே 15 லட்சம் பேருக்குக் கொடுத்திருக்கிறோம். நான் உங்களுக்கு உறுதிமொழி கொடுக்கிறேன். இந்தத் தேர்தல் முடிந்தவுடன் கண்டிப்பாக அதைச் சரி செய்து, விண்ணப்பித்த உங்கள் அத்தனை பேருக்கும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து சேர்ப்போம் என்ற உறுதி மொழியை நான் கொடுக்கிறேன்.

### மிக மிக முக்கியமான தேர்தல்

இந்த முறை நடைபெறுவது, இந்திய துணைக் கண்டத்துக்கே மிக மிக முக்கியமான தேர்தல். ஒரு பக்கம் நிற்பது, நம்முடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அவரை எதிர்த்து நிற்பது நரேந்திர மோடி. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினா நரேந்திர மோடியா என்று பார்த்து விடலாமா? செய்து காட்டுவீர்களா? உங்களை நம்பலாமா?

(பொது மக்கள் பெரும் ஆரவாரத்துடன் நம்பலாம் என்று குரல் எழுப்பினர்)

ஜூன் மூன்றாம் தேதியை முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள். ஓட்டு எண்ணிக்கை, நான்காம் தேதி. நாம் அனைவரும் கலைஞர் அவர்களுக்கு நூறாவது பிறந்தநாள் பரிசாக தமிழ்நாடு புதுச்சேரியில் 40 க்கு 40 வெற்றி பெற்று வழங்க வேண்டும். நம் தலைவர், நம் தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை எல்லாம் மீட்க வேண்டும் என்றால் நாம் யாரைப் பிரதமராக்க முடிவு செய்கிறோமோ, அவர்தான் அடுத்த ஒன்றியப் பிரதமராக அமர வேண்டும்.

அதற்கு நீங்கள் அத்தனை பேரும் அடுத்த 25 நாள் பிரச்சாரத்தை மேற்கொண்டு நம்முடைய ஏணிச் சின்னத்தில் அண்ணன் நவாஸ் கனி அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால், உங்களுடைய குரலாக அண்ணன் நவாஸ் கனி அவர்கள் எதிரொலிப்பார்கள் என்று சொல்லி, இந்த மிகச் சிறப்பான எழுச்சியான வரவேற்பு கொடுத்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களையெல்லாம் அன்போடு, பாசத்தோடு, பணிவோடு, உரிமையோடு கேட்கிறேன். நம் தலைவர் அவர்களின் மகனாக இருந்து கேட்கிறேன். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். ஏணி சின்னத்தில் அண்ணன் நவாஸ் கனி அவர்களை மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புங்கள்.

உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றி! நன்றி, வணக்கம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இந்தப் பிரச்சாரத்தில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், மூர்த்தி, ராஜ கண்ணப்பன், மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா என்கிற முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், இளைஞர் அணித் துணைச் செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா (ஏ) ரகு, இளைஞர் அணி அமைப்பாளர்கள் கிருஷ்ணகுமார் மணிராஜ் சம்பத்ராஜா உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

## சி.பி.ஐ. உள்ளிட்ட விசாரணை அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்துப் போராட்டம்!

### டெல்லியில் மார்ச் 31 – அன்று ‘இந்தியா’ கூட்டணி சார்பில் நடைபெறுகிறது!

புதுடெல்லி, மார்ச் 24 -

சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க.வைக் கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி ‘இந்தியா’ கூட்டணி சார்பில் டெல்லியில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் வகையில் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை பயன்படுத்தி வருகிறது.

ஜார்க்கண்ட் முதலமைச்சராக இருந்த ஹேமந்த் சோரன் கடந்த மாதம் அமலாக்கத்துறை கைது செய்தது.

இந்நிலையில், டெல்லி மதுபானக் கொள்கை வழக்கு தொடர்பாக, டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெஜ்ரிவாலின் இந்த கைது நடவடிக்கைக்கு ‘இந்தியா’ கூட்டணி கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத் துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க.வைக் கண்டித்து மார்ச் 31 ஆம் தேதி ‘இந்தியா’ கூட்டணி சார்பில் டெல்லியில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## நாடாளுமன்றத் தேர்தல்:

# தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்கள்!

### முதல் பட்டியல் வெளியீடு!

புதுடெல்லி, மார்ச் 24 –

நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமழ்நாடு காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களின் முதல் பட்டியல் நேற்று இரவு வெளியிடப்பட்டது. அதில் 7 தொகுதிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. நெல்லை, மயிலாடுதுறை தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பெயர் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கரூர் | – ஜோதிமணி |
| கிருஷ்ணகிரி | – கோபிநாத் |
| திருவள்ளூர் | – சசிகாந்த் செந்தில் |
| கன்னியாகுமரி | – விஜய் வசந்த் |
| சிவகங்கை | – கார்த்தி சிதம்பரம் |
| விருதுநகர் | – மாணிக்கம் தாகூர் |
| கடலூர் | – விஷ்ணுபிரசாத் |

# முதல்வர் ஸ்டாலின் அழைக்கிறார் அணிவகுப்போம் வாரீர்!

முதல்வர் - கழகத்தலைவர் 22/3/2024ஆம் நாள் சென்னை ஆளுநர் மாளிகையான "ராஜ்பவனில்" பொன்முடி அவர்களுக்கு ஆளுநர் ஆர்.என். ரவியின் மூலம் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். ஆளுநர் ஆர்.என். ரவி இந்திய உச்சநீதிமன்றத்தின் காலஅவகாசம் நிர்ணயிக்கப்பட்ட கடுமையான தீர்ப்பின் காரணமாக பொன்முடி அவர்களுக்கு முதலமைச்சர் முன்னிலையில் அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு முதல்வர் அவர்கள், திருச்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார். திருச்சியில் தன்னுடைய நாடாளுமன்றத்தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கும் முன்னர் சமூகவலைதளத்தில் தன்னுடைய கருத்தைப் பதிவு செய்துள்ளார் சமூகவலைதளத்தில் பதிவுசெய்துள்ள அந்தக் கருத்துக்களை "இந்து" ஆங்கில நாளிதழ் 23/3/2024ம் நாள் முதல் பக்கத்திலேயே வெளியிட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களையும், உயிரோட்டத்தையும், அரசியல் சட்டத்தின் காப்பாளர் என்ற முறையில் சரியான காலகட்டத்தில் தலையிட்டு அரசியல் சட்டத்தையும், அதன் அடிநாதமான ஜனநாயகத்தையும் காப்பாற்றியமைக்காக உச்சநீதிமன்றத்திற்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் தமிழ்மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். ("On behalf of the people of Tamil Nadu, I thank the Hon'ble Supreme Court, the custodian of the Constitution, for its timely intervention and upholding the spirit of the Constitution and saving the democracy" Page No - 1, Hindu News paper Date: 23/3/2024)

மேலும் கடந்த 10 ஆண்டுகால பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியில் ஜனநாயகம் என்பது முற்றிலுமாக உருக்குலைக்கப்பட்டுள்ளது, இந்திய ஒன்றியத்தின் கூட்டாட்சி என்பது செயலற்று தலைகீழ் மாற்றமடைந்துள்ளது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களின் ஆட்சிகள் முழுவீச்சில் சுதந்திரமாக செயல்படமுடியாமல் ஒன்றிய பா.ஜ.க. அரசால் தடைகள் உருவாக்கப்படுகிறது. பன்னெடுங்காலமாக மக்கள் பின்பற்றி வந்த பண்பாடுகளும், தொன்மையான பழக்க வழக்கங்களும், ஒன்றிய அரசின் செயல்பாடுகளால் சிதைந்துச் சின்னாபின்னமாக்கப்படுகின்றன. எனவே இந்த ஆண்டு 2024 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல் மூலம் ஜனநாயகத்தையும் காப்பாற்ற வேண்டும், இந்திய அரசியல்சட்டத்தையும் பாதுகாக்கவேண்டும், மேலும் நம்முடைய ஓய்வறியா கடினமான தேர்தல் பணியின் மூலம், அதிகார அத்துமீறல்களையும், பாசிச சக்திகளையும் தடுத்து நிறுத்திடவேண்டும் இல்லையெனில், பாரம்பரியமும், தொன்மைப் பெருமைகளையும் உள்ளடக்கிய நம்நாடு மிகப்பெரிய சீர்குலைவைச் சந்திக்கநேரிடும் என்று பதிவிட்டுள்ளார். ("dithering of democracy, withering of federalism and misadventures to put spikes before the functioning of sovereign governments elected by the people and giving ageold traditions a go by" Mr. Stalin contended. Underlining that the 2024 Lok Sabha election was "crucial to save the democracy and uphold the Constitution," Mr. Stalin said: "Let us strive hard to prevent the brazen abuse of the power by fascist forces threatening to ruin our glorious Nation" Hindu, Date: 23/03/2024, Page:10)

இந்திய நாடு எதிர்கொள்ளயிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும்கட்சி யின் எதிர்க்கட்சிகளும் மக்களைச் சந்தித்து, ஆளும்கட்சிகள் தங்களுடைய சாதனைகளை எடுத்துச் சொல்லியும், எதிர்கால வாக்குறுதிகளை மக்கள்முன் விளக்கி, அதன்மூலம் மக்களின் உள்ளங்களில் நம்பிக்கையை உருவாக்கி, ஆதரவு கோருவது தான் நடைமுறையாகும். அதேபோன்று எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியின் குறைபாடுகளையும், வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத திறமையின்மையையும் மக்களிடம் எடுத்துவிளக்கி, தங்களின் வாக்குறுதிகள் மீது மக்களுக்கு ஓர் நம்பிக்கையை உருவாக்கி ஆதரவு திரட்டுவது எதிர்க்கட்சிகளின் பணியும் பண்பாடும் ஆகும். ஆனால் இந்திய அரசியல் அரங்கத்தில் பாரதிய ஜனதாக் கட்சி 2014 ஆம் ஆண்டு ஆட்சி அமைத்த நாள் தொடங்கி ஜனநாயக ஆட்சி முறையை உருக்குலைப்பதிலும, கூட்டாட்சி முறையை படிப்படியாக குறைத்து மாநிலங்களுக்கான அதிகாரங்களை படிப்படியாக கையகப்படுத்தி மாநிலங்களை வலுவிலக்கச் செய்யும் பணிகள் தொடர்ந்து திட்டமிட்டு அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த திரைமறைவு திட்டமிட்ட நடவடிக்கையின் வெளிப்பாடுதான் ஒன்றிய அரசின் கொள்கை முழக்கமான "ஒரே நாடு ஒரே தேர்தல்" என்ற முழக்கமாகும். அதுமட்டுமல்ல; அந்த ஒரே நாடு 'இந்து ராஷ்டிரம்' என்ற மதசார்புள்ள நாடாக இருக்க வேண்டும் என்பது அவர்களது திட்டம். பன்முகத்தன்மை கொண்ட பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்திய துணை கண்டத்திற்கு மதம் சார்ந்த "இந்துராஷ்டிர" கோட்பாடு பொருந்துமா என்பதை அனைத்து இந்தியதுணைகண்டவாழ் அனைவரும் ஆழ்ந்து சிந்தித்து நாட்டின் எதிர்கால ஒற்றுமையையும் கணக்கில் எடுத்துக்கொண்டு முடிவெடுக்க வேண்டிய காலத்தின் கட்டாயமும், சரித்திர நிர்பந்தமும் இந்திய நாட்டு மக்களுக்கு இன்று உருவாகியுள்ளது. இந்த அரசியல் சூழ்நிலையில்தான் இந்திய நாட்டின் தென்கோடியில் உள்ள தமிழ்நாட்டின் முதல்வரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கும், இந்திய நாட்டு மக்களுக்கும் 22.3.2024 அன்று திருச்சியில் நடைபெற்ற முதல் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கும், பாசிசத்தை வேரறுப்பதற்கும், நாட்டின் ஒற்றுமையை தொடர்ந்து நிலைநாட்டுவதற்கும் அவர் அனைத்து மக்களையும் அழைக்கிறார். அவரது அழைப்பின் அதிர்வலைகள் இந்தியநாடு முழுமையும் மக்களின் உள்ளங்களிலே புதிய மறுமலர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருப்பதை நம்மாலே அறிய முடிகிறது.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



ஜனநாயகத்தில் ஆளுகின்ற வாய்ப்பினை பெற்ற அரசியல் கட்சிகள் தவறிழைக்குமேயானால், அவர்களை மீண்டும் அதிகார மையத்திற்கு வரவிடாமல் தடுக்கின்ற உரிமை மக்களிடம்தான் உள்ளது. இந்த அடிப்படை அதிகாரத்தை அமலாக்கத் துறையும், வருமானவரித் துறையும், மத்திய புலனாய்வுத் துறையும் கையில் எடுத்துக் கொண்டு அரசியல் கட்சிகளை களங்கப்படுத்துவதும், அரசியல் தலைவர்களை களங்கப்படுத்துவதுமான செயல்களில், சமீபத்தில் நாடாளுமன்ற தேர்தல் வருகின்ற இந்த காலத்தில் ஈடுபடுமேயானால் ஜனநாயகத்தை முதுகில் குத்திய துரோகச் செயலாகத்தான் இந்த நடவடிக்கைகள் மதிப்பீடு செய்யப்படும். மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதும், நிராகரிப்பதும் மக்களின் தனிப்பட்ட சிறப்பு உரிமையாகும்.

அந்த உரிமையை மறைமுகமாகப் பறித்துக் கொள்ள நினைப்பது ஜனநாயகத்திற்கு இழைக்கப்படும் பெரும் கேடாக அமையும். அதுமட்டுமல்ல; இத்தகைய ஒன்றிய அரசின் நடவடிக்கையினால் இந்திய நாடு பாசிசசக்திகளின் நாற்றங்கால் ஆகிவிடும்!! இந்த எச்சரிக்கையை தான் தமிழ்நாடு கவர்னர் மாளிகையான ராஜ்பவனில் திராவிட மாடல் ஆட்சியின் பிதாமகன் ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ளார். தமிழ்நாட்டின் திராவிட முன்னேற்ற கழகத்தை வழிகாட்டியாக கொண்ட இந்திய அரசியல் கூட்டணியைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சி கூட்டணியாலும் நாட்டுக்கு ஏற்படவிருக்கின்ற இந்த பேராபத்தை தடுக்கவியலாது, காரணம் ஏனைய அரசியல் எதிர்க்கட்சிகள் ஒன்றிய ஆட்சியில் உள்ள பாரதிய ஜனதா கட்சியின் பல்லக்கு தூக்கிகளாகவும், சீர்பாதம் தாங்கிகளாகவும் தங்களுடைய பணிகளை அரசியல் லாபத்திற்காக வடிவமைத்து கொண்டிருக்கிறார்கள் என்பதே எதார்த்தம்!!




திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் கதிர் ஆனந்தை ஆதரித்து கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் பேசினார். உடன் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேட்பாளர் கதிர் ஆனந்த், மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., எம்.எல்.ஏக்கள் ஆம்பூர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் அ.நல்லதம்பி, நகர செயலாளர் எஸ். ராஜேந்திரன்,மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு,நகர செயலாளர் எம்.ஆறுமுகம், ஒன்றியக் குழு தலைவர் ப.ச.சுரேஷ் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின்

# பங்குகள் விற்பனையை முழுமையாகக் கைவிடுக!

## தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை,மார்ச் 24-

'நெய்வேலி' நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் விற்பனையை முழுமை யாகக் கைவிட வேண்டும் என்று தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம்.பி. வலியுறுத்தல்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனம் ஓர் மத்திய பொதுத் துறை நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் லாபத்தில் தொடர்ந்து இயங்கி வருகின்றது. இந்த நிறுவனத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மிகக் குறைந்த விலையில் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனத்தின் பங்குகளை ஆரம்பத்தில் 5 சதவிகிதத்தை தொழிலாளர்களுக்கு விற்று விட்டார்கள். தொழிலாளர்கள் பங்குகள் பற்றிய விவரம் தெரியாத காரணத்தினால் பல தனியாரிடம் விற்று விட்டனர். அதனைத் தொடர்ந்து 1.44 சதவிகிதப் பங்கு எல்.ஐ.சி.யிடம் விற்கப் பட்டது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் மேலும் பங்கு விற்பனைக்காக ஒன்றிய அரசு அறிவித்த போது, தொழிலாளர்கள் போராட்டத்தை கையிலெடுத்தனர். அவ்வாறு தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கும் போது தமிழகத்தில் ஆட்சியில் இருந்த ஜெயலலிதா, தமிழக அரசு அந்த பங்குகளை வாங்கிக் கொள்வதாக அறிவிப்பு செய்தார். இதற்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்தனர். ஆனால், தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இதற்கு முன்னதாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் தி.மு.கழகம் பங்கு வகிக்கும்போது இதேபோல் பங்கு விற்பனை முயற்சி செய்யும்போது மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் பங்கு விற்பனையை கைவிட வேண்டும் அல்லது நாங்கள் ஒன்றிய அரசுக்குக் கொடுக்கும் ஆதரவை திரும்பப் பெறுவோம் என்று அறிவித்திருந்தார். இதனால் அந்த முயற்சிகள் எல்லாம் கைவிடப்பட்டிருந்த சூழலில் 2013 ஆம் ஆண்டில் 5 சதவிகிதத்தை மாநில அரசுக்கு விற்பனை செய்ய ஒன்றிய அரசு முடிவெடுத்தபோது தலைவர் கலைஞர் அவர்கள் செபியினுடைய (SEBI) கட்டுப்பாட்டில் உள்ள பொதுபங்கு தொகை யில் இருந்து விற்பனை செய்யப்பட வேண்டும். நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்யக் கூடாது என்றும் கடிதம் எழுதினார். அது மட்டுமல்லாமல், நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தை செபியினுடைய கட்டுப்பாட்டில் இருந்து விலக்கு அளிக்க வேண்டுமென தன்னுடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இருந்தபோதிலும் அரசு 3.56 சதவிகிதத்தை தமிழ்நாடு அரசின் நிதி நிறுவனத்திற்கு விற்று விட்டது.



அதன் பிறகு, 2014 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு யாருக்கும் தெரியாமல் மிக தந்திரமாக மேலும் 10.8 சதவிகித பங்குகளை விற்றிருக்கின்றது. அதன்படி நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் தற்போதுள்ள பங்கு 79.2 சதவிகிதமாகும். அதுமட்டுமல்லாமல் தற்போது மீண்டும் இந்தப் பங்குகளை விற்பதற்காக விளம்பரங்கள் கொடுத்து முயற்சிகள் மேற்கொள்வது, நெய்வேலி நிறுவனத்தை தனியார் மயமாக்கிடவும் ஒரு முழு கொள்கையாக பரிணமிக்கின்றது.

செபி நிறுவனம் பொதுப் பங்குகளின் விகிதத்தை 10 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தி அந்தப் பங்குகளை எப்போது வேண்டுமானாலும் எவருடைய அனுமதியில்லாமலும் விற்கலாம் என்ற சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்து, அதன் மூலம் இன்றைய நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் பறிபோகும் ஆபத்து நிலவுகிறது. இதனைத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகள் தனியார் மயமாகக் கூடாது. இந்த பங்கு பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் நெய்வேலிக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்ற நல்லதொரு ஆலோசனையை கூறி யிருந்தார். ஆனால் எந்த ஆலோசனையையும் ஏற்றுக் கொள்ளாத ஒன்றிய அரசு தன்னிச்சையாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு பங்குகள் விற்க முயற்சிப்பதை தொ.மு.ச. பேரவை வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்த முயற்சிகளை முழுமையாக கைவிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மு. சண்முகம் எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### 89-வது வட்டத்தில்

# இந்தியா கூட்டணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை! எம்.இ.சேகர் தலைமை!

சென்னை, மார்ச் 24-

திருபெரும்புதூர் நாடாளுமன்ற மக்களவை வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களை ஆதரித்து தேர்தல் பணி சிறப்பாக செயல்பட 89வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

நாடாளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு, அனைத்து கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், 89வது வட்ட கழக நிர்வாகிகள், BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், 89வது வார்டுக்கு உட்பட்ட ஆபீஸர்ஸ் காலனி அருகில் உள்ள ஐஸ்வர்யா மஹாலில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையேற்று வருகின்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், (வடக்குப் பகுதி செயலாளர்), தேர்தல் பொறுப்பாளர் பி.டி.சி. செல்வராஜ், 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, தெற்குப் பகுதி செயலாளர் டி.எஸ் பி. இராஜகோபால் (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர்), கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி. ஆர். நாகராஜ்,

89 வது வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் எம். இ. சேகர், 90வது வட்ட கழகச் செயலாளர் என்.நெப்போலியன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கருணாநிதி, சி.பி.ஐ.எம். மாவட்ட செயலாளர், என்.தனபாண்டியன், ம.தி.மு.க. அம்பத்தூர் நகர தலைவர், மா.தாமோதரன், ம.தி.மு.க செயலாளர், பி.டி.ரோமியோ காங்கிரஸ் அம்பத்தூர் பகுதி தலைவர், என்.பாஸ்கரன் காங்கிரஸ், ரவி விசிக வட்ட செயலாளர், விஜயன் காங்கிரஸ், குமரி தாஸ் காங்கிரஸ் வட்டதலைவர், எஸ் வேலு சி.பி.ஐ.எம், வி.கிருஷ்ணசாமி, அம்பத்தூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் எல்.பி.எப்.செல்வராஜ், கூட்டணி கட்சிகளின் அனைத்து நிர்வாகிகளும், 89வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், BLA 2 பாக நிலை முகவர்கள், BLC முகவர்கள், வட்ட இளைஞரணி, மகளிர் அணி, மாணவர் அணியினர், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்துக்கொண்டனர்.

வட்டக் கழக துணைச் செயலாளர் என்.பாலச்சந்தர் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆலங்குடி சிவ.பாலகிருஷ்ணன்**
**மார்ச் 24 (2007)**



**தன்னுடைய இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழக பணியாற்ற தொடங்கியவர்.**

**ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி வட்டக் கழகத்தின் முதல் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.**

**பாச்சிக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவராகவும் – புதுக்கோட்டை சமஸ்தான கோவில்களின் அறங்காவலர் குழு தலைவர், திருச்சி மாவட்ட நூலக ஆணைக்குழு துணைத் தலைவர், புதுக்கோட்டை அக்ரோ நிலவள வங்கி, மத்திய கூட்டுறவு வங்கி, வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1965 இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாத சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

## கழக இளைஞர் அணிச் செயலாளர் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகள் சேகரிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**24-03-2024, ஞாயிற்றுக்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பங்களாமேடு, தேனி, தேனி வடக்கு மாவட்டம். | தேனி |
| 2 | காலை 11.00 மணி | புதிய பேருந்து நிலையம் பிரிவு, பெரியகுளம், தேனி வடக்கு மாவட்டம். | தேனி |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 3 | மாலை 5.00 மணி | மணிக்கூண்டு, திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம். | திண்டுக்கல் |
| 4 | மாலை 6.15 மணி | பேருந்து நிலையம் அருகில், நத்தம், திண்டுக்கல் மேற்கு மாவட்டம். | திண்டுக்கல் |
| 5 | இரவு 7.00 மணி | ஊமச்சிக்குளம், மதுரை, மதுரை வடக்கு மாவட்டம். | மதுரை |
| 6 | இரவு 7.45 மணி | புதூர், மதுரை, மதுரை மாநகர் மாவட்டம். | மதுரை |

**25-03-2024, திங்கள்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | மாலை 5.00 மணி | பெரியார் தூண், காந்தி சாலை, காஞ்சிபுரம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | காஞ்சிபுரம் |
| 2 | மாலை 6.00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மார்க்கெட் அருகில், செய்யாறு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 3 | இரவு 7.00 மணி | காமராஜர் சிலை, பழைய பேருந்து நிலையம் அருகில், வந்தவாசி, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 4 | இரவு 8.00 மணி | காமராஜர் சிலை அருகில், சேத்துப்பட்டு, திருவண்ணாமலை வடக்கு மாவட்டம். | ஆரணி |
| 5 | இரவு 9.00 மணி | பேருந்து நிலையம் அருகில், கீழ்பென்னாத்தூர், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |

**26-03-2024, செவ்வாய்க்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | காந்தி சிலை சந்திப்பு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 2 | காலை 10.45 மணி | பேருந்து நிலையம் அருகில், கூட்ரோடு, இறையூர், கலசப்பாக்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 3 | காலை 11.45 மணி | அம்பேத்கர் சிலை அருகில், செங்கம், திருவண்ணாமலை தெற்கு மாவட்டம். | திருவண்ணாமலை |
| 4 | மதியம் 12.30 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 5 | மாலை 5.00 மணி | ரயில்வே சந்திப்பு அருகில், கோடியூர், ஜோலார்ப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்டம். | திருவண்ணாமலை |
| 6 | மாலை 5.45 மணி | பேருந்து நிலையம் அருகில், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 7 | இரவு 6.30 மணி | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் சாலை, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். | வேலூர் |
| 8 | இரவு 7.30 மணி | பேருந்து நிலையம் அருகில், பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 9 | இரவு 8.15 மணி | பேருந்து நிலையம் அருகில், குடியாத்தம், வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 10 | இரவு 9.00 மணி | பிரதான சாலை, பள்ளிகொண்டா, வேலூர் மாவட்டம். | வேலூர் |
| 11 | இரவு 9.30 மணி | மண்டித் தெரு, வேலூர், வேலூர் மாவட்டம். | வேலூர் |

**27-03-2024, புதன்கிழமை**

| | | | |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | பேருந்து நிலையம், ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 2 | காலை 10.45 மணி | முத்துக்கடை பேருந்து நிலையம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 3 | காலை 11.30 மணி | பேருந்து நிலையம் அருகில், வாலாஜா, இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 4 | மதியம் 12.30 மணி | பேருந்து நிலையம் அருகில், சோளிங்கர் இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| | | **மதிய உணவு இடைவேளை** | |
| 5 | மாலை 5.00 மணி | கமலா திரையரங்கம் அருகில், திருத்தணி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | அரக்கோணம் |
| 6 | மாலை 6.00 மணி | பழைய பேருந்து நிலையம் அருகில், அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம். | அரக்கோணம் |
| 7 | மாலை 7.30 மணி | மணிக்கூண்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | திருப்பெரும்புதூர் |



அன்பகம்
சென்னை – 18.
நாள் : 22–03–2024.

## நாடாளுமன்றத் தேர்தல் - 2024 :

# 'இந்தியா' கூட்டணிக்குத் தொடர்ந்து ஆதரவு பெருகுகிறது!

## பல்வேறு கட்சிகள் – இயக்கங்கள் – சங்கங்கள் ஆதரவு!

நடைபெறவிருக்கும் 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகள் போட்டியிடும் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற முழு ஆதரவு அளிப்பதோடு, தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் இணைந்து பிரச்சாரத்தை மேற்கொண்டு, தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற பாடுபடுவதாக ஏற்கனவே பல்வேறு கட்சிகள்- இயக்கங்கள் - சங்கங்கள் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில்;

மேலும், பல்வேறு கட்சிகள் - இயக்கங்கள் - சங்கங்கள், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற பாடுபடுவதாக உறுதி அளித்துள்ளன. அதன் விவரம் பின் வருமாறு :

**இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகள் - இயக்கங்கள் - சங்கங்கள் பட்டியல்.**

1. இந்தியகம் யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) (மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி)

2. சோஷலிஸ்ட் கட்சி (இந்தியா) தமிழ்நாடு (மாநில தலைவர்தஞ்சை இளஞ் சிங்கம்)

3. தமிழ்ப் புலிகள் கட்சி (தலைவர் நாகை. திருவள்ளுவன்)

4. அம்பேத்கர் மக்கள்கட்சி (தலைவர் முனைவர் சு.மழைமேனி பாண்டியன்)

5. அருந்ததி கட்சி (தலைவர் பி.புருசோத்தமன்)

6. 6. Annai Indira Gandhi Charitable Trust (Founder-J.Suresh)

7. திரைப்படநடிகர் தயாரிப்பாளர் ஜெ.எம். பஷீர்

8. திரைப்பட தயாரிப்பாளர் ஏ.எம்.சௌத்ரி தேவர்

9. தேசிய வர்த்தகர்கள் முன்னேற்றப் பேரவை (நிறுவனர் டாக்டர் பி.ஜோதிகுமார்)

10. கருஞ் சிறுத்தைகள் கட்சி (நிறுவனர், தலைவர் பூவை ஆ.பிரபு தாசப் பண்டிதர்)

11. ஜெம் ஊழியங்கள் (நிறுவனர், தலைவர் பாஸ்டர் சி.சதாடேனியேல்)

12. தேசிய மக்கள்கட்சி (நிறுவனர் இன முரசு கோபால்)

13. திராவிடத் தமிழர் எழுச்சிக் கழகம் (மாநிலத் தலைவர் க.தமிழ்மணி)

14. தேசிய மக்கள் பாதுகாப்பு கழகம் (மாநில பொதுச் செயலாளர்எம்.ஏ.ஹாரூண்)

15. சிறுபான்மைச் சமூகப் புரட்சிஇயக்கம் (நிறுவனர் கா.லியாகத் அலிகான்)

16. அகில இந்திய இஸ்லாமிய முன்னேற்ற கூட்டமைப்பு (நிறுவனர், தேசிய தலைவர் சென்னை ஜி.ஜாபர் பாஷா)

17. டாக்டர் ஜனாப். ஏ.பி.ஜெ.அப்துல்கலாம் சோசியல்வெல்பேர் டிரஸ்ட்

18. தமிழ்நாடு சமத்துவ தையல் தொழிலாளர் நலச் சங்கம் (மாநில பொதுச் செயலாளர் கவிஞர் சி.வீரசங்கர்)

19. திராவிட நட்புக் கழகம் (மாநில தலைவர் ஆ.சிங்கராயர், பொருளாளர்இரா.தீபன்)

20. அகில இந்திய சமநீதி மக்கள் கட்சி (நிறுவனர் எஸ்.எஸ்.பாலகிருஷ்ணன்)

21. பாபாசாகெப் அம்பேத்கர் இளைஞர் இயக்கப் பாசறைமற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் பேரவை (நிறுவனர் தலைவர் ஏ.என்.லெமூரியர்)

22. சமூக நீதிக் கட்சி (தலைவர் ந.பன்னீர் செல்வம்)

23. தேசிய வாத காங்கிரஸ் கட்சிசரத் சந்திரபவார் (மாநில தலைவிஎஸ்.கலைவாணி)

24. தமிழ்நாடு வண்ணார் பேரவை (நிறுவனத் தலைவர் கே.பி.மணிபாபா)

25. ஜனநாயக புலிகள் கட்சி (மாநிலத் தலைவர் இரா.தாயுமானவன்)

26. அகில இந்திய விவசாயிகள் நெசவாளர்கள் மக்கள் இயக்கம் (பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சங்கரபாண்டியன்)

27. திராவிடர் விடுதலைகட்சி (நிறுவனர்/ தலைவர் வெ.வேந்தன்மகேசு)

28. ஜனநாயக முஸ்லிம் முன்னேற்றக் கழகம் புதிய விடுதலைகட்சி (மாநிலத் தலைவர் டாக்டர் எஸ்.ஏ.இறையடியார் காஜாமொய்தீன்)

29. ராஷ்டிரிய ஜனதாதளம் தமிழ்நாடு (மாநிலத் தலைவர் எஸ்.கௌரிசங்கர்)

30. தமிழ் தாயக மக்கள் முன்னேற்ற கட்சி (நிறுவன தலைவர்எம்.முகம்மது இலியாஸ்)

31. இயற்கை பாதுகாப்பு குழு (மாநிலத் தலைவர் இ.மாரியப்பன்)

32. சிவசேனா, தமிழ்நாடு மாநிலம் (மாநிலத் தலைவர் எம்.ரவிசந்திரன்)

33. அகில இந்திய பசும்பொன் முன்னேற்றக் கழகம் (நிறுவனத் தலைவர் டாக்டர் ஏ.எம்.மூர்த்திதேவர்)

34. ஜல்லிக்கட்டு மக்கள்கட்சி (தலைமை ஒருங்கிணைப்பாளர்எஸ்.வி.ராஜராஜன்)

35. உழைப்பாளி மக்கள்கட்சி (நிறுவனர், தலைவர் ராமகோபால தண்டாள்வர்)

36. தேசிய முன்னேற்றக் கழகம் (நிறுவனத் தலைவர் டாக்டர் ஜி.ஜி.சிவா)

37. திராவிட தேவாங்க தெய்வீக மக்கள் சபை (தென்னிந்திய அமைப்பாளர் மா.திருமலைதாசு)

38. தென்னிந்திய திருமண அமைப்பாளர்கள் சங்கம் (மாநில பொதுச்செயலாளர் பொழிச்சைஏ.சிவராஜ்)

39. தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய அனைத்து ஊழியர் சங்கம் (மாநிலத் தலைவர் எல்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி)

40. அகில இந்திய சிறுபான்மை இளை ஞர்கள் சமூகநீதி (நிறுவன தலைவர் ஜெயம் இ.புஷ்பராஜன், செயலாளர் இ.டி.ராஜன்)

41. அருள் மக்கள் சேவா சங்கம் (நிறுவனத் தலைவர் எஸ்.அருள்)

42. தமிழ்நாடுமக்கள்உரிமைஅமைப்புடுவ(மாநிலதலைவர் ஏ.கே.வெங்கடேஷ்)

43. அம்பேத்கர் மக்கள்இயக்கம் (மாநிலபொதுச்செயலாளர் மதுரைடாக்டர் மகா.ராமகிருஷ்ணன்)

44. திருக்குறள் பயிற்சி மற்றும் திருக்குறள் ஆசிரியர் தேர்வுமையம் (நிறுவனர் திருக்குறள் சுப்பராயன்)

45. அகில இந்திய அகமுடையார் மகாசபை (நிறுவனர் பொன்.கரு. ரஜனிகாந்த் அகமுடையார்)

46. தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் அனைத்து தொழில்பிரிவு தொழிலாளர்கள் மனித உரிமை பாதுகாப்பு சங்கம் (பொதுச்செயலாளர் ம.கோவிந்தராஜ்)

47. அனைத்து மக்கள் புரட்சிகட்சி ( நிறுவனர், தலைவர் டாக்டர் ஜே.செந்தில்ராஜா)

48. மக்கள் நல முன்னேற்ற கழகம் (நிறுவனத் தலைவர் எம்.திருநீலகண்டன்)

49. தமிழ்நாடு திருவள்ளுவர் மக்கள் கூட்டமைப்பு (தலைவர்அருண்கோபால்)

50. தமிழ்நாடு விஸ்வபிரம்மா மக்கள் பேரவை இயக்கம் ( மாநிலதலைவர் மாரி.சிங்காரம் ஆச்சாரி, பொதுச்செயலாளர் புதுகை கரு. பழனியப்பன்)

51.புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி, தமிழ்நாடு மாநிலக்குழு (மாநிலச் செயலாளர் ஆ.ஜீவானந்தம்)

52. தேசிய தெலுங்கர் சிறுபான்மையினர் சமூக கூட்டமைப்பு (மாநில பொதுச்செயலாளர் நாகா ஆர்.அரவிந்தன்)

53. அம்பே த்கர் முன்னணிகழகம் சென்னை துறைமுக எஸ்.சி./எஸ்.டி.தொழிலாளர் கழகம் (நிறுவனத் தலைவர் திண்டிவனம் ஸ்ரீராமுலு)

54. தமிழ்நாடு சாம்பவர் மகாஜனசங்கம் (மாநிலத் தலைவர் ஏ.சுந்தரநாதன்)

55. நாம் தெலுங்கர் கட்சி (நிறுவனர், தலைவர் டாக்டர் கே.கே.எஸ்.கட்டபொம்மன் சீனிகந்தசாமி ஜமீன்தார்)

56. தமிழ்நாடு அனைத்து தொழிலாளர் உழைக்கும் மக்கள் நலச் சங்கம் (மாநிலத் தலைவர் ஜெ.ராஜா)

57. ஊத்தங்கரை வட்டார விவசாய சங்கம் (தலைவர் ஏ.அருள்)

58. கருணீகர் முன்னேற்ற பேரவை (நிறுவனர் தலைவர் கருணீகர் இளங்கோவன்)

59. தலித் முன்னேற்றசங்கம் (நிறுவனர், தலைவர் செ. அன்பின் பொய்யாமொழி)

60. பாரதி ய மக்கள் நல இயக்கம் (நிறுவனர் ஜி.சுவாமிநாதன்)

61. இந்திய திராவிட பணி கழகம் (நிறுவன தலைவர் சே.இளையகுமார்)

62.தமிழ்நாடு அருந்ததியர் சங்கம் (மாநில நிர்வாக செயலாளர் விருதை இரா.சேகர்)

63. இந்திய மூல நிவாசி காவல்படை (மாநில ஒருங்கிணைப்பாளர்நா.தமிழமுதன்)

64. தென்னிந்திய விஸ்வகர்மா முன்னேற்ற சங்கம் (காப்பாளர்நா.இராமலிங்கனார்)

65.தென்னிந்தி யகைவினைஞர் முன்னேற்றக் கழகம் (நிறுவனத்தலைவர்இரா.சரவணன்)

66. தமிழ்நாடு சமையல்கலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (மாநில பொதுச் செயலாளர் இட்லி இனியவன்)

67. அகில இந்திய நாடார் வாழ்வுரிமைச் சங்கம் (நிறுவனத்தலைவர்ஏ.என்.சதாநாடார்)

68. தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்கம் தமிழ்நாடு ஐந்தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் (மாநிலத் தலைவர்ஜி.சேகர்)

69. பேரறிஞர் அண்ணா உழைக்கும் மக்கள் உரிமை முன்னேற்றச் சங்கம் (மாநிலத் தலைவர் பண்ணை டி.எம்.சிவகுமார்)

70. அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழகம் (நிறுவனர், பொதுச்செயலாளர் சே.பசும்பொன்பாண்டியன்)

71. சமூக நீதி மக்கள்விடுதலைமுன்னணி, தமிழ்நாடு (நிறுவனத் தலைவர்ஏ.ஆர். வேலுமூர்த்தி)

72. தமிழக ஏரி மற்றும் ஆற்றுப் பாசன விவசாயிகள் சங்கம் (மாநிலத் தலைவர் புரவலர் பூ.விசுவநாதன்)

73. பூர்வீக மக்கள் விடுதலை கட்சி, தமிழ்நாடு (மாநில தலைவர்ச.செல்லக்கண்ணு)

74. தமிழ்நாடு அனைத்து தொழிலாளர் உழைக்கும் மக்கள்நலச் சங்கம் (மாநில தலைவர் ஜெ.ராஜா)

75. பாரம்பரிய சித்த மருந்து தயாரிப்பாளர்கள் கூட்டமைப்பு (நிர்வாக இயக்குநர் டாக்டர் எம்.கிருஷ்ணா)

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய 4 சட்டமன்றத் தொகுதிகளில்

# திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளர் டி.ஆர்.பாலு தேர்தல் பிரச்சார சுற்றுப்பயண விவரம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன்அறிவிப்பு!



“இந்தியா” கூட்டணி கட்சிகளின் சார்பில் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், ஆலந்தூர் (பகுதி) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய பகுதி ஒன்றிய நகர - பேரூர்களில் கீழ்க்கண்ட தேதிகளில் கீழ்க்கண்டவிவரப்படி திறந்த ஜீப் மூலம் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களை சந்தித்து வாக்குகள் சேகரிக்கிறார்.

வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் வாக்குசேகரிக்கும் சுற்றுப்பயண நிகழ்ச்சி அட்டவணை விவரம் வருமாறு.

| நாள் | காலை/ மாலை | தொகுதி பகுதி ஒன்றிய நகர பேரூர் ஊராட்சி |
|---|---|---|
| 25.3.2024திங்கள் | மாலை 5 மணி | பம்மல்வடக்குபகுதி -திருநீர்மலையில் ஜீப் தேர்தல் பிரச்சாரம் தொடக்கம், |
| 31.3.2024ஞாயிறு | காலை | ஆலந்தூர் வடக்கு பகுதி 160,161 வட்டங்கள் |
| | மாலை | ஆலந்தூர் வடக்கு பகுதி 156,157,158 வட்டங்கள் |
| 1.4.2024 திங்கள் | காலை | ஆலந்தூர் தெற்கு பகுதி 162, 163, 164 வட்டங்கள் |
| | மாலை | ஆலந்தூர் தெற்கு பகுதி 165, 166, 167 வட்டங்கள் |
| 2.4.2024 செவ்வாய் | காலை | பம்மல் தெற்கு பகுதி பொழிச்சலூர் கவுல்பஜார் ஊராட்சி |
| | மாலை | பல்லாவரம் வடக்கு பகுதி + பல்லாவரம் தெற்கு பகுதி |
| 3.4.2024 புதன் | காலை | 159 வட்டம் மீனம்பாக்கம்திரிசூலம் ஊராட்சி |
| | மாலை | செம்பாக்கம் வடக்கு பகுதி + செம்பாக்கம் தெற்கு பகுதி(சிட்லபாக்கம் மட்டும்) |
| 5.4.2024 வெள்ளி | காலை | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் |
| | மாலை | |
| 6.4.2024 சனி | காலை | பெருங்களத்தூர் வடக்கு பகுதி |
| | மாலை | தாம்பரம் மேற்கு பகுதி |
| 8.4.2024 திங்கள் | காலை | பெருங்களத்தூர் தெற்கு பகுதி முடிச்சூர் ஊராட்சி |
| | மாலை | செம்பாக்கம் தெற்கு பகுதி- தாம்பரம் கிழக்கு பகுதி திருவஞ்சேரி, அகரம்தென், மதுரப்பாக்கம் ஊராட்சி |
| 10.4.2024 புதன் | காலை | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் |
| | மாலை | |
| 12.4.2024 வெள்ளி | காலை | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் |
| | மாலை | |
| 13.4.2024 சனி | காலை | திருப்பெரும்புதூர்வடக்குஒன்றியம் |
| | மாலை | |
| 14.4.2024 ஞாயிறு | காலை | மூவரசம்பட்டு ஊராட்சி கண்டோன்மெண்ட் நகரம் |
| | மாலை | ஆலந்தூர் தொகுதி குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் 10 ஊராட்சிகள் |
| 15.4.2024 திங்கள் | காலை | குன்றத்தூர் நகரம் மாங்காடு நகரம் |
| | மாலை | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் திருப்பெரும்புதூர் பேரூர் |

எனவே காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் அந்தந்த பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் நம்முடைய வெற்றி வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்களின் வாக்கு சேகரிப்பு சுற்றுப்பயணத்தை வழித்தடத்தை முறையாக பட்டியலிட்டு அந்தந்த பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் உள்ள “இந்தியா” கூட்டணி கட்சிகளின் மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் மற்றும் நம்முடைய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களுக்கு முறையாக தகவல் தந்து இந்த வாக்கு சேகரிக்கும் சுற்றுப்பயணத்தை மிகவும் எழுச்சியுடன் ஏற்பாடு செய்திடும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை கிழக்கு மாவட்டம் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் வடக்குப் பகுதி 85வது வார்டு சார்பில் வட்டக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் பாகநிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் வட்டச் செயலாளர் த.கண்ணபிரான் தலைமையில் அம்பத்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆர்.டி.சேகர் தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை! கலாநிதி வீராசாமி ஆதரித்து

# ஆர்.கே.நகர் தொகுதி கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

*சென்னை, மார்ச் 24*

இந்தியா கூட்டணி ஆதரவு பெற்ற வடசென்னை பாராளுமன்ற வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து ஆர்.கே. நகர் தொகுதி ஆலோசனை கூட்டம் இன்று (24.03.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் டி.எச். ரோட்டில் உள்ள கேப்டன் மாஹாலில் சென்னை 81-ல் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ தலைமையில், ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், முன்னிலையில் பகுதி செயலாளர்கள் இரா.லட்சுமணன் எஸ். ஜெபதாஸ் பாண்டியன் பகுதி கழக நிர்வாகிகள் என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு எம்.வேதலட்சுமி, கே.பி.சதீஷ்குமார், மாஸ். டி.வெங்கடேசன் எம். கோவிந்தராஜ், எம். லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், என். எம்.கதிரேசன், தா.வ. மு.கஜேந்திரன், நா. கோதண்டன், பா. குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, வி.வடிவேல், எஸ்.எல். சுந்தர், கி. தேவன் ஜி.ஏழுமலை, ஆர். ராஜன், ஆர்.ஏ.எம் சசிகுமார் ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகிறது.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இதில் சமத்துவ மக்கள் கழக நிறுவனத் தலைவர் எர்ணாவூர் எ.நாராயணன், தொகுதி பொறுப்பாளர் நந்தனம் நம்பிராஜன், இரா. மதிவாணன், மாவட்ட அவைத் தலைவர் இரா. வெற்றி வீரன், 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், மாவட்ட காங்கிரஸ் தலைவர் எம். எஸ்.திரவியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உ. பலராமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் எல். சுந்தர்ராஜன், இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் டி. வெங்கடேசன், விடுதலைச் சிறுத்தை கட்சியின் மாவட்ட செயலாளர் சி. சௌந்தர், மதிமுக மாவட்ட செயலாளர் சு.ஜிவன், ஆர். லோகநாதன், டி.வி. துரைராஜ், கமுதி பி. சமுசுதீன், ஆர்.பாஸ்கர், ராயபுரம் ஒய்.முகமது பாரூக், எழில் சம்பத், எஸ்.கே. வீராரெட்டி, வால்டாக்ஸ் ரமேஷ், ஆர்.கே.நகர் சையத், வி.ரவிக்குமார், எம். ஜெய்சங்கர், எம்.யோகன் பாபு, நாகரசு, ஏ.அல்லா, பகஷ், பி.ராஜேஷ், ஜெ. அப்துல்காதர், பாபா ஜெகன், பி.தர்மலிங்கம், கே.கண்ணன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஏ.டி. மணி, என்.மருது கணேஷ், வெ.சு.சத்யநாராயணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இர.பொன் இளவரசன், இ.ரவிக்குமார், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ். எம்.பரசுராமன், சி.மணிகண்டன், டாக்டர் வை. கலைவாணன், எம்.விமலா, ஏ.ரமேஷ் பாபு, பி.சதீஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் குமாரி நாகராஜ், தேவி கதிரேசன், பவித்ரா நரேஷ் குமார், மணிமேகலை ஏழுமலை, கே.ரேணுகா, விமலா ரவிக்குமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், பாகமுகவர்கள், பாக பணியாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

40(அ) வட்ட செயலாளர் மா.நாகராஜன் நன்றி கூறுகிறார்.

கழக வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து

# மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை! நொளம்பூர் வே.ராஜன், அ.ம.துரைவீரமணி, வ.செல்வகுமார், வீர.கனிமொழி முன்னிலை!

*சென்னை, மார்ச் 24-*

தி.மு.க. தலைமையிலான I.N.D.I.A. கூட்டணியின் திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி தி.மு.கழக வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் இன்று (24.03.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு வளசரவாக்கம் எஸ்.வி.எஸ்.நகர், மண்டல அலுவலகம் எதிரில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறவுள்ளது.

வளசரவாக்கம் 11வது மண்டலக் குழுத் தலைவர், நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., வில்லிவாக்கம் ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் வீர.கனிமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி எம்.சி., கே.ராஜி எம்.சி., தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ஆ.மாலினி எம்.சி., ம.உதயகுமார், செல்விரமேஷ் எம்.சி., ஹேமலதாகணபதி எம்.சி., ச.சங்கர் கணேஷ் எம்.சி., சாந்திஇராமலிங்கம் எம்.சி., எம்.இ.ஸ்டாலின் எம்.சி., ரமணி மாதவன் எம்.சி., எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், தி.சார்லஸ், ஆ.செல்வம், மூன்லைட் டி.ரவி, (மு.வ.க.செ), எஸ்.ஜி.மாதவன், எம். கே.பி.அண்ணாதாசன், எம். எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன், என்.ஜெயச்சந்திரன், ப.கிரிஜா, எ.எம்.யுவராஜா, ஆர்.கௌரிசங்கர், என்.ரவி, கே.சங்கர், கே.எஸ். மாறன் குமார், கு.சதீஷ்குமார், இரா.வினோத், என்.ஜெயசுதா, எம்.ஜி.சாமிநாதன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள்.

கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் காங்கிரஸ் மாநில செயலாளர் தளபதி எஸ்.பாஸ்கர், தி.நா.தொ.பொறுப்பாளர், CPI (M) க.பீம்ராவ், மாவட்ட செயலாளர் (CPI) பா.கருணாநிதி,

ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் டி.சி.ராஜேந்திரன், வி.சி.க. மாவட்ட செயலாளர் தேவ.ஞானமுதல்வன், ம.நீ.ம மாவட்ட செயலாளர், ஏ.ஃபாசில் முகம்மது, தி.க. மாவட்ட தலைவர் வெ.கார்வேந்தன், இ.யூ.மு.லீ மாவட்ட தலைவர் மடுவை எஸ்.பீர் முகம்மது, ம.நே.ம.க மாவட்ட தலைவர் டி.எம்.எம். ஷேக் தாவித், த.வா.க மாநில துணை செயலாளர் சத்ரியன் து.வேணுகோபால், ஆம் ஆத்மி கட்சி மாவட்ட செயலாளர் பி.பன்னீர் செல்வம், த.வி.தொ.க மாவட்ட செயலாளர் எஸ். ஹரிஹரகுமரன், ச.ம.க மாவட்ட செயலாளர் பி.சுபாஷ்,

திராவிடர் இயக்க தமிழர் பேரவை பெல் கு. ராஜன். முக்குலத்தோர் புலிப்படை கட்சி சென்னை மண்டல அமைப்பாளர் எம்.மூர்த்தி, மு. மகேஷ்குமார், க.தனசேகரன், காசிமுத்துமாணிக்கம், எஸ்.பத்மபிரியா, மாநில துணை செயலாளர், தகவல் தொழில் நுட்ப அணி பாலவாக்கம் க.சோமு, தலைமை செயற்குழு உறுப்பினர் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., மு.மனோகரன், பா.வாசுகிபாண்டியன், எஸ்.பாஸ்கரன் எம்.சி., மதுரவாயல் தொகுதி மேற்பார்வையாளர் மாஸ்டர் பெ. சேகர்.முகப்பேர் கே.நீலகண்டன், அ.விஜயபாலா, வி.ராஜேஷ், கே.குமரேசன், எஸ்.பி.அருள், எஸ்.பாலமுருகன், செ.ரவி மற்றும் அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் கலந்து கொள்கிறார்கள்.

நன்றியுரை: 151வது வட்ட கழக செயலாளர் அ.மோசஸ், மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ஆர்.சேகர்.

அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் அரக்கோணம் கழக வேட்பாளர் எஸ். ஜெகத்ரட்சகனை ஆதரித்து

# திருத்தணியில் ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*திருவள்ளூர் மார்ச் 24 ;*

திமுக தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின் அரக்கோணம் நாடாளுமன்ற வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆதரித்து கூட்டணி கட்சிகளின் மாவட்ட கழக செயலாளர். மாவட்ட தலைவர், ஒன்றிய, நகர, வட்டார, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் திருத்தணியில் உள்ள ஸ்ரீவாரி திருமண மண்டபத்தில் இன்று (24-03-2024) காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது.



இதில் கைத்தறி துணி நூல் துறை அமைச்சர் ராணிப் பேட்டை ஆர். காந்தி தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் விஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் . தலைமைச் செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி அனைவரும் வரவேற்றுப் பேசுகிறார்.

இதில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வாக்கு சேகரித்து ஆதரவு கோருகிறார் இக் கூட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சி மாவட்ட தலைவர்கள் செயலாளர்கள் துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ , மு.பாபு, கோ.கிருஷ்ணமூர்த்தி, கே.கஜேந்திரன், கோபால், தளபதி சுந்தர், புருஷோத்தமன், தணிகை வேல், இரா. கார்த்திகேயன், ரஹமத்துல்லா, நூர் முகம்மது, மாநில நிர்வாகிகள் ஆர். டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், இ.குருதாஸ், தொகுதி பார்வையாளர்கள் வடசென்னை ந.மனோகரன், ராஜா குப்புசாமி, மாவட்ட கழக நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், வி. சி.ஆர்.குமரன், சி.ஜெயபாரதி, உதயமலர் பாண்டியன், எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே. ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், ராஜேஷ்வரி, ரவிந்திராநாத், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் ப.ஆர்த்தி ரவி, ஜி.ரவிந்திரா, சி.என்.சண்முகன், சி.ஜெ.சீனிவாசன், பெ. பழனி, என்.கிருஷ்ணன், பி.டி.சந்திரன், கூளூர் எம். ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், சி.சு.ரவிச்சந்திரன், டி.கிறிஸ்டி, எம்.ஜெ. ஜோதிகுமார், டி.ஆர்.கே. பாபு உள்பட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், துணை அமைப்பாளர்கள், கூட்டணிக் கட்சி சார்ந்த தலைவர்கள், செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கலந்து கொள்கிறார்கள்,

முடிவில் திருத்தணி நகர கழகச் செயலாளர் வி. வினோத்குமார் நன்றி கூறுகிறார்.



பொள்ளாச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ்.முருகன் நேற்று (23.03.24) பொள்ளாச்சி தொகுதிக்குட்பட்ட உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். பொள்ளாச்சி தொகுதி பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி, அமைச்சர்கள் வெள்ளக்கோவில் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், மாவட்டச் செயலாளர் பத்மநாபன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

வேளச்சேரி மேற்கு – கிழக்கு

# பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு மற்றும் கிழக்கு பகுதிக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (24.3.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள என்.எம்.எஸ்.திருமண மண்டபத்தில் (வேளச்சேரி மேற்கு பகுதிக் கழக அலுவலம் அருகில்) பகுதிக் கழக அவைத் தலைவர்கள் சி.பழனி மற்றும் அருணா வேலாயுதம் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வேளச்சேரி மேற்கு மற்றும் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

**தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் 23.3.2024 அன்று நடைபெற்ற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில், திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதியின் 'இந்தியா' கூட்டணி வேட்பாளரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு மற்றும் காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதியின் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர் க.செல்வம் ஆகியோரை ஆதரித்து நடைபெற்றது. இதில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைத்திலிங்கம், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தகுமாரி கமலக்கண்ணன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வெற்றி விழா போல நடைபெற்ற

# தஞ்சை-நாகை தொகுதி பிரச்சாரப் பொதுக்கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வெள்ளமெனக் குவிந்த மக்கள்!

திருவாரூர்,மார்ச்-24

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரியில் நடைபெற்ற தஞ்சாவூர் -நாகப்பட்டினம் பாராளுமன்ற தொகுதிகளின் பிரசாரகூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரையாற்றினார். இந்தியா கூட்டணியின் வெற்றிவிழாவைப்போல நடைபெற்ற இந்த பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பல்லாயிரக்கனக்கான மக்கள் வெள்ளமென குவிந்திருந்தனர்.

தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் பாராளுமன்ற தொகுதிகளில் தஞ்சாவூரில் போட்டியிடும் இந்திய கூட்டணியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் எஸ்.முரசொலி அவர்களை ஆதரித்தும், நாகப்பட்டிணம் தொகுதியில் போட்டியிடும் இந்தியா கூட்டணியில் சி.பி.ஐ.சார்பில் போட்டியிடும் வை.செல்வராஜ் அவர்களை ஆதரித்தும் தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொரடாச்சேரியில் முத்தமிழ் அறிஞர் கலைநகர் திடலில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்ட அரங்கத்தில் பிரச்சார உரையாற்றினார்.

தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சி நடத்தும் மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய துணைக் கண்டமே வியந்து பாராட்டும் வகையில் மக்களுக்கு தரும் நல்லபல திட்டங்களுக்கு நன்றி தெரிவிப்பது போலவும் ,இந்திய அளவில் இந்தியா கூட்டணி வெற்றிபெற்று பாசிச பா.ஜ.க. அரசை அகற்றி இந்தியாவை தலைவர் தளபதி அவர்களின் முன்னெடுப்பில் மீட்டெடுத்த வெற்றிவிழா கூட்டம் போலவும் கருதிய மக்கள் , உங்களுக்காக வாக்களிக்க நாங்கள் காத்திருக்கிறோம் என திரண்டு வந்ததைப் போல மக்கள் வெள்ளம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திடலில் பல்லாயிரக்கணக்கில் கூடி இருந்தது அரசியல் நோக்கர்களாலும் , அனைத்து தரப்பினராலும் வெகுவாக வியந்து பாராட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் நாகப்பட்டிணம் ,தஞ்சாவூர் பாராளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி வேட்பாளர்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறுவார்கள் என்பதை அறிவித்த இந்த கூட்டத்தினை மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அவர்கள் தஞ்சை மாவட்ட செயலாளர்கள் துரை.சந்திர சேகர் எம்.எல்.ஏ., நாகை மாவட்ட செயலாளர் கவுதமன் , கழக மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் இணைந்து சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இந்த பிரச்சார கூட்டத்தில் சி.பி.ஐ.மாநில செயலாளர் இரா.முத்தரசன், மூ.மு.க. தலைவர் ஸ்ரீதர் வாண்டையார், உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அமைச்சர் பெருமக்கள் கே.என். நேரு, எஸ்.ரகுபதி, டி.ஆர்.பி. ராஜா, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் அசோக்குமார், கே.மாரி முத்து, நாகை மாலி, டி.கே.ஜி. நீலமேகம், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ. கே. எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ. மதிவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையா மங்களம் ஜி.பாலு உள்ளிட்ட கழக நிர்வாகி களும், கூட்டணிகட்சி களின் நிர்வாகிகளும், பெருந்திரளான பொது மக்களும் பங்கேற்றனர்.

கூட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வரவேற்புரை யாற்ற மாவட்டட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ நன்றி கூறினார்.

### நே.சிற்றரசு, தயாநிதி மாறன், மு.க.தமிழரசு, அன்பகம் கலை, நா.எழிலன் பங்கேற்பு!

# 118, 118 (அ) வட்டக் கழகங்கள் சார்பில் வேட்பாளர் அறிமுகம் ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர்கள் கோ.யுவராஜ், எஸ்.என்.கே.ராமன் அறிவிப்பு!

சென்னை, மார்ச். 24

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி தி.மு.கழக வெற்றி வேட்பாளர் தயாநிதி மாறன் அவர்களின் அறிமுகக் கூட்டம் மற்றும் 118, 118 (அ) ஆகிய வட்டக் கழகங்களின் பாக முகவர்கள் (பி.எல்.ஏ), பாக உறுப்பினர்கள் (பி.எல்.சி) ஆலோசனைக் கூட்டம் இன்று (24.3.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு இராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள சாஜர்பவனில் (லால் டயர்ஸ் அருகில்) வட்ட அவைத் தலைவர் க.அன்பழகன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, மு.க.தமிழரசு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம்விளக்கு தொகுதி ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் கலை கதிரவன், ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.நற்குணநாதன் மற்றும் தோழமைக் கட்சிகளை சார்ந்த நிர்வாகிகளும் கலந்து கொண்டு கருத்தும், ஆலோசனையும் வழங்குகின்றனர்.

எனவே மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக, இந்நாள், முந்நாள் நிர்வாகிகள், அனைத்து அணிகளைச் சார்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ. யுவராஜ், 118 (அ) வட்டக் கழகச் செயலாளர் எஸ்.என்.கே.ராமன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

### மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் தலைமை!

# மதுரவாயல் 148வது வட்டத்தில் தேர்தல் பணிமனை!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ.திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச். 24-

திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதிக் குட்பட்ட மதுரவாயல் சட்டமன்ற தொகுதியில் மதுரவாயல் தெற்கு பகுதி 148வது வட்டகழக தலைமை தேர்தல் பணி மனை திறக்கும் நிகழ்ச்சி இன்று )(ஞாயிற்றுக்கிழமை 24 .3. 2024 ) மாலை 4:30 மணியளவில் 148வது வட்டம் மேட்டுக்குப்பம் என்.டி ரோட்டில் 148 வட்ட கழக செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ். ரமேஷ்ராஜ் தலைமையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சருமான மா.சுப்ரமணியன் அறிவுறுத்தலின்படி மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ

வட்டக் கழக தேர்தல் பணிமனையினை திறந்து வைக்கிறார். ஆகவே இந்நிகழ்ச்சியில் நம்முடைய மறதுரவாயல் தெற்குப் பகுதி 148வது வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட ,பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ,பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படிவட்டச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ்ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

### சொ.வேலு எம்.சி. - வி.சுதாகர் முன்னிலையில்

# 78வது வட்டச் செயலாளர் சு.மனோகர் இல்ல நிகழ்ச்சி!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு பங்கேற்பு !

சென்னை மார்ச். 24-

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்ட கழக செயலாளர் சு.மனோகர் அவர்களின் புதுமனை புகுவிழா நிகழ்ச்சி ( இன்று 24.3.2024 ஞாயிறு ) காலை 9 மணி அளவில் 17,பங்காரு தெரு புரசைவாக்கம் சென்னை 7,ல் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் இந்து சமய அறநிலைதுறை அமைச்சர், பெருநகர சென்னை வளர்ச்சிகுழும தலைவர், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்.

நிகழ்ச்சிக்கு எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், நியமனகுழு உறுப்பினர் சொ.வேலுஎம்.சி,

எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட அவைத்தலைவர் கோ. ஏகப்பன்,தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஒ.ஏ. நாகலிங்கம் மற்றும் மாவட்ட கழக,பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.




தலைமைச் செயலகத்தில் நேற்று (23.03.2024) தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தலைமையில், மக்களவை பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைத் தேர்தல் அலுவலர் சங்கர் லால் குமாவத், இணை தலைமைத் தேர்தல் அலுவலர் எச்.எஸ்.ஸ்ரீகாந்த் மற்றும் தேர்தல் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### இந்தியா கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைந்த

# கடலூர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - சி.வெ.கணேசன் அறிக்கை!





கடலூர், மார்ச் 24-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின், ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (24.03.2024) மாலை 3.00 மணியளவில் வடலூர், மங்கையர்கரசி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது என

அமைச்சர் கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர், கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் சி.வெ.கணேசன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தி.மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகளின், ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், இன்று (24.03.2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 3.00 மணியளவில் வடலூர், மங்கையர்கரசி திருமண மண்டபத்தில், கடலூர், சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதிகளின் தேர்தல் பணிகளை சிறப்பான முறையில் எதிர்கொள்வது சம்மந்தமாக, திமுக இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம், இக்கூட்டத்தில் திமுக இந்தியா கூட்டணி கட்சிகளின் ஒருங்கிணைந்த கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய யூனியன் முஸ்லீம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, எம்.ஜி.ஆர்.கழகம், கொங்குநாடு மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, இந்திய தேசிய லீக், இந்திய சமூக நீதி இயக்கம், தமிழ் மாநில தேசிய லீக், திராவிட இயக்க தமிழர் பேரவை, சமத்துவ மக்கள் கழகம், ஆதி தமிழர் பேரவை, அகில இந்திய வல்லரசு பார்வார்டு பிளாக், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கம், மாவீரன் மஞ்சள் படை, முக்குலத்தோர் புலிப்படை, மக்கள் விடுதலைக் கட்சி ஆம் ஆத்மி கட்சி, யாதவ மக்கள் இயக்கம், தேவேந்திரகுல மக்கள் முன்னேற்றப் பேரவை, ஆதி தமிழர் கட்சி ஆகிய கட்சிகளின் மாவட்ட தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.





### சென்னை கிழக்கு மாவட்டம்

# வடசென்னை நாடாளுமன்ற தேர்தல்-2024

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் - பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம், வடசென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட **கொளத்தூர், திரு.வி.க.நகர் சட்டமன்ற** தொகுதிகளில் இந்தியா கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர் **டாக்டர் கலாநிதி வீராசாமி** அவர்களை ஆதரித்து பகுதிவாரியாக நடைபெறும் செயல்வீரர்கள் கூட்டம் விவரம்:

**கொளத்தூர் – திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி**

| நாள் மற்றும் நேரம் | பகுதி | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 25.03.2024 திங்கட்கிழமை மாலை 5 மணி | கொளத்தூர் மேற்கு பகுதி | சேந்தையன் மஹால் ரெட்டிரி 200 அடி ரோடு | எ.நாகராசன், எம்.சி. கொளத்தூர் மேற்குபகுதி செயலாளர் |
| 25.03.2024 திங்கட்கிழமை மாலை 6 மணி | திரு.வி.க.நகர் வடக்கு பகுதி | கீழாரால் கம்மவார் மாளிகை, 83/62, நெல்வயல் சாலை, பெரம்பூர், சென்னை-11. | செ.தமிழ்வேந்தன் திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர் |
| 26.03.2024 செவ்வாய்கிழமை மாலை 5 மணி | கொளத்தூர் கிழக்கு பகுதி | எவர்வின் பள்ளி வளாகம் S2 தியேட்டர் எதிரில் | ஐ.சி.எப்.வ.முரளிதரன் கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் |
| 26.03.2024 செவ்வாய்கிழமை மாலை 6 மணி | திரு.வி.க.நகர் தெற்கு பகுதி | எண்.29/4, குக்ஸ்ரோடு, சென்னை-12 | எம்.சாமிக்கண்ணு, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி செயலாளர் |

மேற்கண்ட தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் செயல்வீரர்கள் கூட்டத்தில் இந்தியா கூட்டணி கட்சிகளான திமுக, காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மக்கள் நீதி மையம், திராவிடர் கழகம், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை, ஆம் ஆத்மி ஆகிய கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள்/தலைவர்கள், பகுதி செயலாளர்கள்/தலைவர்கள், வட்டசெயலாளர்கள்/தலைவர்கள், BLA2க்கள், BLCக்கள், செயல் வீரர்கள், முன்னனியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**

செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



தருமபுரி நாடாளுமன்றத் தொகுதியில் இந்தியா கூட்டணி கட்சிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், இந்தியா கூட்டணி தி.மு.க. வேட்பாளர் ஆ.மணி,ஐ.டிவிங் மாநில துணை செயலாளர் டாக்டர்.ஏ.கே.தருண் மற்றும் திராவிடர் கழகம்,காங்கிரஸ்,விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் வாழப்பாடியில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதனையடுத்து கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மலையரசனை அறிமுகம் செய்து வைத்து பிரச்சாரம் மேற்கொண்டனர். இதில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் டி.எம். செல்வகணபதி, ரிஷிவந்தியம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ, உதயசூரியன் எம்.எல்.ஏ, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர , பேரூர் நிர்வாகிகள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொண்டனர்.

கழக வேட்பாளர் டி.ஆர்.பாலுவை ஆதரித்து

# அம்பத்தூர் 85வது வட்டம் சார்பில் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை! தலைமை: த.கண்ணபிரான்! ஜோசப் சாமுவேல் முன்னிலை!

சென்னை, மார்ச் 24-

அம்பத்தூர் வடக்கு பகுதி வார்டு 85 சார்பில் வட்ட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பாக நிலை முகவர்களின் (BLA2) ஆலோசனைக் கூட்டம் 21.03.2024 வியாழக்கிழமை மாலை 7.00 மணியளவில் CTH சாலை அமைந்துள்ள BSV திருமண மண்டபத்தில் 85வது வட்ட கழக செயலாளர் த.கண்ணபிரான் தலைமையில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப்சாமுவேல் முன்னிலையில், இந்து சமய அறநிலையத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் மற்றும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், த.செ.கு. உறுப்பினர் அம்பத்தூர் 7வது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும்

மரு.அணி.அமை ஜி.சாந்தகுமாரி, அம்பத்தூர் வடக்குப் பகுதி கழக நிர்வாகிகள் க.முரளிபாபு, அ.செல்வம், மற்றும் 85-வது வட்ட கழக கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள்,

தொகுதி பாகநிலை ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

அம்பத்தூர் வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி எஸ்.பி.ஹரிகிருஷ்ணன் நன்றியுரை வழங்கினார்.

லெட்டர் பேடு கட்சிகளை கூட்டணி வைத்துக் கொண்டு

# பா.ஜ.க. தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றுகிறது!

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி. - எஸ்.டி. பிரிவு! மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் அறிக்கை!

சென்னை, மார்ச் 24 -

"லெட்டர்பேடு கட்சிகளைக் கூட்டணி வைத்துக் கொண்டு பா.ஜ.க. , தமிழ் நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறது" என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி எஸ்.சி. - எஸ்.டி. பிரிவுத் தலைவர் எம்.பி. ரஞ்சன் குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்சி.,எஸ்டி., பிரிவு மாநில தலைவர் எம்.பி.ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

பொன்முடிக்கு அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து வைக்க முடியாது என்று திமிராக மறுதலித்த ஆளுநர் ரவியின் தலையில் ஓங்கிக் குட்டு வைத்து ஓரமாக உட்கார வைத்திருக்கிறது உச்ச நீதிமன்றம். தி.மு.க. அரசு பொறுப்பேற்றதிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கில் ஆளுநர் ரவியை நியமித்து தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க.

ஆளுநர் அடிக்கும் ஒவ்வொரு பந்தையும் பிடித்து அவுட்டாக்கிக் கொண்டிருக்கிறார் திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பதவிப் பிரமாணம் விவகாரத்தில் முதலமைச்சர் சிக்சரே அடித்துவிட்டார். எத்தனை முறை 'க்ளீன் போல்டு' ஆனாலும் ஆளுநருக்குள் இருக்கும் சனாதன வெறி எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறது. இனியாவது திருந்துவாரா? என்றால் அதற்குச் சாத்தியமில்லை என்றே சொல்ல வேண்டும்.



ஆளுநரை வைத்து தமிழ்நாடு அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக பா.ஜ.க. நடத்திய போர் விரைவில் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. தென்மாநிலங்களில் ஏற்கெனவே துடைத்தெடுக்கப்பட்ட பா.ஜ.க., வட மாநிலங்களிலும் தேய்ந்து கொண்டிருக்கிறது. மொத்தமாகவே 150 தொகுதிகளை அக்கட்சி தாண்டாது என்பதே உண்மை நிலவரமாக உள்ளது. இதுவரை இல்லாத அளவுக்கு வடமாநிலங்களில் குறிப்பாக உத்தரப்பிரதேசம், பீகார், ஜார்கண்ட், ஹரியானா ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க.வுக்கு எதிராக இளைஞர்களும் பெண்களும் கிளர்ந்து எழுந்திருக்கிறார்கள்.

இதனால் மோடியிலிருந்து பா.ஜ.க.வின் அனைத்து நிர்வாகிகளுக்கும் பதற்றம் பற்றிக் கொண்டிருக்கிறது. அதனால் ஏற்பட்டுள்ள பயம் அவர்களின் கண்களிலும் நடவடிக்கைகளிலும் தெரிகிறது.

தமிழ்நாட்டுக்கும் தமிழ் நாட்டு மக்களுக்கும் செய்த நன்மை என்று ஒன்றையாவது பா.ஜ.க.வால் சொல்ல முடியுமா? துரோகம் ஒன்றையே செய்துவிட்டு இன்றைக்கு வாக்கு வங்கி அதிகரித்தது போன்ற பொய் தோற்றத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள். இது கானல் நீர் என்பது தேர்தலுக்குப் பிறகு தெரியும்.

50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் காலூன்ற பா.ஜ.க. போராடிக் கொண்டிருக்கிறது. மண்ணைக் கவ்வியது தான் மிச்சம். இன்றைக்கு லெட்டர் பேடு கட்சிகளைக் கூட்டணியில் வைத்துக் கொண்டு பிரம்மாண்ட கூட்டணி போன்று கட்டமைத்து ஏமாற்றப் பார்க்கிறார்கள்.

கடந்த 3 ஆண்டுகளாக எவ்வித குறையும் இல்லாமல் மக்களைப் பார்த்துக் கொள்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து, மாதந்தோறும் கலைஞர் உரிமைத் தொகை ரூ.1000, புதுமைப் பெண் திட்டத்தில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 கல்வி உதவித் தொகை என முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார் முதலமைச்சர்.

வடமாநிலங்களில் இனி பிழைப்பு நடக்காது என்று முடிவு செய்த மோடி, தமிழ்நாட்டுக்கு தொடர்ந்து வரத் தொடங்கியிருக்கிறார். தி.மு.க. அரசுக்கு எதிராக நாலாந்தர பேச்சாளர் போல் பேசத் தொடங்கியிருக்கிறார். மோடியின் கண்களில் பயத்தை ஏற்படுத்திவிட்டார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். இதுவே இந்தியா கூட்டணிக்குக் கிடைத்துள்ள முதல் வெற்றி.

அடுத்ததாக, ஆளுநர் மாளிகையிலிருந்து தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கி விட்டேன் என்று திருச்சியில் நடந்த தேர்தல் பரப்புரையில் குறிப்பிட்டிருக்கிறார் முதலமைச்சர். தேர்தல் பரப்புரை மட்டுமல்ல...வெற்றிப் பயணத்தையும் அங்கிருந்து தொடங்கியிருக்கிறார் முதலமைச்சர். இது இந்தியா கூட்டணிக்கு கிடைத்த இரண்டாவது வெற்றி.

அணையப்போகிற விளக்கு பா.ஜ.க. அதனால் தான் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறது. பா.ஜ.க. என்ற நாசகார விளக்கு அணையும்போது, மக்கள் ஒளிமயமான வாழ்க்கையைப் பார்ப்பார்கள். அதற்கேற்றாற்போல், தி.மு.க.வும் காங்கிரசும் தேர்தல் வாக்குறுதியை முன் வைத்துள்ளன. சொல்வதைச் செய்வதும்...செய்வதைச் சொல்வதும் தான் தி.மு.க.வின் தாரக மந்திரம். அந்த தாரக மந்திரம் விரைவில் நாடு முழுவதும் ஒலித்து சமூக நீதி ஆட்சி மலரும்.

இவ்வாறு எம்.பி.ரஞ்சன் குமார் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

கழக வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து

# மயிலை மேற்குப் பகுதியில் தேர்தல் பணிமனை!

## மயிலை த.வேலு - கே.எஸ்.ரவிச்சந்திரன் - நந்தனம் கி.மதி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 24 -

தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் மயிலை மேற்கு பகுதியில் பகுதி செயலாளர் நந்தனம் மதி தலைமையில், பகுதி அவை தலைவர் ஜி.ஆர். ராஜேந்திரன் பகுதி துணை செயலாளர்கள் அசோக்குமார், வா. பாக்கியதாஸ், அகல்யா விசுவநாதன் , பகுதி பொருளாளர் ஜி.முருகையன் ஆகியோரின் முன்னிலையில் வட்ட கழக செயலாளர்கள் எஸ் ஆர் ராஜா, சுரேஷ், டி ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, அ.நாகராஜன், மூ.இ.ஏழுமலை, மு. ராஜேந்திரன் ஆகியோரின் வரவேற்பில் தென் சென்னை நாடாளுமன்ற தேர்தல் பணிமனை இன்று (24-03-2024 ஞாயிறு) காலை10:00 மணியளவில் எண்.90, ஆழ்வார்பேட்டை தெரு தேனாம்பேட்டையில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர், மயிலை த.வேலு எம்.எல்.ஏ. திறந்து வைக்க உள்ளார். இதில் மயிலை சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்

எனவே இந்நிகழ்விற்கு இந்தியா கூட்டணி நிர்வாகிகள் மாநில, மாவட்ட பகுதி, வட்ட, நிர்வாகிகளும் மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத்தின் மூத்த முன்னோடிகள் BLA 2 மற்றும் BLC அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கலாநிதி வீராசாமியை ஆதரித்து, ஆர்.டி.சேகர் தலைமை, முன்னிலை - க.ஜெயராமன் - ஏ.சரவணன், வரவேற்புரை - அ.முருகன்!

# பெரம்பூர் தொகுதி சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரை! க.ஜெயராமன் - அ.முருகன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 24-

சென்னை வடக்கு மாவட்டம், நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (24.03.2024, ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் எண்.68, எத்திராஜ் சாமி சாலை, எம்.ஆர். நகரில் அமைந்துள்ள பிரணிதா பேலஸில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி. சேகர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். பகுதி செயலாளர் க.ஜெயராமன், தொகுதி பொறுப்பாளர் ஏ. சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வரவேற்புரை பகுதி செயலாளர் அ.முருகன், மற்றும் நிர்வாகிகள் மு.சாகுல் அமீது. வி.வேதா ஜோதி மணி, வி.எஸ்.பிரபு, அ. ஜீயாவுதீன், ஏ.செந்தூர் பாண்டியன், எம்.லதா, க. பாபு, த.ஆறுமுகம், ஆர். எஸ்.மனோகரன், ஜி.மாரி முத்து, கேபிள்.கி.தினகரன், வி.முருகன், கே.வி.ராஜன், என்.கார்த்தீபன், மு.உமாபதி, இரா.அரிதாஸ், கே.ஈ. செந் தமிழரசு, சி.எஸ்.இரவி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக அமைப்பு செயலாளர் ஆலந்தூர். ஆர்.எஸ்.பாரதி, சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் இரா. கருணாநிதி, இரா.நரேந்திரன், ஜெ.டில்லிபாபு, எல். சுந்தர்ராஜன், டி.கே.சண்முகம், டி.கே.வெங்கடேசன், சு.ஜீவன், நா.உஷாராணி, கமுதி.சம்சுதீன், எம்.மொய்தீன், வி.உதயக்குமார், தளபதி பாண்டியன், எஸ்.ஆர். கமலகண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்செல்வன், டி.கமலகண்ணன், பா.மதிவாணன், க.அமுல், ஏ.ஆர். ஆர்.மலைச்சாமி, சர்ப ஜெயாதாஸ், க.சர்மிளா காந்தி, கோ.கோபிநாத், சி. ஆனந்தி, ஜி.ரஜினிசெல்வம், டி.ஏ.பீர்முகமது, டி.கணபதி, ஏ.விஜயகுமார், கோட்டி. சுரேஷ், ந.பாஸ்கர், கல்தூண் ரவி, ஏ.கமுருதீன், பசீர் அகமது.

மாவட்ட பிரதிநிதிகள்: பி.சண்முகம், கி.ராஜி, நா. வீரமுத்து, நா.திருமலை, ச.சச்சினாந்தம், எஸ் செபாஸ்டின், எம்.மனோகரன், இரா.முரளிதரன், கு. பரத், எஸ்.டி.சேகர்வர்மா, என்.நந்தகோபால், எஸ். அருண்சக்கரவர்த்தி, எம்.சரவணன், இ.சையத் அலி கான், எஸ்.கோவர்த்தனன், மாசிமுருகன்,

அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்: கோ.சதீஷ், பி.பிரகாஷ், வெ.இன்பரசன், எம்ஆர்டி.அப்துல்ரகுமான்;, ஓ.கலையரசன், எஸ்.டி.சண்முகம், வை.கௌதமன், சி. சதிஷ், இரா.ரவிசங்கர், நி. எழிலரசன், ஜி.பி.மோகன் பாபு, சி.சேனாதிபதி, எஸ். கார்த்திகேயன், ஈ.மணிகண்டன், மு.க.முனிசிவா மேகலா திருமலை, சி.ஏழுமலை, ச.வேணு, மீன். பி.சுரேஷ், எஸ்.மோகன் ராஜ், எம்.கே.குணசேகரன், எம்.கௌதமி, ஜெ.பாபு, முதுதுராமலிங்கம், க.ஜெயராஜ், பி.ஆனந்தி, கே.ஆனந்தன், பி.தினேஷ், கோ. விஜய், எஸ்.ஆர்.கணேசன், ஏ.அமலநாதன், எம்.பூங்கோதை, டி.வளன்ராஜ் நா. நடராஜ், கே.சேதுராமன், ஏ.தினேஷ், ஜெ.தினேஷ் என்.டி.சேகர், ஆர்.டி.கார்த்திக், எம்.எஸ்.தீபக், எஸ். சதீஸ்வரி, பி.சீனிவாசன், ஆர்.சோலை யம்மாள், சி. பாலமுருகன், எம்.ராமசாமி, ஏ.பாஸ்கர், ஈ.ரமேஷ், கே.ரத்தினவேல், டி.அசோக் ராஜ், ஏ.இந்திரா, ஏ.தேவ அன்பு, வேதா.மோகன் ராஜ், வி.அமுல்ராஜ், டி. மாணிவாசகம், என்.சிவகுமார், ஏ.சாகுல்ஹமீது, எம். பிரேம்குமார், கே.ஆர். பிரபு, எஸ்.மகிமைதாஸ், கோமதி பொற்செழியன், எஸ்.ஆர். ஜெயக்குமார், எம்.ஆனந்தன் மற்றும் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் தோழமை கட்சிகளின் பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

பகுதி துணை செயலாளர்கள் எஸ்.சாக்ரடீஸ், இரா.லீலாவேலு ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

இவ்வாறு பகுதி செயலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு

# வேளச்சேரி மேற்கு - கிழக்கு பகுதி கழக செயல்வீர்ர்கள் கூட்டம்!

## பகுதி செயலாளர்கள் அரிமா சு.சேகர் - துரை கபிலன் அறிவிப்பு

சென்னை, மார்ச் 24 -

வேளச்சேரி கிழக்கு - மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - வேட்பாளர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர். இது குறித்து வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர், கிழக்குப் பகுதிச் செயலாளர் துரை கபிலன் ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

வேளச்சேரி மேற்கு மற்றும் கிழக்கு பகுதி கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று (24.03.2024 ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணிக்கு வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள என்.எம்.எஸ் திருமண மண்டபத்தில் (வேளச்சேரி மேற்கு பகுதி கழக அலுவலகம் அருகில்) மேற்குப் பகுதி கழக அவைத் தலைவர் சி.பழனி கிழக்குப் பகுதி அவைத் தலைவர் அருணா வேலாயுதம் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் - நாடாளுமன்ற வேட்பாளர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் , தேர்தல் பொறுப்பாளர் பழ.செல்வகுமார் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகின்றனர்.

இக்கூட்டத்திற்கு வேளச்சேரி மேற்கு மற்றும் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட துணை அமைப்பாளர்கள்,

பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறோம்.

பொருள்: வருகின்ற பாராளுமன்ற தேர்தல் பணி மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் அரிமா சு.சேகர் துரை கபிலன் ஆகியோர் தெரிவித்துள்ளர்.

வட்டச் செயலாளர் சை.மு.சேகர் முன்னிலையில்

# சைதை மேற்குப் பகுதி 139 அ வட்டக் கழகக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 24 -

சைதை மேற்குப் பகுதி 139 அ வட்டக்கிளை நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனை கூட்டம். 22.03.2024 மாலை. 7.00 மணியளவில் இடம்.47/137 மேற்கு ஜோன்ஸ் சாலை (ஆர். சுரேஷ் இல்ல மாடியில்) வட்ட அவைத் தலைவர் இ.வரதன். தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் சை.மு.சேகர் , வட்ட பாக ஒருங்கிணைப் பாளர்கள் வி.பி.ஜானகிராமன், எம். எஸ்.ஹரிபாபு ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்.10 வது மண்டலக் குழுத் தலைவர். எம். கிருஷ்ணமூர்த்தி நாடாளுமன்ற தேர்தல் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதியில் திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் இந்தியா கூட்டணியின் வேட்பாளராக போட்டியிடும் முனைவர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியனை ஆதரித்து ஆற்ற வேண்டிய களப் பணிகள் குறித்தும் இல்லந்தோறும் சென்று வாக்காளர்களை காலை மாலை இருவேளையும் சந்தித்து இரண்டரை ஆண்டுகால தலைவர் தளபதி அவர்களின் சாதனைகளைக் கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குசேகரிக்க வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் சைதை.ஆர். ரமேஷ், மா.ஏழுமலை, சுமதி தீனதயாளன், பூபதி. வெங்கடேசன், வெ.புருசோத்தமன், என்.தீனதயாளன், ப.நரேஷ், ஜி.ஏழுமலை, கொடி.து. சுரேஷ்பாபு, டி.கோபாலகிருஷ்ணன், எஸ் முகமது அலி, யமஹா.ராஜேஷ், சார்ப்.சரவணன், கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என்.ரமேஷ், எஸ்.கண்ணன், ஆர்.பெருமாள், ஆர். தாமோதரன், ப.சிவகுமார், எஸ்.சையத்ஜலால், மு. காத்தவராயன், வி.வெங்கடேசன், துளசி சந்திரசேகர், ஆட்டோ.சேகர், வி.ஆதிகேசவன், த.சேகர், தோட்டம். ஆர்.ஜவகர், ப.தினகரன், டைல்.ராதாகிருஷ்ணன், எஸ்.முருகன், ஆர்.கண்ணன், எம்.சுந்தரேசன், ஜோ.அந்தோணி, ஜெ.தமிழ்ச்செல்வன், டி.ஜானகிராமன், ப.மோகன் போட்டோ. ரவி, எஸ்.சந்தான கிருஷ்ணன், மோ.பிரபுராம் ஜி.சீனி வாசன், கே.வேலாயுதம், ஜெ.வெங்கடேஷ், தீ. உதயசூரியன், பச்சையப்பன் மற்றும் பலர் பங்கேற்றனர்.



கழக தலைமையிலான இந்தியா கூட்டணி இராமநாதபுரம் பாராளுமன்றம், அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி செயல்வீரர்கள் அறந்தாங்கி சந்தோஷ் திருமண மஹாலில் சட்டத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பன், சுற்றுச்சூழல்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் காதர்பாட்சா (எ) முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ ஆகியோர் கழக கூட்டணி கட்சி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வெற்றி வேட்பாளர் கே.நவாஸ்கனியை ஆதரித்து சிறப்புரையாற்றினார்கள். உடன் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் இராம.சுப்புராம், சி.ராமநாதன், துரை.மாணிக்கம், ஞான. இளங்கோவன், அபுதாஹீர், க.ராஜேந்திரன், இரா. ஆனந்த், வீரய்யா, உதயம் சண்முகம், ஆர்.ஆர்.கே. கலைமணி, வே.பொன்துரை, சக்தி ராமசாமி, பொன்.கணேசன், எஸ்.எம்.சீனியார், திமுக தலைமையிலான இந்தியா கூட்டணியின் தோழமை கட்சியின் மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர வட்ட, கிளை நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்,

## காவிரி டெல்டா பாசன விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பினர்

# முதல்வரைச் சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு !





**தஞ்சை, மார்ச் 24-**

**கே.வீ.இளங்கீரனை தலைவராக கொண்ட 'காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பினர்' தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து 'இந்தியா' கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர். தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (23.3.2024) காலை, தஞ்சாவூரில், "காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பை" சேர்ந்த**

1. கே.வீ.இளங்கீரன்,

தலைவர், காவிரி டெல்டா பாசன விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு

2. தனபதி, இந்திய விவசாயிகள் சங்கம், புதுக்கோட்டை

3. சங்கரையா, ஐக்கிய விவசாயிகள் சங்கம், சேலம் மாவட்டம்.

4. வாரணாசி ராஜேந்திரன், சிஃபா கரும்பு விவசாயிகள் சங்கம், அரியலூர்

5. பொன்னையன், தலைவர், தற்சார்பு விவசாயிகள் சங்கம், ஈரோடு.

6. வி. ஜீவகுமார், தலைவர், உழவர் மன்ற கூட்டமைப்பு, தஞ்சாவூர்

7. மணிகண்டன், தலைவர், மதுரை மாவட்டம், நஞ்சை புஞ்சை விவசாயிகள் சங்கம், மதுரை.



8. ஏ.கே.சுப்ரமணியம், தலைவர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு நலச் சங்கம், கோவை.

9. பொன்னுசாமி, தேசிய வங்கியில் கடன் பெற்றோர் நலச் சங்கம், ஈரோடு.

10. ரமேஷ், கல்லணை கால்வாய் பாதுகாப்பு விவசாயிகள் சங்கம், புதுக்கோட்டை.

11. தங்க தருமராஜன், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கம்.

12. சீதாராமன், தலைவர், உழவர் மன்ற கூட்டமைப்பு, விழுப்புரம்.

13. முஜீப், தமிழக விவசாயிகள் விழிப்புணர் சங்கம், நாகப்பட்டினம்.

14. குஞ்சிதபாதம், தலைவர், கடலூர் மாவட்ட உழவர் மன்ற கூட்டமைப்பு.

15. ராஜலட்சுமி, இராமநாதபுரம் மாவட்ட பெண்கள் விவசாயிகள் சங்கம்.

16. திருவேங்கட யாதவ், கிருதுமா நதி பாசன விவசாயிகள் சங்கம், மதுரை.

ஆகியோர் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.

இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, டி.ஆர்.பி.ராஜா, தஞ்சை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., தஞ்சை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நீலமேகம், தஞ்சை மேயர் சண்.இராமநாதன், தஞ்சை நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர் முரசொலி ஆகியோர் உடனிருந்தனர்.

அத்துடன், சமூக நீதிப் பேரவை, தமிழக நலிவுற்ற விவசாயிகள் சங்கம், தஞ்சாவூர் மாநகர காய்கனி விற்பனையாளர்கள் சங்கம், ஜன நாயக சமூக நல கூட்டமைப்பு, நம்மாழ்வார் இயற்கை விவசாயம் ஆகிய இயக்கங்கள், சங்கங்களைச் சேர்ந்தவர்கள் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

## நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரம்: இரண்டாம் நாள் சென்ற இடங்களில் எல்லாம்

# தஞ்சை மக்களின் நெஞ்சை அள்ளிய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் !

## நன்றி கூறிய விவசாயச் சங்கத்தினர் ! செல்ஃபி எடுத்து மகிழ்ந்த மக்கள் !

**தஞ்சை, மார்ச் 24-**

**நாடாளுமன்றத்திற்கான தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள். நேற்று காலை தஞ்சை மாநகரில் மக்களைச் சந்தித்து தஞ்சை நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் முரசொலி அவர்களுக்காக வாக்குச் சேகரித்தார்கள்.**

காலையில் தஞ்சை சத்யா விளையாட்டுத் திடலில் நடைபயிற்சி மேற்கொண்ட கழகத் தலைவர் அவர்கள் அங்கே பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த மக்களையும், மாணவர்களையும், சந்தித்தார். தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அங்கு கண்ட மக்கள், அவரைக் கண்டு மகிழ்ச்சி கொண்டனர். அவருடன் உரையாடும் பொழுது தாங்கள் மகளிருக்கு அளிக்கும் மாதம் ரூ.1000 உரிமைத்தொகை எங்களுடைய குடும்பச் செலவு முதல்கொண்டு அவசரச் செலவுக்குப் பயன்படுகிறது. மிக்க மகிழ்ச்சி என்றனர்.

கல்லூரி மாணவ, மாணவிகள் கழகத்தலைவர் அவர்களிடம் புதுமைப்பெண் திட்டத்தில் தங்களுக்கு மாதம் 1,000 ரூபாய் அளிப்பது, எங்களுக்குத் தன்னம்பிக்கை உணர்வை அளிக்கிறது என்றும், இனி, கல்லூரி மாணவர்களுக்கும் மாதம் 1,000 ரூபாய் வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை அறிவித்துள்ளது எங்களுக்கு மேலும் மகிழ்ச்சியை அளிக்கிறது என்றும் கூறி நன்றி தெரிவித்தனர்.

**தி.மு.க.விற்கு நிச்சயம் வாக்களிப்போமென பொதுமக்கள் உறுதி!**

சத்யா விளையாட்டுத் திடலில் நடைபயிற்சி மேற்கொள்ளும்போது, அங்குப் பயிற்சி மேற்கொண்டிருந்த இளைஞர்கள், மாணவ, மாணவியர், மகளிர் ஆண்கள் எல்லோரும் திரண்டுவந்து மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன், தலைவர் அவர்களுடன் கை குலுக்கிக் கொண்டும், செல்பி எடுத்தும் மகிழ்ச்சியில் திளைத்தனர். அப்போது அவர்களிடம் தஞ்சை நாடாளுமன்ற வேட்பாளர் முரசொலி அவர்களை அறிமுகப்படுத்தி அவருக்கு வாக்களிக்க வேண்டும் என வேண்டுகோள் வைத்தார்கள். அதைக் கேட்டு பொதுமக்களும் மகிழ்ச்சியோடு நிச்சயம் நாங்கள் வாக்களிப்போம் என்று உறுதி கூறினர்.

அதனைத் தொடர்ந்து, தஞ்சை நகர் காய்கறிச் சந்தைக்கு நடந்து சென்று காய்கறிக் கடைகளில் காய்களைக் கையில் எடுத்தபடியே விலை நிலவரம் கேட்டறிந்தார். காய்கறி விற்பனையாளர்கள் கழகத் தலைவர் அவர்களைப் பார்த்ததும் மகிழ்ச்சியில் நன்றாக விற்பனையாகிறது. உங்கள் ஆட்சியில் நாங்கள் எல்லோரும் நன்றாக இருக்கிறோம். நிச்சயமாகக் கழக வேட்பாளர் முரசொலிக்கு நாங்கள் வாக்களிப்போம், அவரை வெற்றிபெறச்செய்வோம் என்று உறுதி அளித்தனர்.

சில காய்கறிக் கடைக்காரர்கள், செவ்வாழைப்பழம் உள்ளிட்ட பல்வேறு பழங்களைக் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு மகிழ்ச்சியோடு வழங்கினார்கள். அவற்றைப் பெற்றுக் கொண்ட தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். சந்தைப் பகுதியை கடந்து சென்ற கழகத் தலைவர் அவர்கள் தேநீர் கடைக்குச் சென்று அங்குத் தேநீர் பருகி அங்கிருந்தவர்களிடமும் உரையாடி கழக வேட்பாளரை அறிமுகப்படுத்தி வாக்களிக்க வேண்டுமாறு கேட்டுக் கொண்டார். அவர்களும் உறுதியாக உதயசூரியனுக்கு வாக்களிப்போம், முரசொலி அவர்களை வெற்றிபெறச் செய்வோம். உங்களுக்கு என்றும் உறுதுணையாக இருப்போம் என்று கூறி மகிழ்ந்தார்கள்.

கழகத் தலைவர் தளபதி சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் திரண்டு, மகிழ்ந்து தலைவர் அவர்களுக்கு உற்சாகம் அளித்த காட்சிகளைக் கண்டபோது ஒரு சிந்தனை எண்ணத்தில் உதித்தது.

சில நாள்களுக்கு முன், கோவை மாநகருக்கு பா.ஜ.கட்சி தலைவர் நரேந்திர மோடி அவர்கள் வந்தபோது, பள்ளி மாணவர்களைத் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது என்று தேர்தல் ஆணையம் விதித்த கட்டுப்பாடுகளை மீறி, பள்ளி மாணவ மாணவிகளை எல்லாம் பல மணி நேரம் நிற்க வைத்து "ரோடு ஷோ" என்ற பெயரில் ஒரு நாடகம் நடத்தி, மக்களை ஏமாற்றும் வழியில் செயல்பட்டனர் பா.ஜ.க. கட்சியினர்.

அவர்களைப் போல் இல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி அவர்கள் மக்களோடு மக்களாகப் பழகி, விளையாட்டுத் திடலுக்கும், மக்கள் வியாபாரம் செய்யும் இடங்களுக்கும் சென்று அவர்களைச் சந்தித்து, அவர்களை மகிழச் செய்து, அவர்களிடம் வாக்குச் சேகரித்த காட்சிகள் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மக்கள் இயக்கம், அது மக்களால் வளர்க்கப்பட்ட இயக்கம், மக்கள் வெற்றி தேடித் தரும் இயக்கம் எண்ணும் வரலாற்றை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன.

**வெற்றிக்கு முன்னதாகவே கட்டியம் கூறுவது போலிருக்கிறது!**

திராவிட முன்னேற்றக் கழகம் அண்மையில் வெளியிட்டுள்ள நாடாளுமன்ற தேர்தல் அறிக்கையில் விவசாய விளை பொருள்களுக்கு அவற்றின் உற்பத்திச் செலவுகளுடன் 50 சதவிகிதம் கூடுதலாக சேர்த்து விலை நிர்ணயிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதற்கு 16 விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகள் கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்தனர்.

விவசாயிகள் சந்தித்த இந்த நிகழ்ச்சி நாடாளுமன்றத் தேர்தலில் கழகம் பெறவிருக்கும் வெற்றிக்கு முன்னதாகவே கட்டியம் கூறுவது போல் அமைந்திருந்தது.

செல்லும் இடங்களில் எல்லாம் மக்களின்ஆதரவைப் பெற்றுவரும் கழகத் தலைவரின் இரண்டாம் நாள் பயணம் இப்படித் தொடங்கியது. என்றும் எப்போதும் பொதுமக்கள் தங்கள் ஆதரவைக் கழகத் தலைவர் அவர்களுக்கு வழங்குவார்கள். உதயசூரியனுக்கும், கூட்டணிக் கட்சி வேட்பாளருக்கும் வழங்குவார்' என்பதை இந்தக் காட்சிகள் உறுதிபடுத்திக் கொண்டுள்ளன.

# கலைஞரும் நானும்

62



“அறிஞர்கள் அரசியல் தலைவர்களாக, ஆட்சியாளர்களாக மாறியது வரலாற்றில் அரிய நிகழ்வு. நேரு, இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், பேரறிஞர் அண்ணா வரிசையில் முத்தமிழறிஞர் கலைஞரை வைத்துப் பார்ப்பதில் என்றைக்கும் உள்ளார்ந்த பெருமை கொள்வேன்” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் பேராசிரியர் அருணன்.

## “அந்தக் கட்சி இல்லாததால் இந்தக் கட்சி...!”

பேராசிரியர் அருணன்

“அரசியல் பயில நினைப்போர் முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகள், பேச்சுகளைக் கேட்காமல் தங்களை வளர்த்துக் கொள்ள முடியாது. நானும் அப்படித்தான். கலைஞர் அவர்களை முதன்முதலில் ‘தீக்கதிர்’ நாளிதழ் வேலையாக சந்தித்தேன். கொடை ரோடு ரயில் நிலையத்தில் காத்திருப்பு அறையில் இருந்தார். ரயில் மாறுவதற்காகக் காத்திருந்த நேரத்தில், ‘தீக்கதிர்’ சார்பாக நேர்காணல் செய்வதற்காக வந்திருக்கிறேன் எனக் கூறினேன். மிகவும் மகிழ்ச்சியாக வரவேற்றவர், “நீங்களெல்லாம் ஏன் கூட்டத்தில் வந்து பேட்டி கேட்குறீங்க. முதலிலேயே திட்டமிட்டு நேரம் வாங்கியிருந்தால், தனியாக விரிவாகப் பேசியிருக்கலாமே” என அன்பை வெளிப்படுத்தினார்.

‘தீக்கதிர்’ நாளிதழ் மீதும், கம்யூனிஸ்ட் கட்சியினர் மீதும் அவர் கொண்டிருந்த நன்மதிப்பினை அன்று நான் நேரில் அறிந்தேன்.

### பதிலுக்குப் பதில்

‘‘தீக்கதிர்’ நாளிதழில் செய்திகள், கட்டுரைகளைத் தொடர்ந்து வாசிப்பவர் கலைஞர் என மூத்தத் தோழர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். அதையும் என் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். 1974-ஆம் ஆண்டிலிருந்து கட்சிப் பணிகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தேன்.

அப்போது தி.மு.க.வும், மார்க்சிஸ்ட் கட்சியும் தோழமைக் கட்சிகள். அதன் பின்னர் ஊடலும் நடந்தது. ஆனால், தீக்கதிரில் வரும் கட்டுரைகளை வாசிப்பதிலும், அதற்கு மறுப்புத் தெரிவிப்பதிலும் கலைஞர் கொண்டிருந்த அரசியல் பண்பு, மாண்பின் உச்சம் என்பேன்.

மார்க்சிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு குறித்து ‘முரசொலி’யில் விமர்சித்து எழுதுவார். அதற்கு எங்கள் தலைவர்கள் பதில் எழுதுவார்கள். என்னையும் கட்டுரை எழுதச் சொல்லி ஊக்குவிப்பார்கள். அதே நேரத்தில் “கட்டுரையைப் படித்துவிட்டு, கலைஞர் பதில் எழுதுவார், விமர்சிப்பார். அதையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கவும்” என வேடிக்கையாகக் குறிப்பிடுவர். உண்மையில் அப்படித்தான் நடக்கும். எனது கட்டுரைகளைக் குறிப்பிட்டும் ‘முரசொலி’யில் மறுப்பும் விளக்கமும் வரும். அப்படி வருகையில் எனக்கு உற்சாகமாக இருக்கும்.

முக்கியமான அரசியல் தலைவரே என் கட்டுரைகளை வாசித்துவிட்டு, மறுப்பு எழுதுகையில், அதைவிட என் எழுத்துக்கு வேறு என்ன பாராட்டு இருக்க முடியும்? எழுதுவது இளைஞர், அவருக்கு ஏன் பதில் சொல்ல வேண்டும் என்றெல்லாம் யோசிக்க மாட்டார். சொல்லியிருக்கும் கருத்து என்ன என்பதுதான் கலைஞரின் பார்வையாக இருக்கும். நானும் உற்சாகமாக, அவர் பதிலுக்கு மறுப்பு பதில் எழுதுவேன். அவர்மீது உள்ளார்ந்த பிரியத்துக்கு இவையெல்லாம் ஒரு காரணம்.

### எதற்கு மறுக்க வேண்டும் ?

‘மார்க்சியப் பார்வையில் திராவிட இயக்கம்’ என்கிற தொடர் கட்டுரையை தீக்கதிரில் எழுதினேன். அந்தக் கட்டுரையோடு முரண்பட்ட எங்கள் கட்சித் தலைவர் பி.ராமமூர்த்தி, எனது கட்டுரைக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில், அவரும் தீக்கதிரிலேயே எழுதினார். இவை இரண்டையும் வாசித்தவர் கலைஞர். ‘தீக்கதிர்’ கட்டுரைக்கு ‘முரசொலி’யில் மறுப்பு எழுதலாம் எனச் சிலர் கலைஞரிடம் கூறியுள்ளனர். அதற்கு அவர், “அவங்க பார்வையில் வரலாற்றைப் பார்க்கின்றனர். வரட்டும், அதற்கு எதற்கு மறுப்பு” என தவிர்த்துள்ளார். இந்தத் தகவலை மூத்தத் தலைவர்கள் என்னிடம் கூறி இருக்கின்றனர்.



இப்படி பதிலுக்குப் பதில், கருத்துச் சண்டை செய்வது கலைஞருக்கு மிகவும் பிடிக்கும். எதிர்க் கருத்து அல்ல, மாற்றுக் கருத்து, மாற்றுச் சிந்தனை எனில், அதை உள்வாங்குவது, சரியானது என்றால், அதை ஏற்றுக் கொள்வது என்பதில் கலைஞர் தயக்கம் காட்டியதே இல்லை.

> “எந்த முன் முடிவுகளும் இல்லாமல், விரிந்த மனத்துடன் ஒரு விஷயத்தை அணுகும் அறிஞராக கலைஞர் இருந்தார். நம் காலத்தின் மெய் அறிஞர் கலைஞர்!”

### மயிலிறகு வருடல்

‘தமிழகத்தில் சமூகச் சீர்திருத்தம் - இரு நூற்றாண்டு வரலாறு’ என்கிற நூலை எழுதினேன். திராவிட இயக்கத்துக்கு முன்னர், 19-ஆம் நூற்றாண்டு சீர்திருத்த இயக்கங்கள் வரை அதில் பேசி இருப்பேன். திராவிட இயக்கம் மீது விமர்சனமும் அந்த நூலில் இடம் பெற்றது. அந்த நூல் வெளியீட்டு விழா, அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் தலைமையில் நடைபெற்றது. மேடையில் சங்கரய்யா, நல்லக்கண்ணு, பீட்டர் அல்போன்ஸ் உள்ளிட்ட தலைவர்கள் இருந்தனர்.

கலைஞரின் சிறப்புரைக்கு முன்பே ஏற்புரையாற்றிய நான், எனது உரையில், “கலைஞர் அவர்கள் இந்த நூலைப் பாராட்டிப் பேசினால், என்னை மயிலிறகால் தடவிக் கொடுத்து பாராட்டியதுபோல எடுத்துக் கொள்வேன். விமர்சனம் செய்தால், அதே மயிலிறகால் தட்டியதுபோல எடுத்துக் கொள்வேனே தவிர, தவறாக எடுத்துக் கொள்ள மாட்டேன்” என்றேன்.

இறுதியாக உரையாற்றிய கலைஞர், என்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே “இந்த நூலினை நான் முழுவதுமாகப் படிக்காமல், சும்மாவாகிலும் புரட்டிப் பார்த்திருப்பேன் என நினைத்துக் கொண்டு பேசி இருக்கிறார். ஆனால், ஐநூறு பக்கங்களுக்கு மேல் கொண்ட நூலினை முழுவதுமாக வாசித்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்” என அவர் குறிப்பெடுத்ததை மேடையிலேயே காண்பித்தார். எல்லோருக்குமே ஆச்சர்யம். ஏனென்றால், முதலமைச்சராக இருக்கும் சூழலிலும் பெரிய நூலினை வாசித்துக் குறிப்பெடுப்பது சாதாரணமானதல்ல.

அன்று அவர் ஆற்றிய உரை 50 பக்கங்களுக்கு மேல் வரும், அடுத்த நாள் ‘முரசொலி’யில் வெளிவந்த அந்த உரையைத் தொகுத்து அந்த நூலின் அடுத்த பதிப்பில் சேர்த்துக் கொண்டேன். அவர் சிறந்த அரசியல்வாதி, ஆட்சி நிர்வாகி என்பது மட்டுமல்ல; சிறந்த வரலாற்று அறிஞராகவும் கொண்டாடப்பட வேண்டியவர்.

அந்த மேடையிலேயே, என் எழுத்துகளைத் தொடர்ந்து வாசித்து வருவதையும், பதிலுக்குப் பதில் எழுதப்பட்ட கட்டுரைகளையும் நினைவுகூர்ந்தார். குறிப்பாக, அப்போது அவர் கூறிய ஒரு வாக்கியம் கலைஞர் அவர்களின் ஆயுட்கால வாக்குமூலமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

அந்த நூலில், “பெரியாரும் சிங்காரவேலரும் உருவாக்கிய சுயமரியாதை சமதர்ம கட்சி இருந்திருந்தால், தி.மு.க.வுக்கான தேவை அல்லது வாய்ப்பு இருந்திருக்காது” என எழுதி இருப்பேன். அதற்குப் பதில் அளித்த கலைஞர், “ஆமாம், பெரியாரும் சிங்காரவேலரும் உருவாக்கிய கட்சி இருந்திருந்தால், நானும், சங்கரய்யா, நல்லக்கண்ணு பக்கத்தில்தான் அமர்ந்திருப்பேன். அது இல்லை என்பதால்தான், அண்ணாவுடன் சேர்ந்தேன். நீங்களே இல்லை எனக் கூறிய பின்னர், இல்லாத கட்சியில் எப்படிச் சேர முடியும்? இருக்கும் கட்சியில்தானே நான் சேர முடியும்” என அவர் கூறியபோது, மார்க்சிஸ்ட் தலைவர்கள் உள்பட மொத்த அரங்கமும் அவர் பதிலில் மயங்கியது என்றுதான் சொல்ல வேண்டும். என் எழுத்துகளுக்கு அவர் அளித்த மிக முக்கிய அங்கீகாரம் அந்த நிகழ்வு.

### களப்பிரர் காலம்

‘**களப்பிரர் காலம் இருண்ட காலம் அல்ல**’ என்கிற நூல் எழுதினேன். இருண்ட காலம் எனச் சொல்வது தவறு, அவர்கள் காலத்தில்தான் பிராமணர்களின் நிலங்களை கைப்பற்றியது, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் வந்துள்ளதாக வரலாற்றாசிரியர்கள் சொல்கின்றனர். இத்தனை ஒளிவிளக்குகள் கொண்ட காலம், இருண்ட காலம் அல்ல என அந்த நூல் விளக்கும். அந்த நூலினை வாசித்த கலைஞர், அது தொடர்பாக தன்னை சந்திக்க வந்த பீட்டர் அல்போன்ஸ் அவர்களிடம் பேசி இருக்கிறார்.

இப்படியான வாசிப்பும் செயல்பாடுகளும் மெய்யான அறிஞர்களுக்கு இருக்கும் அடையாளங்கள் என்பேன். எந்த முன் முடிவுகளும் இல்லாமல், விரிந்த மனத்துடன் ஒரு விஷயத்தை அணுகும் அறிஞராக கலைஞர் இருந்தார். நம் காலத்தின் மெய் அறிஞர் கலைஞர்!”

....பகிர்வார்கள்

### கலால் வரி கைதும் கள்ளமும்!

ரெய்டுகள், கைதுகள் மூலம் எதிர்க்கட்சிகள் மீது ஊழல் பிம்பத்தைக் கட்டமைக்க பா.ஜ.க. முயல்கிறது. அதேநேரம் நேரடியாகவும் மறைமுகமாகவும் பா.ஜ.க. செய்யும் ஊழல்களும் முறைகேடுகளும் தொடர்ந்து அம்பலப்பட்டு வருகின்றன. அப்படி சமீபத்தில் அம்பலமானது, பா.ஜ.க.வின் தேர்தல் பத்திர ஊழல்.

எதிர்க்கட்சிகளை அச்சுறுத்த, பா.ஜ.க. பயன்படுத்தும் விசாரணை அமைப்புகளை, இன்னொருபுறம் வணிக நிறுவனங்களை மிரட்டி ‘நன்கொடை’ பெறுவதற்கும் பயன்படுத்திவருவது வெட்ட வெளிச்சமானது. அப்படி சமீபத்தில் ஒரு முறைகேடு வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது.

டெல்லி மதுபானக் கொள்கையில் ‘ஆம் ஆத்மி’ அரசு முறைகேடு செய்ததாகச் சொல்லி, டெல்லி துணை முதல்வர் சிசோடியாவும், அமைச்சர் சத்யேந்திர குமார் ஜெயினும் கைது செய்யப்பட்டனர். அதன் உச்சமாக, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இதே மதுபான கலால் வரிக் கொள்கை முறைகேடு வழக்கில், ஹைதராபாத்தைச் சேர்ந்த அரபிந்தோ பார்மா லிமிடெட் என்ற மருந்து நிறுவனத்தின் நிர்வாகியான சரத் சந்திரரெட்டி என்பவர் கடந்த 2022-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ஆம் தேதி அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்ட 4-வது நாளில் (நவம்பர் 15), இவரது நிறுவனம் பா.ஜ.க.வுக்கு 5 கோடி ரூபாயை தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடையாக வழங்கியுள்ளது தற்போது அம்பலமாகியுள்ளது. மேலும் 2023-இல், 25 கோடி ரூபாயை பா.ஜ.க.வுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. இவை, சந்திர ரெட்டி மதுபான கலால் வரிக் கொள்கை முறைகேட்டில் அப்ரூவராக மாறிய பின், சில மாத இடைவெளியில் நடந்துள்ளன.

ஒருபுறம் யோக்கியவான்களைப் போல் ஆம் ஆத்மி தலைவர்களைக் கைது செய்யும் பா.ஜ.க.தான், இன்னொருபுறம் அதே வழக்கின் மூலம் நன்கொடை ஆதாயத்தையும் பெற்றிருக்கிறது. கழன்றுவிழும் பா.ஜ.க.வின் நேர்மை முகமூடிகளின் எண்ணிக்கை, நாள்தோறும் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

### ஃப்ளாஷ்பேக்



பி.ஜி.அழகிரி



**வாய்ப்பும் வாழ்த்தும்!**

1998-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்கள் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மயிலாடுதுறை வழுவூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தளபதி அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த சமயத்தில், அவருக்குக் கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்துப் பெற்று புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

**-பி.ஜி.அழகிரி, ஒன்றிய துணை அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மயிலாடுதுறை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்

**மீண்டு வந்த இயல் இசை மன்றம்!**

1956-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை சங்கீத நாடக சங்கம் பல ஆண்டுகள் செயல்படாமல் இருந்தது. 1973-ஆம் ஆண்டு, கலைஞர் அதன் பெயரை ‘தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்’ என மாற்றி மீண்டும் செயல்பட வைத்தார். அந்த மன்றம் இயல், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம் ஆகியவற்றுக்கான கருத்தரங்குகளை நடத்துவதுடன், அதில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகளையும் வழங்கி வருகிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

427

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131